Reproachful, *adj.* நிந்தையான, ஏச்சான, இழிவுப்பேச்சுள்ள.
Reproachfully, *adv.* நிந்தையாய்.
Reprobate, *s.* செத்தரத்தமுள்ளவன், சுணைகெட்டவன், ஈனன், தள்ளுபடியானவன், இரத்தஞ்செத்தவன்.
Reprobate, *v. a.* தள்ளுபடியாக்கிறது, ஒருதீர்ப்பாய்த்தொலைத்துவிடுகிறது.
Reprobate, *adj.* கடைகெட்டமூளியான, கடைகேடான.
person, கடைகெட்டவன், மூளி.
Reprobation, *s.* சாபத்தீடு, ஆக்கினை.
Reproduction, *s.* புதிதாய்த்தோன்றச்செய்தல்.
Reproof, *s.* கண்டனை, கண்டிப்பு, முகத்துக்குமுன்னேகடிந்துகொள்ளல்.
Reprovable, *adj.* குற்றமுள்ள, குற்றஞ்சொல்லப்படத்தக்க.
Reprove, *v. a.* 1. *To blame, to censure,* குற்றஞ்சாட்டுகிறது.
2. *To charge to the face with a fault, to check,* மூஞ்சியிலேயடித்துச்சொல்லுகிறது, கண்டிக்கிறது.
3. *To refute, to disprove,* தப்பென்றெண்பிக்கிறது.
4. *To blame for, with, of,* குற்றஞ்சாட்டுகிறது
Reptile, *s.* புழு, பூச்சி, ஊர்கிறசெந்து, ஊர்வனசெந்து.
Republic, *s.* குடியரசு, சனசமுதாயங்கூடியாளுகிறதுரைத்தனம்.
Republican, *s.* குடியரசபிமானி.
Republican, *adj.* குடியரசான.
Republicanism, *s.* குடியரசாட்சி.
Republication, *s.* இரண்டாம்பதிப்பு, மறுபடிபதித்தது.
Republish, *v. a.* இரண்டாந்தரம்பிரசித்தப்படுத்துகிறது.

Repudiate, *v. a.* தள்ளுபடிபண்ணுகிறது, ஒழித்துவிடுகிறது.
Repudiation, *s.* தள்ளுபடிச்சீட்டு.
Repugnance, *s.* 1. *Inconsistency, contrariety,* ஒவ்வாமை, விரோதப்பாடு.
2. *Reluctance, resistance,* எதிர்ப்பு, எதிருதை, விரோதிப்பு.
3. *Struggle of opposite passions,* எதிரிபோராட்டம், மல்லுக்கட்டு.
4. *Aversion, unwillingness,* மனமில்லாமை, வெறுப்பு.
Repugnant, *adj.* எதிரான, விரோதமான.
to feel repugnant, வெறுபபடைகிறது, வெறுப்புத்தட்டுகிறது.
to, ஒன்றின்மேல்வெறுப்பு.
Repulse, *s.* கலேக்கப்படுகை, துரத்தப்படல், தட்டிப்போடுதல்.
Repulse, *v. a.* அடித்துத்துரத்துகிறது, கலேத்துவிடுகிறது.
Repulsion, *s.* தள்ளுபடி, விலக்கப்படுகை.
Repurchase, *v. a.* மறுபடியும்வாங்குகிறது, திரும்பவிலேக்குக்கொள்ளுகிறது.
Reputable, *adj.* பேர்கீர்த்தியான.
person, கண்ணியவான், பெயர்போனவன்.
Reputably, *adv.* நற்கீர்த்தியாய்.
Reputation, *s.* புகழ்ச்சி, பேர்கீர்த்தி, யோக்கியாயோக்கியம், எண்ணம்.
Repute, *s.* பிரபலியம், கீர்த்தி, யசசு.
bad, துற்கீர்த்தி.
Repute, *v. a.* கணிசமாயெண்ணுகிறது.
Reputedly, *adv.* கீர்த்தியாய், பேரெடுப்பாய், வாடிக்கையாய்.
Request, *s.* மனு, விண்ணப்பம், வேண்டுதல்.
Request, *v. a.* கேட்டுக்கொள்ளுகிறது, மனுப்பண்ணிக்கொள்ளுகிறது, விண்ணப்பம்பண்ணுகிறது, வேண்டிக்கொள்ளுகிறது.
Require, *v. a.* வேண்டுகிறது, நியாயப்படிகேட்கிறது, அவசியமாய் வேண்டுமென்றுகேட்கிறது.
Requirement, *s.* வேண்டுவது.
Requisite, *adj.* வேண்டியதான, அவசியமான, தேவையுள்ள.
Requisite expenses, செல்லுஞ்செலவு.
Requisite, *s.* அவசியமானது, தேவையானது.
Requisitely, *adv.* அவசியமாய், தேவையாய், வேண்டியதாய்.
Requisition, *s.* தேவை, அவசரமானது, வேண்டியது.
Requital, *s.* ஈடு, கைம்மாறு, சரிக்குச்சரி, ஈட்டுக்கீடு.
Requite, *v. a.* சரிக்கட்டுகிறது, பதிலளிக்கிறது.
Rescind, *v. a.* வெட்டித்தள்ளுகிறது, தீர்ப்பையழிக்கிறது.
Rescribe, *v. a.* மறுபடியெழுதுகிறது.
Rescue, *s.* தப்பித்துக்கொள்ளல், ஈடேறல், மீட்சி, மோசத்துக்குநீங்கல்.
Rescue, *v. a.* தப்பித்துககொள்ளச்செய்கிறது. விடுவிக்கிறது, மீட்கிறது, கடத்தேற்றுகிறது.
to be rescued, தப்பித்துக்கொள்ளுகிறது, மோசத்துக்குநீங்கலாகிறது.
Research, *s.* ஆராய்ச்சி, விசாரணே.
mental, பூராயவிசாரணே, யூகிப்பு.
Resemblance, *s.* சமானம், ஒப்பு, உவமானம்.
Resemble, *v. a.* ஒத்துவருகிறது, ஒப்பாக்கிறது, உவமிக்கிறது.
Resent, *v. a.* கோபிக்கிறது, மனமடிவாக்குகிறது.
Resentful, *adj.* வர்மமுள்ள, கோபமுள்ள.
Resentment, *s.* வர்மம், வஞ்சம். கோபம், மனமடிவாக்கல்.
Reservation, *s.* அடக்கம், அந்தரங்கம்.
Reserve, *s.* அடக்கம், அழுத்தம், மறைவு.
mental, வாயாற்பொய்கூறினும் மனத்துள் மெய்மையுள்ளதாற்பாவமில்லேயெனல்.
as coldness, or *shyness,* கூச்சம், கோழை.
of an army, சேனேயின்பின்பலம்.
of money, stores, இருப்பு, கையிருப்பு.
Reserve, *v. a.* பிடித்துவைக்கிறது, காப்பாற்றிவைக்கிறது.
Reserved, *p. p.* பதவிசான, அடக்கமொர்டுக்கமுள்ள, நாணமுள்ள, மருங்குமரியாதையுள்ள.
Reservoir, *s.* பண்டம்பாடிகள்வைக்குமிடம், பண்டகசாலே.
for water, குளம், தடாகம், தண்ணீர்நிலே.
Reship, *v. a.* திரும்பக்கப்பலேற்றுகிறது.
Reshipment, *n.* திரும்பக்கப்பலேற்றல்.
Reside, *v. n.* வாசம்பண்ணுகிறது, இருக்கிறது, குடியிருக்கிறது.
Residence, *s.* இல்லிடம், உறைவிடம், வீடு.
Resident, *s.* தாருபதி, காரியகருததன்.
Residual, } *adj.* மிச்சமான, மீதியான, மீந்த.
Residuary, }

Residue, *s.* கழிந்தது, எச்சில், மீந்தது, சொச்சம், நிலுவை.
Residuum, *s.* மண்டி, அடி, மீதி, வண்டல்.
Resign, *v. a.* விட்டுவிடுகிறது, தள்ளிவிடுகிறது.
to be resigned, அடங்கிவருகிறது, அமைந்துபோகிறது.
Resignation, *s.* விட்டுவிடல், அடங்கல், பணிதல்.
Resilience, *s.* பின்குதித்தல், பின்பாயதல்.
Resin, *s.* குங்கிலியம், பிசினி.
Resist, *v. a.* எதிர்க்கிறது, தள்ளுகிறது, முன்னுதைக்கிறது.
Resistance, *s.* முன்னுதை, எதிருதை, எதிர்ப்பு.
Resisting, *pp.* உதைக்கிற, எதிர்க்கிற.
medium, எதிர்ப்பது, எதிருதைப்பது.
Resolute, *a.* உறுதியான, உரமுள்ள, வீரமான, சாதிக்கிற.
Resolution, *s.* தீர்மானம்.
1. *Act of clearing difficulties,* ஐயமறுத்தல், சிக்கறுத்தல்.
2. *Analysis; act of separating any thing into constituent parts,* கூறுபாடு, பகுப்பு, அணுவணுவாய்ப்பிரித்தல்.
3. *Dissolution,* கரைவு, குலைவு, அழிவு.
4. *Fixed determination, settled thought,* தீர்ந்ததீர்ப்பு, உறுதியானபிடி.
5. *Constancy, firmness, steadiness in good,* விடாநிலை, உறுதி.
Resolvable, *adj.* தீர்க்கத்தக்க, பிரிக்கப்படத்தக்க.
Resolve, *s.* தீர்மானம், நிண்ணயம்.
mental, பொருத்தனை, மனதிலேகாப்புக்கட்டிக்கொள்ளுதல், தீர்மானிப்பு.
Resolve, *v.* தீர்மானிக்கிறது, நிச்சயிக்கிறது.
Resolvedly, *adv.* உறுதியாய்.
Resonance, *s.* அதிர், அதிர்வெடி.
as echo, எதிரொலி.
Resonant, *adj.* எதிரொலியான, எதிர்ச்சத்தங்கொடுக்கிற, தொனிக்கிற.
Resorb, *v. a.* உறிஞ்சுகிறது.
Resorbent, *adj.* உறிஞ்சுகிற.
Resort, *s.* அடைவு, சேர்தல், போய்ப்புகுதல்.
last resort, இதுதான்தஞ்சம்வேறில்லையென்பதுபோலொத்தவக்கம்.
Resort, *v. a.* வந்தடைகிறது, ஓடிச்சேருகிறது, ஒதுங்குகிறது.
to arms, சண்டைபோடுகிறது.
to evil spirits, மந்திரஉச்சாடனம்பண்ணுகிறது.
Resound, *v. n.* அதிர்கிறது, எதிரொலிக்கிறது.
Resource, *s.* போக்கு, உபாயம், உதவி, ஆதரவு.
Resourceless, *adj.* இடமில்லாத, வாகுவழியில்லாத, வழிதுறையற்ற.
Respect, *s.* ஆசாரம், மரியாதை, யோக்கியம்.
of persons, முகமாட்டம், தாட்சிணியம், எண்ணம்.
Respect, *v. a.* உபசாரம்பண்ணுகிறது, சங்கைசெய்கிறது, மரியாதைபண்ணுகிறது, மதிக்கிறது.
Respectable, *adj.* மரியாதைக்குரிய, கனமான, கண்ணியமான.
person, கனவான்.
Respectability, *s.* கண்ணியம், யோக்கியம், கனம்.
Respecter, *s.* மரியாதைசெய்கிறவன்.
Respectful, *adj.* மரியாதையுள்ள, வணக்கமுள்ள.
behaviour, உபசாரமானநடத்தை, மரியாதை.
Respectfully, *adv.* மரியாதையாய்.
Respectfulness, *s.* கனம், கண்ணியம்.
Respecting, *v. n.* குறித்து, தொட்டு, பற்றி.
Respective, *adj.* தனித்தனியான, அததற்கடுத்த, தத்தமக்குரிய.
Respirable, *adj.* மூச்சுவிடத்தக்க.
Respiration, *s.* மூச்சுவிடல்.
as inhaling, பூரகம், நிசுவசம், சுவாசம்உட்கொள்ளல்.
as exhaling, இரேசகம், உசுவாசு, சுவாசம்விடுதல்.
suppression of breath, கும்பகம்.
Respiratory, *adj.* சுவாசம்விடத்தக்க, சுகத்துக்கெதுவான.
Respire, *v. n.* மூச்சுவிடுகிறது, களையாறுகிறது.
Respit, *s.* இலகு, இளைப்பாற்றி, சற்றுவிடுதலை.
Respit, *v. n.* சற்றுநிறுத்திஇளைப்பாற்றுகிறது.
Resplendant, *adj.* சோதியுள்ள, பிரகாசம்பொருந்திய.
Respond, *v. a.* மறுமொழிகொடுக்கிறது, ஒத்துப்பொருந்திநடக்கிறது.
Respondent, *adj.* உத்தரஞ்சொல்லுகிறவன், எதிர்வாதி, உத்தரவாதி, பிணையாளி.
Response, *s.* உத்தரவு, வதிலுத்தரம்.

Responsiblity, *s.* சுமை, தலைப்பாரம், உத்தரவாதம், சாமீன், கடனாளித்தனம்.
 personal, தன்பொறுப்பு, தன்தலைப்பாரம்.

Responsible, *adj.* உத்தரவாதமான.
 person, காரியக்காரன், பொறுப்பாளி.
 relative or *guardian,* உரிமைக்காரன், உரித்தாளி.
 to be responsible, உத்தரவாதியாயிருக்கிறது, சாமீனிருக்கிறது.

Responsive, *adj.* மறுமொழியான, வதிலுத்தரமான.

Rest, *s* 1. *sleep, repose,* சயனிப்பு, இளைப்பாற்றி.
 2. *the final sleep, the quietness of death,* ஒய்வு, ஒடுக்கம், சாவு, மகாநித்திரை.
 3. *stillness, cessation,* or *absence of motion,* அமைச்சல், சலசலப்பில்லாமை, சத்தமில்லாமை, சாங்கோபாங்கம்.
 4. *Quiet, peace,* சமாதானம், தொந்தரையில்லாமை.
 5. *Support, that on which any thing bears* or *rests,* தாங்கி, அடி, ஆதாரம்.
 6. *Remainder, what remains,* மீதி, மிச்சம்.
 as the rest, மற்றவர்கள.

Rest, *v. a.* சுமத்துகிறது, ஒன்றின்மேல்நிறுத்துகிறது.

Rest, *v. n.* இளைப்பாறுகிறது.
 to settle, படிகிறது, இருக்கிறது.
 on, சாருகிறது, சாய்கிறது.
 on, as duty, கடமைசுமருகிறது.
 to halt, தரித்துநிற்கிறது.

Restiff, *adj.* படியாத, முறண்டான.

Restitution, *s.* திரும்பக்கொடுத்தல்.
 the act of recovering its former state or *posture,* முன்சீருக்குவருதல், முன்போலாதல்.
 as indemnification, ஈடுசெலுத்தல், அடைமானங்கட்டல்.

Restless, *adj.* தூங்காத, அமைச்சலில்லாத.
 to be restless, ஒய்வில்லாமலிருக்கிறது, பறவாதித்தனமபண்ணுகிறது.

Restlessness, *s.* துடிப்புள்ள, ஒய்வில்லாமை, அமரிக்கையற்ற, துருதுருப்பு.

Restoration, *s.* முன்சீருக்குள்ளாக்கிவைத்தல்.

Restorative, *s.* மூர்ச்சைதீர்த்துயிர்கொடுக்கிற மருந்து, சஞ்சீவி.

Restorative, *adj.* உயிர்தரத்தக்க, மூர்ச்சைதீர்க்கத்தக்க.

Restore, *v. a.* 1. *To give back what has been lost* or *taken away,* மறுபடிகொடுக்கிறது.
 2. *To bring back,* திருப்பிக்கொண்டுவருகிறது.
 To cure, to recover from disease, நோயைச்சுகப்படுத்துகிறது, குணமாக்கிறது.
 to life, உயிர்ப்பிக்கிறது.
 as replace, முன்போல்வைததல்.
 as recover, மீட்கிறது.

Restrain, *v. a.* மறிக்கிறது, அடக்கிறது, கட்டுப்படுத்துகிறது.

Restrainedly, *adv.* அடக்கமாய், கட்டாயமாய்.

Restraint, *s.* கட்டுகாவல், அடக்கம், கட்டுப்பாடு.
 rigid, பலவந்தமானகட்டுப்பாடு, கட்டுக்காவல்.

Restrict, *v. a.* அடக்கிறது, அளவுப்படுத்துகிறது, கட்டுப்படுத்துகிறது.

Restriction, *s.* கட்டு, கட்டுப்பாடு, இடுக்கம்.

Restrictive, *adj.* கட்டுப்பாடுள்ள, கட்டுங்காவலுமான.

Restrictively, *adv.* கட்டுங்காவலுமாய்.

Restringent, *s.* கட்டுபடுத்துவது.

Result, *s.* தீர்ப்பு, தீர்மானம், முடிவு, தொகை.
 mental, சித்தநிரணயம், சித்தமானது.

Result, *v. a.* பலிக்கிறது, காரியப்படுகிறது, ஆகிறது, சித்தாந்தப்படுகிறது.

Resumable, *adj.* மறுபடியெடுத்துக்கொள்ளத்தக்க.

Resume, *v. a.* மறுபடியெடுக்கிறது, திரும்பக்கொண்டுகொள்ளுகிறது.
 as to begin again what was broken off, மறுபடியுந்தொடங்குகிறது, விட்டஇடத்திலிருந்துதொடங்குகிறது.
 as he resumed his discourse, அவன்பேசிவிட்டஇடத்திலிருந்துதொடங்கினான்.

Resummon, *v. a.* மறுபடிகட்டளையனுப்பியழைக்கிறது.

Resumption, *s.* விட்டதைத்தொடங்கல்.

Resurrection, *s.* மரித்துயிர்த்தெழுதல், மரித்தோர்ஸ்தலத்திலிருந்துஎழும்பிவரல்.

Resurvey, *v. a.* அளந்ததையளக்கிறது, சுற்றியடித்துப்பார்க்கிறது.

Resuscitate, *v. a.* மீண்டிவிடுகிறது, கிளப்பிவி டுகிறது, உயிர்ப்பிக்கிறது.
Resuscitation, *s.* பிழைத்தல், பிழைப்பித்தல்.
Resuscitative, *adj.* உயிர்ப்பிக்கிற, பிழைப்பிக் கிற.
Retail, *s.* சில்லறைவியாபாரம், பலசரக்குவிற்ப னை.
Retail, *v. a.* சில்லறையிலேவிற்கிறது.
Retailer, *s.* கொண்டுவிற்போன், கடைக்காரன்.
Retain, *v. a.* வைத்துக்கொள்ளுகிறது, பிடிக்கி றது.
in mind, மனதிலேவைக்கிறது.
a slave or *captive,* அடிமைகொண்டாளுகி றது.
tenaciously, விடாப்பிடிகொள்ளுகிறது.
Retainer, *s.* வைத்திருப்பவன், ஒன்றையாள்பவ ன்.
Retaliate, *v. a. to return by giving like for like; to repay, to requite,* சரிக்குச்சரிசெய்கி றது, வதிலுக்குவதில்வாங்கிவிடுகிறது.
Retaliation, *s.* சரிக்குச்சரி, வதிலுக்குவதில், ஈட் டுக்கீடு.
Retard, *v. a.* தடுக்கிறது, இடைஞ்சற்பண்ணு கிறது, தாமதப்படுத்துகிறது.
to become retarded, தடங்கற்படுகிறது, அட் டிபடுகிறது.
to retard one's progress, மறிக்கிறது.
Retardation, *s.* தடை, தடுப்பு.
Retch, *v. a.* குமட்டுகிறது, வயிற்றைப்பிரட்டுகி றது, வாந்திபண்ணுகிறது, ஒக்காளிக்கிறது.
Retention, *s.* ஞாபகம், நினைப்பு, பிடிப்பு.
Retentive, *adj.* பிடிக்கத்தக்க, ஞாபகமுள்ள.
Retentively, *adv.* பிடிப்பாய், நினைப்பாய்.
Retentiveness, *s.* பிடிப்பு, ஞாபகப்படுத்துந் தன்மை, யாதி.
Reticular, *adj.* சிறுவலைபோலொத்த, பின்னல் வேலையுள்ள.
Reticulate, *v. a.* பின்னல்வேலைசெய்கிறது.
Reticulation, *s.* பின்னல்வேலைசெய்கை.
Retina, *s.* கண்மணியைமூடியிருக்குஞ்சவ்வு.
Retinue, *s.* பரிவாரம், கூட்டம்,பிரபுவைச்சுற்றி நடக்கும்பெரியமனிதர்கள்.
Retire, *v. n.* ஒதுப்புறம்பாகிறது, தனியாகிற து.
1. *To retreat, to withdraw, to go to a place of privacy,* தனித்திடம்போகிறது, அகன் றொருபுறம் போகிறது, இடைந்துபோகிற து.
2. *To retreat from danger,* மோசத்துக்கு விலகுகிறது.
3. *To go from a public station,* பகிரங்கத் தைவிட்டுநீங்குகிறது.
4. *To withdraw for safety,* அடைக்கலம்பு குகிறது.
as an ascetic, வனவாசியாய்ப்போகிறது.
as an enemy, பின்னிடைகிறது.
Retiredly, *adv.* தனிமையாய், ஒதுப்புறம்பாய்.
Retiredness, Retirement, } *s.* ஏகாந்தம், தனிமை, ஒதுப்பு றம்பு.
Retiring, *adj.* தனித்துப்போகிற, நாணமுள்ள.
Retort, *s.* மாறுத்தரம், ஏட்டிக்குப்போட்டி, நி ந்தைக்குநிந்தை.
chemical, வாலை, வடிகுழல்.
Retort, *v. a.* பின்னுலெறிகிறது, அபசாரத்துக் குஅபசாரம்பண்ணுகிறது, எதிருத்தைகொடுக்கி றது, தடுத்துச்சொல்லுகிறது.
Retorter, *s.* தடுத்துச்சொல்லுகிறவன்.
Retouch, *v. a.* நேர்த்தியாக்குகிறது.
Retrace, *v. a.* அடிதொடர்ந்துபோகிறது,வந்த வழியாய்த்திரும்புகிறது, ஒருவிஷயத்தின் மூல மறிகிறது.
Retract, *v. a.* மாற்றுகிறது, சொன்னதையழித் துப்பேசுகிறது.
Retractation, Retraction, } *s.* அழித்துக்கூறல், சொன்ன தைமாற்றிச்சொல்லல், தான்சொன்னது எழுதி னதுதப்பென்றுசொல்லல்.
Retractive, *s.* பரிகரிப்பது, குறைப்பது, திரும் பவெடுத்துக்கொள்ளுகிறது.
Retreat, *s.* ஒதுக்கிடம், புகலிடம்.
1. *Act of retiring,* தனித்துப்போதல்.
2. *State of privacy, retirement,* ஏகாந்தமா ய்ப்போயிருக்கை.
3. *Act of retiring before a superior force,* படைஓட்டம்பின்வாங்கல, *Retreat is less than flight,* முதுகுகாட்டியோடுகிறதிலும் பின்வாங்குதலல்வளவுஇளப்பமல்ல.
Retreat, *v. n.* 1. *To go to a private abode,*

தனித்திடம்போகிறது, ஒன்றியாய்ப்போயிருக்கிறது.
2. *To take shelter, to go to a place of security*, தாவுபார்த்துப்புகுகிறது,ஒதுப்புறம்பாய்ப்போகிறது.
3. *To go back out of the former place*, முன்னிருந்தஇடத்தைவிட்டுப்போகிறது.
Retrench, *v. a.* குறுக்கிறது, குறைக்கிறது,கொஞ்சத்திலேசீவனம்பண்ணுகிறது.
Retrenchment, *v. a.* அகழ்வெட்டியடைக்கிறது.
1. *the act of lopping away*, வெட்டல்.
2. *Fortification*, கோட்டைகொத்தளம்மதில் முதலியன.
Retribute, *v. a.* திரும்பக்கொடுக்கிறது.
Retribution, *s.* வதிலுக்குக்கொடுத்தல், உத்தரவாதம், பிரதிசெய்தல்.
Retributive, Retributory, *adj.* மறுபடிகொடுக்கிற, திரும்பக்கொடுக்கத்தக்க.
Retrievable, *adj.* சீரடையத்தக்க, சீருக்குவரக்கூடிய.
Retrieve, *v. a.* செம்மைசெய்கிறது, செப்பனிடுகிறது.
one's circumstances, தரித்திரந்தெளியவைக்கிறது, தரித்திரந்தீர்க்கிறது, சீர்ப்படுத்துகிறது.
Retrocede, *v. a.* திரும்பிக்கொண்டுபோகிறது, பின்வாங்குகிறது.
Retrocession, *s.* திரும்பிப்போதல், பின்போக்கு.
Retrogradation, *s.* திரும்பிக்கொண்டுபோதல், திரும்பியிறங்குதல்.
of a planet, வக்கிரகம், வக்கிரிப்பு.
Retrograde, *v. n.* பின்னிடுகிறது, திரும்புகிறது.
as a planet, வக்கிரிக்கிறது.
Retrograde, *adj.* பின்னிடுகிற, பின்போக்கான.
Retrogression, *s.* பின்போக்கு.
of a planet, வக்கிரம்.
Retrospect, *s.* கழிந்தகாலத்தின்சிந்தனை, கடந்தகாரியத்தைநினைத்தல்.
Retrospection, *s.* கடந்தவற்றைக்கருதுங்கருத்து.
Retrospective, *adj.* போனதைநினைக்கிற.
Retroversion, *s.* திரும்புதல்.
Retrovert, *v. a.* திருப்புகிறது.
Return, *s.* பதில், ஈடு.
1. *Act of coming back to the same place*, மறுபடிவருதல்.
2. *Revolution, vicissitude*, சுற்று, மாறிமாறிவருகை.
in return, பதிலுக்கு.
as report, அறிவிப்புப்பத்திரம்.
Return, *v. a.* திருப்புகிறது.
or *render thanks*, துதிசெலுத்துகிறது.
Return, *v. n.* திரும்புகிறது, மீளுகிறது.
Reunite, *v. a.* திரும்பஒன்றுபடுகிறது, மறுபடிகூடுகிறது.
Reunion, *s.* ஐக்கப்படுதல், திரும்பச்சம்பந்தமாதல்.
Reveal, *v. a.* வெளிப்படுத்துகிறது, திறந்துசொல்லுகிறது,தெய்வத்திருவாய்மலர்கிறது,தெய்வத்திருவுளமருளுகிறது.
Revealer, *s.* வெளிப்படுத்துவோன்.
Revealment, *s.* வெளிப்படுத்தல்.
Revel, *s.* களிப்பு, கேளிக்கை, விலாசம், இராக்காலத்திற்குடித்துவெறித்து அமளிபணணல்.
Revel, *v. n.* களிக்கிறது, கேளிக்கைவிலாசமாயிருக்கிறது.
Revelation, *s.* அறிவிப்பு, வெளிப்படுத்தல், திருவுளமலர்ச்சி, திருவாய்மலர்ச்சி, வேதம்.
Reveller, *s.* கேளிக்கைவிலாசக்காரன்.
Revelry, *s.* கேளிக்கைவிலாசம்.
Revenge, *v. a.* பழிவாங்கல், குரோதம்.
Revenge, *v. a.* பழிவாங்குகிறது, வஞ்சந்தீர்த்துக்கொள்ளுகிறது.
Revengeful, *adj.* வற்மமுள்ள, பழிவாங்குங்குணமுளள.
Revengefulness, *s.* வற்மம், வஞ்சம், பழிவாங்குங்குணம்.
Revenger, *s.* பழிவாங்கி.
Revenue, *s. Income, annual profits received from lands* or *other funds*, வருமானம், வரத்து.
officer, பொக்கிஷக்காரன்.
office, பொக்கிஷசாலை.
Reverberant, *adj.* எதிரொலிக்கிற.
Reverberate, *v. a.* பின்னுக்குதைக்கிறது, திருப்புகிறது, பின்னுக்குத்தெறிக்கிறது.
Reverberate, *v. a.* எதிரொலிக்கிறது.

Reverberation, *s.* எதிரொலி, அதிர்ச்சி, முழங்கல்.
Reverberatory, *adj.* எதிரொலிக்கிற, எதிர்த்தாக்குகிற.
Revere, *v. a.* கனப்படுத்துகிறது, பூசிதைபண்ணுகிறது.
Reverence, *s.* பயபக்தி, உபசாரம், பூசிதை, வணக்கம்.
Reverence, *v. a.* தண்டன்பண்ணுகிறது, வணங்குகிறது, சங்கைசெய்கிறது.
Reverend, *adj.* சங்கைபொருந்திய, அருச்சிக்கப்பட்ட.
Reverent, *adj.* தாழ்மையுள்ள, வணக்கமுள்ள.
words, பணிந்தவார்த்தை.
behaviour, பணிந்தநடை.
Reverential, *adj.* வணங்கப்படத்தக்க, அஞ்சிகையான.
Reverentially, *adv.* வணக்கமாய், பணிவாய்.
Reverently, *adj.* தாழ்மையாய், உபசாரமாய்.
Reverie, *(revery,)* See.
Reversal, *s.* மறுதீர்மானம், மாற்றியதீர்ப்பு.
Reverse, *v. a.* 1. *To turn upside down,* தலைகீழாக்கிறது.
2. *To overturn, to subvert,* கீழதுமேலதாக்கிறது.
3. *To turn back,* திரும்பிவருகிறது, திருப்பிக்கொள்ளுகிறது.
4. *To contradict, to repeal,* அழித்துச்சொல்லுகிறது, மாற்றிப்பேசுகிறது.
to become reversed, மாறிப்போகிறது, பெயர்கிறது, தலைதடுமாறுகிறது.
Reversedly, Reversely, *adv.* மாறாய், விரோதமாய்.
Reversible, *adj.* மாறத்தக்க, திரும்பத்தக்க.
Reversion, *s.* தடுப்பு, திரும்பக்கொடுத்தல்.
Reversionary, *adj.* ஒன்றின்பின்னொன்றான.
Revert, *v. a.* புரட்டுகிறது, மாற்றுகிறது.
Revert, *v. n.* திரும்புகிறது, பிரளுகிறது.
Revertent, *adj.* மாற்றுவது, சீர்ப்படுத்துவது.
Revertible, *adj.* மாற்றக்கூடிய, திரும்பக்கூடிய.
Revery, *s.* குருவளிநினைவுகள், வீணெண்ணம், பிராந்தி.
Revibrate, *v. n.* மறுபடியசைகிறது, திரும்பவுமாடுகிறது
Review, *s.* பார்வை, பரிசோதனை.
Review, *v. a.* பார்க்கிறது, திருத்தம்பார்க்கிறது, பரிசோதிக்கிறது.
Reviewer, *s.* பார்வைக்காரன், திருத்துகிறவன்.
Revigorate, *v. a.* பலப்படுத்துகிறது, சுகப்படுத்துகிறது.
Revile, *v. a.* இகழுகிறது, நிந்திக்கிறது, வைகிறது.
Reviler, *s.* வைகிறவன், நிந்திப்போன்.
Reviling, *s.* இகழ்ச்சி.
Revindicate, *v. a.* மறுபடிஸ்திரப்படுத்துகிறது, திரும்பஸ்திரப்படுத்திப்பேசுகிறது.
Revisal, *s.* மறுபார்வை, மறுசோதனை.
Revise, *v. a.* பிழைபார்க்கிறது, திருத்துகிறது.
Reviser, *s.* திருத்துகிறவன், பிழைபார்க்கிறவன்.
Revision, *s.* பார்வை, பரிசோதனை.
Revisit, *v. a.* திரும்பச்சந்திக்கிறது.
Revival, *s.* பிழைப்பித்தல், களைதீர்த்தல், வதங்கினதைக்குளிர்ச்சியாக்கல்.
Revive, *v. a.* 1. *To bring to life again,* பிழைப்பூட்டுகிறது.
2. *To raise from langour, insensibility* or *oblivion,* களைதீர்க்கிறது, நினைப்பூட்டுகிறது.
Revive, *v. n.* உயிரடைகிறது.
as vegetables, தழைக்கிறது, பிழைத்துக்கொள்ளுகிறது, திரும்பத்துளிர்க்கிறது.
Reviver, *s.* பிழைப்பூட்டுகிறவன், நினைப்பூட்டி.
Revivify, *v. a.* பிழைப்பிக்கிறது.
Revocable, *adj.* அழிக்கக்கூடிய, தவிர்க்கத்தக்க.
Revocableness, *s.* மறுக்கப்படுந்தன்மை.
Revocate, *v. a.* மறுபடியழைக்கிறது, சொல்லாதேபோகப்பண்ணுகிறது.
Revocation, *s.* மறுபடியழைத்தல்.
Revoke, *v. a.* மாற்றுகிறது, அழிக்கிறது, விலக்கிறது.
Revolt, *s.* கலகம், விட்டுநீங்குகை.
Revolt, *v. n.* ஒருபட்சத்திலிருந்து மறுபட்சத்துக்குமாறுகிறது.
Revolter, *s.* கலகக்காரன், சுயசமயம்விட்டோடினவன்.
Revolting, *adj.* அரோசிகமான.
Revolution, *s.* வட்டம், சுற்று.
of a wheel, உருளையுருளுதல், சக்கரமுருளல்.
of a planet, கிரகநடை, கிரகவட்டம்.
diurnal revolution of a planet, தினப்பிரமாணம்.

Revolutionary, *a.* கலாதிக்குரிய, கலகத்துக்கடுத்த.
Revolutionist, *s.* காலாதிக்காரன்.
Revolve, *v. a.* வட்டமிட்டோடுகிறது, உருட்டுகிறது, சுற்றுகிறது, சக்கரவட்டமிட்டோடுகிறது.
To consider, to meditate on, as to revolve in mind, யோசிக்கிறது, ஆலோசிக்கிறது.
Revolve, *v. a.* வட்டமாய்ச்சுற்றிவருகிறது, திரிகிறது.
as a wheel, or on a plane, உருளுகிறது.
Revulsion, *s.* பின்வாங்குதல், அரோசிப்பு.
Reward, *s.* வெகுமதி, வெகுமானம், கைம்மாறு.
Reward, *v. a.* பதிலளிக்கிறது, வெகுமதிகொடுக்கிறது.
Rewardable, *adj. worthy of reward,* பலனுக்குப்பாத்திரமான.
Rewarder, *s.* பதிலளிக்கிறவன்.
Rewrite, *v. a.* திரும்பியெழுதுகிறது.
Rhapsodical, *adj.* செய்யுளுக்கடுத்த.
Rhapsodist, *s.* சங்கீதம்பாடுவோன்.
Rhapsody, *s.* ஓர்செய்யுள்.
Rhetoric, *s.* அலங்காரம், அணியிலக்கணம்.
Rhetorical, *adj.* அணியிலக்கணத்துக்குரிய, அலங்காரத்துக்கடுத்த.
Rhetorically, *adv.* சாதுரியமாய், அலங்காரமாய்.
Rhetorician, *s.* வாக்கி, சாதுரியன்.
Rheum, *s.* சலதோஷம், வாய்வு.
Rheumatic, *adj.* வாதங்கொண்ட, நீர்கொண்ட.
pains in the limbs, கெண்டைவாதம்.
Rheumatism, *s.* கைகால்பிடிப்பு, வாதம், வாய்வு.
in the joints, சந்துவாதம்.
Rhinoceros, *s.* காண்டாமிருகம், காட்டா.
Rhomb, *s.* சாய்ந்தசதுரம்.
Rhombic, *adj.* சாய்ந்தசதுரமான.
Rhomboid, *s.* எதிர்சமகோணநீர்க்கசதுரம்.
Rhomboidal, *adj.* எதிர்சமகோணநீர்க்கசதுரமான.
Rhyme, *s.* எதுகை, தொடை, இசைவு.
Rhyme, *v. n.* எதுகையொத்துவருகிறது.
Rhymer, *s.* பாடுகிறவன்.
Rhythm, *s.* சந்தம், கவியின்வண்ணம்.
Rhythmical, *adj.* எதுகையுள்ள.
Rib, *s.* விலாவெலும்பு.
Ribaldry, *s.* அதப்பியம், ஓடியம், கெட்டபேச்சு, கேலிப்பேச்சு
Ribband, } *s.* நாடா,
Ribbon, }
Rice, *s.* அரிசி.
unhusked or *growing,* நெல்
husked, அரிசி.
boiled, சோறு, அன்னம், சாதம்.
boiled and then dried, புழுங்கல்.
parched, பொரி.
Rich, *adj* 1. *wealthy, abounding in wealth, abounding in money* or *possessions, opulent, opposed to poor,* செல்வமுள்ள, பணமுள்ள, ஆஸ்தியுள்ள.
2. *Valuable, estimable, precious, splendid, sumptuous,* விலையுயர்ந்த, மதிப்பான, நேர்த்தியான.
3. *Having any ingredients* or *qualities in a great quality* or *degree,* திமிர்ந்த, நிறைந்த.
4. *Fertile, fruitful,* செழிப்புள்ள, செழுமையான.
5. *Abundant, plentiful,* திரண்ட, மிகுதியான.
as tasteful, அறுவகைருசியுள்ள.
Riches, *(plu.)* திரவியம், ஆஸ்திபாஸ்தி.
Richly, *adv.* செல்வமாய், மிகுதியாய்.
Richness, *s.* சிறப்பு, செழிப்பு.
Rid, *v. a.* விடுதலையாக்கிறது.
Riddance, *s.* விடுதலை, கழட்டிக்கொள்ளல்.
Riddle, *s.* விடுகதை.
as sieve, சல்லடை.
Riddle, *v. a.* சிக்கறுக்கிறது, விடுகதைவிடுவிக்கிறது.
Ride, *s.* உலாத்துதல், குதிரையேறியுலாத்துதல்.
a ship that rides at anchor, நங்கூரமபோட்டிருக்கிறகப்பல்.
Ride, *v. a.* வாகனமேறிப்போகிறது.
for recreation, உலாத்துகிறது.
Rider, *s.* வாகனமேறிநடத்துகிறவன்.
Ridge, *s.* புத்தகத்திலேவெள்ளேடு, வரப்பு, வரம்பு, புருவம்.
as causeway, பாலம், மதகு.
of a house, முகடு.
of a mountain, கொடுமுடி, மலையுச்சி.
Ridicule, *s.* நையாண்டி, சரசம், சிரிப்பு, பரிகாசம்.

Ridicule, *v. a.* பழிக்கிறது, பரிகாசம்பண்ணுகிறது, நகைக்கிறது.
Ridiculous, *adj.* சிரிக்கப்படத்தக்க.
Ridiculously, *adv.* சிரிக்கப்படத்தக்கதாய், சிரிப்பாய்.
Ridiculousness, *s.* சிரிப்புகிடமானதன்மை.
Riding, *s.* சாரி, உலாத்தல.
Rife, *adj.* பரம்புகிற, மிகுதிகொண்ட, அதிகரிப்பான, வாடிக்கையான, திர்ப்பெலன்கொண்ட.
to be rife, நடமாடுகிறது.
Rifle, *s.* முறுக்குக்குழல்துப்பாக்கி.
Rifle, *v. a.* பறிக்கிறது, கொள்ளையிடுகிறது, குறையாடுகிறது.
Rifleman, *s.* முறுக்குக்குழல்துப்பாக்கிக்காரன்.
Rifler, *n.* திருடன், கொள்ளைக்காரன்.
Rift, *s.* பிளப்பு.
Rift, *v. a.* பிளக்கிறது.
Rig, *v.* ஓட்டுகிறதுக்குக்கப்பலைமுஸ்திப்பாக்குகிறது.
Rigging, *s.* கப்பற்கயிறுமுதலியசாமான்கள்.
Right, *s.* 1. *not wrong,* சரி, தப்பிதமில்லாதது.
2. *Justice not injury,* நீதிநெறி.
3. *Freedom from guilt, goodness,* பழுதில்லாமை, யோக்கியம்.
4. *Property, interest,* சொந்தம், சொத்து, உரிமை.
5. *Power, prerogative,* விபகாரம், அதிகாரம்.
6. *Immunity privilege of possession,* உரிமை, காணியாட்சி.
To put to rights, செம்மையாக்கிறது, திருத்துகிறது.
Right, *adj.* 1. *Fit, proper, becoming, suitable,* நேரான, சரியான, செவ்வையான.
2. *Rightful, justly claiming,* நியாயத்தாலுள்ளபடியுரிததான.
3. *True, not erroneous, not wrong,* தப்பிதமில்லாத.
4. *Not left,* இடதுபக்கமல்லாத, வலபக்கமான.
5. *Straight, not crooked,* கோணலல்லாத, ஒழுங்கான.
6. *Perpendicular, direct,* செங்குத்தான, நேரொழுங்கான.
to be right, ஏற்குதல், சரிப்படுதல்.
Right, *adv.* சரியாய், நேராய்.
Right, *v. a.* நீதிசெய்கிறது, சரியாய்ச்செய்கிறது, திருத்துகிறது, செவ்வைப்படுத்துகிறது.
Righteous, *adj.* நீதியுள்ள, நீதியான, சரியான.
Righteously, *adv.* சரியாய், நீதியாய்.
Righteousness, *s.* நீதி, நிதார்த்தம், சற்குணம்.
Rightful, *adj.* நியாயமான, நீதியான.
Rightfully, *adv.* நீதிப்படி, நியாயமாய்.
Rightfulness, *s.* நல்லொழுககம், நேர்மை.
Rightly, *adv.* சரியாய், நேராய்.
Rightness, *s.* திருத்தம், திட்டம், வளையாததன்மையுள்ள.
Rigid, *adj.* கண்டிப்பான, சுறுக்குள்ள, பிடிப்புள்ள.
austerities, அருந்தவம், விரதம்.
as limb, திமிரான, மடங்காத.
to be rigid, அழுத்தமாயிருக்கிறது, கடினமாயிருக்கிறது, முறைப்பாயிருக்கிறது.
Rigidity, *s.* கண்டிப்பு, தடிப்பு.
Rigidness, *s.* முரண், வளையாமை.
of a limb, &c. திமிர், திமிர்ப்பு, முறைப்பு.
Rigor, *s.* கொடுமை, அகோரம், கடினம், கண்டிப்பு, சுறுக்கு.
1. *Cold stiffness,* குளிர்முறைப்பு.
2. *A convulsive shuddering with sense of cold,* சீதளசன்னி.
3. *Severity, sternness, want of condescension to others,* இரங்காமை, கன்மனசு.
Rigorous, *adj.* அகோரமான, கொடுமையான.
Rigorously, *adv.* கண்டிப்பாய்.
Rigorousness, *s.* கடுமை, அகோரம்.
Rill, *s.* சிற்றாறு.
Rim, *s.* அருகு, ஓரம், விளிம்பு.
Rime, *s.* உறைந்தபனி, ஆலாங்கட்டி.
Rimple, *s.* திரைவு, திரை.
Rimple, *v. a.* திரைக்கிறது, சுருக்கிறது.
Rind, *s.* பட்டை, மேல்த்தோல். நார்.
Ring, *s.* வளையம், வட்டம்.
for the finger, மோதிரம்.
as sound, ஒலி, கிணீரென்றசத்தம்.
as earrings, கடுக்கன்.
Ring, *v. a.* மணிகிலுக்கிறது.
Ring, *v. n.* கிணீர்கிணீரென்கிறது.
Ringdove, *s.* மணிப்புறா.
Ringing, *s.* கிலுக்கு, மணிச்சத்தம், வெண்கலவோசை.

Ringleader, *s.* கலாதிக்குத்தலைவன், போக்கிரிகளுக்குமுதலாளி.
Ringlet, *s.* மயிர்ச்சுருள்.
Ringstreaked, *adj.* வளைவானவரிபொருந்திய, வளையல்வளையலான.
Ringworm, *s.* சொறி, படர்சொறி.
Rinse, *v. a.* அலம்புகிறது, கழுவுகிறது.
the mouth, வாய்கொப்பளிக்கிறது.
the teeth, பல்லுவிளக்கிறது.
Riot, *s.* கலகம், கலாதி.
festive, கேளிக்கைவிலாசம்.
Riot, *v. n.* கலகம்பண்ணுகிறது, ஆராதூரியாய் வாழுகிறது.
Rioter, *s.* கலாதிக்காறன், ஆராதூரிக்காரன்.
Rioting, *s.* தின்பதுங்குடிப்பதுமானசிற்றின்பவேடிக்கை.
Riotous, *adj.* கலகம்பண்ணுகிற, கலகமுள்ள, கலாதியான.
Riotously, *adv.* கலாதியாய், கலகமாய்.
Rip, *s.* கிழிவு, பீறல், அறுத்தல்.
Rip, *v. a.* கிழிக்கிறது, பிய்க்கிறது.
a seam, தையலைப்பிரிக்கிறது.
Ripe, *adj.* பழுத்த, கனிந்த.
fruit, பழம், கனிந்தபழம்.
over ripe fruit, அளிந்தபழம்.
Ripely, *adv.* கனிவாய், பழுத்ததாய்.
Ripen, *v. a.* பாகம்பண்ணுகிறது, பழுக்கவைக்கிறது, பக்குவமாக்குகிறது, பதமாக்குகிறது.
Ripen, *v. n.* கனிகிறது, பழுக்கிறது.
Ripen, *s.* கனிவு, பழுத்ததன்மை.
Ripping, *s.* கிழித்தல்.
Ripple, *s.* அலை, சலசலப்பு.
Ripple, *v. n.* சலசலக்கிறது.
as a wave, திரைகிறது, கலங்கிறது.
Rise, *s. as ascent,* எழும்பல், ஏறல், ஏற்றம்.
as origin, மூலம், ஊற்று, வேர்.
as increase, பெருக்கம், விளைவு.
of the sun, moon, &c. உதயம், உதித்தல்.
of ground, மேடு, திட்டை.
rise and fall, பள்ளமுமேடும், ஏற்றயிறக்கம்.
Rise, *v. n.* எழும்புகிறது, கிளம்புகிறது.
from obscurity, தலையெடுக்கிறது.
as billows, கொந்தளிக்கிறது.
as the sun, சூரியனுதிக்கிறது, உதயமாகிறது.
to life, உயிர்த்தெழும்புகிறது.
as the hair in joy, &c. சிலிர்க்கிறது, புளகிக்கிறது.
above others, உயருகிறது, முந்துகிறது.
Risiblity, *s.* சிரிக்குந்தன்மை, நகைப்பு.
Risible, *adj.* நகைப்புக்கிடமான.
Rising, *s.* எழும்பல்.
of a planet, உதயம்.
of a river, ஆற்றுப்பெருக்கு, நதிப்பிரவாகம்.
as tumour, கட்டு, கழலை.
Risk, *s.* மோசம், அபாயம், இராசிகந்தெய்வீகம்.
Risk, *v. a.* மோசத்துக்கேதுவாக்கிறது, துணியப்பண்ணுகிறது.
To risk money, ஈரொட்டாய்ப்பணங்கொடுக்கிறது.
To run a risk, மோசத்துக்கேதுவாகிறது.
Rite, *s.* சடங்கு, கிரியை, கருமம், முறைமை.
Ritual, *s.* தேவாராதனையனுஷ்டானம், பூசைமுறை.
Ritual, *adj.* பூசைமுறையானசடங்குநூலுக்குரிய.
Ritually, *adv.* பத்திமுறையாய்.
Rival, *s.* சக்களவன், எதிராளி, பகைவன்.
Rival, *v. a.* ஒருத்தன்நாடுகிறதைத்தானுந்தாவுகிறது, பகையாளித்தனம்பண்ணுகிறது, சக்களத்தி போராட்டம்பண்ணுகிறது, போட்டிபண்ணுகிறது, எதிர்க்கிறது.
Rival, *adj.* பகையான, எதிரித்தனமுள்ள.
Rivalry, *s.* போட்டி, எதிரித்தனம்.
Rivalship, *s.* எதிரித்தன்மை.
Rive, *v. a.* பிளக்கிறது, வெட்டுகிறது.
Rive, *v. n.* விண்டுபோகிறது, வெடிகிறது.
River, *s.* ஆறு, நதி.
Riverhorse, *s.* நீர்க்குதிரை.
Rivet, *s.* சுள்ளாணி, நுனிமடக்கியஆணி.
Rivet, *v. a.* கடாவுகிறது, இறுக்கிறது.
attention, மனதைஇழுக்கிறது, மனதில்தைக்கவைக்கிறது.
Rivulet, *s.* சிற்றாறு.
Rixdollar, *s.* ஒருநாணயம், அது (௰௨) அணுவகுச்சரி.
Roach, *s.* ஓர்மீன்.
Road, *s.* வழிப்பாதை.
main road, தெருவீதி.
for ships, துறை, துறைமுகம்,
corner of, or bend in, முடுக்குத்தெரு

Roadstead, *s.* துறை, இறேவுத்துறை, துறைமுகம்.
Roam, *v. n.* சுற்றித்திரிகிறது, அலைகிறது.
Roaming, *adj.* அலைகிற, திரிகிற.
Roar, *s.* முழக்கம், இடி.
of a lion or warrior, கெர்ச்சிப்பு.
of the sea, கடலிரைச்சல்.
Roar, *v. n.* முழங்குகிறது, கெர்ச்சிக்கிறது, குமுறுகிறது.
To sound as the wind or sea, கோஷிடிக்கிறது, கொந்தளிக்கிறது.
To cry in distress, அலறுகிறது, கதறுகிறது.
To cry as a lion or other wild beast, கெர்ச்சிக்கிறது, உக்காரம்போடுகிறது.
Roast, *s.* பொரியல்.
Roast, *v. a.* பொரிக்கிறது, வேகவைக்கிறது, சுடுகிறது, வறுக்கிறது.
to be roasted, பொரிகிறது, வறுபடுகிறது.
To rule the roast, நாட்டாண்மைபண்ணுகிறது.
Rob, *v. a.* கொள்ளையிடுகிறது, திருடுகிறது.
Robber, *s.* திருடன், கள்ளன், கொள்ளைக்காரன்.
Robbery, *s.* கொள்ளை, திருட்டு.
to be robbed, பறிகொடுக்கிறது.
Robe, *s.* *A gown of state, a dress of dignity,* அங்கி, நிலையங்கி, பட்டவஸ்திரம்.
Robe, *v. a.* சம்பமாயுடுக்கிறது, அலங்காரமாயணிகிறது.
To invest, அங்கியணிகிறது.
Robust, *adj.* 1. *strong, sinewy, vigorous,* கெட்டியான, ஸ்திரபலமுள்ள, காத்திரமான, துடியான.
2. *Boisterous, violent, unwieldy,* வலுவான, உரத்த, பிரசண்டமான.
Robustness, *s.* பலம், திடம்.
Rochet, *s.* கண்காணியாருடையவெள்ளை நிலையங்கி.
Rock, *s.* கன்மலை, மலை.
1. *Pigeons or doves are of several sorts, as wood pigeons and rock pigeons,* காட்டுப்புறாக்களென்றும் மலைப்புறாக்களென்றும், புறாக்களிலேவிதம்விதமாயிருக்கின்றன.
2. *Strength,* பலம்.
3. *Protection, defence, A scriptural sense. Though the reeds of Egypt break under the hands of him that leans on them, yet the rock of Israel will be an everlasting stay;* எகிப்துவின்நாணல் தன்மேற்சார்ந்தவன் விழவொடியுமென்றாலும் இஸ்ரவேலின் கன்மலை சதாநித்திய தஞ்சமாயிருக்கும்.
Rock, *v. a.* தாலாட்டுகிறது, அசைக்கிறது, ஆட்டுகிறது.
a cradle, தொட்டிலாட்டுகிறது, ஏணையாட்டுகிறது.
Rock, *v. n.* ஆடுகிறது, அசைகிறது.
as a tree, ஆடியசைகிறது.
Rockcrystal, *s.* பளிங்குக்கல்.
Rocket, *s.* வாணம்.
wheel rocket, சக்கரவாணம்.
Rockiness, *s.* வைரம், உரப்பு.
Rocking, *s.* ஆட்டம், அசைவு.
Rocksalt, *s.* மலையுப்பு.
Rocky, *adj.* கற்பாறையான, கல்லான.
strata, கற்பாறை.
Rod, *s.* கோல், தடி, மிலாறு.
of a weaver's loom, நெய்வோர்கருவியிலொன்று.
1. *An instrument for measuring,* அளவுகோல்.
2. *An instrument of correction made of twigs tied together,* பிரம்பு, மிலாறு, கழி.
Rodomontade, *s.* வீண்பேச்சு, வெறும்பெருமை, வீறாப்பு, தலையரட்டல், வீம்பாட்டம்.
Rodomontade, *v. n.* வீறாப்புக்காட்டுகிறது, வெறும்பெருமைபேசுகிறது.
Roe, *s.* மீன்சினை, பெண்மான்.
Roebuck, *s.* கலைமான, ஓர்மான.
Rogue, *s.* கள்ளன், திருடன், சூதன்.
Roguery, *s.* திருட்டுத்தனம், கள்ளத்தனம், சூதுவாது.
Roguish, *adj.* *Vagrant, vagabond,* போக்கிரித்தனமுள்ள.
Roguishly, *adv.* போக்கிரித்தனமாய்.
Roguishness, *s.* போக்கிரித்தனம், கள்ளத்தனம்.
Roil, *v. a.* கலக்குகிறது, அலைக்கழிக்கிறது.
Roll, *s.* 1. *The act of rolling, the state of being rolled,* சுருள், சுருணை, சுருட்டப்படுவது, உருட்டல், உருளல்.
2. *The thing rolling,* உருளுவது.

3. *Writing rolled upon itself, a volume,* புத்தகச்சுருள், புத்தகம், சுருணை, ஓலைச்சுருணை.
4. *A round body rolled along, a cylinder,* உருண்டுதிரண்டவடிவம்.
5. *Public writing,* கணக்குச்சுருணை. தஸ்தாவசிக்கட்டுகள்.
6. *A register, a catalogue,* இடாப்பு, அட்டவணை.
7. *Chronicle,* ஞாபகக்குறிப்பு, நாள்வட்டசங்கதி, தினக்குறிப்பு, ஞாபகசிலம்.

Roll, *v. a.* சுற்றுகிறது, உருட்டுகிறது.
with fingers, உண்டையுருட்டுகிறது, சுருட்டுகிறது.

Roll, *v. n.* சுழலுகிறது, உருளுகிறது.
1. *To run on wheels,* உருளைமேலோடுகிறது.
2. *To perform a periodical revolution,* சுற்றிவருகிறது.
3. *To float in rough water,* தள்ளம்பாறுகிறது, அலைமோதுகிறது.
4. *To move as waves or volumes of water,* அலைமோதுகிறது, அலையடிக்கிறது.
5. *To fluctuate, to move tumultuously,* தளம்புகிறது, சலந்திரண்டுதத்தளிக்கிறது.

Roller, *s.* உருளுவது, சுழலுவது, உருளை.
for printing press, மையுருளை.
for smoothing land, பரம்புருளை.
for a weaver's loom, படைமரம்.

Rolling, *s.* உருட்டு, சுழலல்.
of a vessel, கப்பலாட்டம், தோணியலைவு.

Rollingpress, *s.* ஓர்அச்சுஎந்திரம்.

Romance, *s.* கட்டுக்கதை, நாடகவழக்கம், கற்பிதமானகதை.

Romance, *v. n.* கட்டுக்கதைகட்டுகிறது.

Romancer, *s.* கட்டுக்கதைகட்டுவோன்.

Romantic, *adj.* *Resembling the tales of romances,* கட்டுக்கதையான, கட்டுவிசேஷசம்பந்தமான, பொய்யான, கறபிதமான.
2. *Improbable, false,* நம்பக்கூடாத.
3. *Fanciful, full of wild scenery,* வெறுந்தோற்றமான, பிராந்தியான.

Romanticness, *s.* வீண்நினைவு, வெறுநினைவு, பிராந்திமை.

Romp, *s.* சிறுக்கி.

Romp, *v. n.* துள்ளுகிறது, வம்பாட்டங்கொள்ளுகிறது.

Rood, *s.* ஓர்அளவு.

Roof, *s.* கூரை, மேற்கூரை, மேல்வீடு.
arched, வளைவாய்க்கட்டினமேற்கூரை.
thatched, விழற்கூரை.
plastered, சாந்துபூசினமுகடு.
sloping, தாழ்வாரம், சாய்ப்பு, இறக்கம்.
het, தளம்.
of the mouth, அண்ணம்.
of a Palankeen or *carriage,* பன்றுங்கு, பல்லாக்கின்மேல்த்தட்டு.

Roof, *v. a.* கூரைகட்டுகிறது, கூரைமூடுகிறது.

Roofing, *s.* மூடுதல்.

Roofless, *adj.* கூரையில்லாத, திறந்த.

Rook, *s.* ஓர்காக்கை, அண்டங்காக்கை.

Room, *s.* இடம், தலம்.
of a house, அறை, அறைவீடு.
upper, மேலறை.
under ground, cave, &c. கீழறை.
to take room, இடங்கொள்ளுகிறது,
to make room, ஒத்திக்கொள்ளுகிறது, இடைந்துபோகிறது, தள்ளிநிற்கிறது, இடங்கொடுக்கிறது.

Roomy, *adj.* *spacious, wide, large,* அகன்ற இடமுள்ள, விசாலமான.

Roost, *s.* பறவையுறங்குமிடம்.

Roost, *v. n.* தங்குகிறது.

Root, *s.* வேர், கிழங்கு,
of the tongue, அடிநா.
in algebra, மூலம்.

Root, *v. a.* வேர்பதியவைக்கிறது, நடுகிறது.

Root, *v. n.* வேரூன்றுகிறது, வேர்கொள்ளுகிறது.
to be rooted up, அடியற்றுப்போகிறது. நாசமாகிறது, நிருமூலமாகுகிறது.

Rope, *s.* கயிறு.
dancer, தொம்பன், தொம்பக்கூத்தாடி.

Ropiness, *s.* பசை, பிசுபிசுப்பு.

Ropy, *adj.* *viscous, tenacious, glutinous,* வழுவழுப்புள்ள, பிசுபிசுப்புள்ள.

Ropewalk, *s.* கயிறுதிரிக்கிறசாலை.

Rosary, *s.* செபமாலை, தலைமாலை, உருத்திராட்சமாலை.

Rose, *s.* உரோசாப்பூ.

white, வெள்ளைரோசா.
China, சீனரோசா.
under the rose, இரகசியமாய், அந்தரங்கமாய்.
Roseate, *adj.* உரோசாப்பூவின்வர்னமான.
Rosewater, *s.* பன்னீர். உரோசாப்பூவாசனையூட்டியநீர்.
Rosewood, *s.* ஓர்மரம்.
Rosin, *s. Inspissated turpentine, a juise of the pine*, குங்கிலியம், பிசின், உரோசனம்.
Rosin, *v. a.* குங்கிலியம்பூசுகிறது.
Rosiness, *s.* உரோசாப்புட்பத்தின் தன்மையுள்ளது.
Rostrated, *adj.* மூக்குள்ள.
Rostrum, *s.* பட்சியின்மூக்கு, அலகு.
1. *The beak of a ship*, கப்பலின்நுனி.
2. *The scaffold whence orators harangued*, பிரசங்கமேடை.
3. *The pipe which conveys the distilling liquor into its receiver in the common alembics*, வடிகுழல்.
Rosy, *adj.* உரோசாபுட்பம்போன்ற, நேர்த்தியான.
Rot, *s.* அழுகல், ஓர்நோய், சொட்டை.
Rot, *v. a.* உளுத்துப்போகப்பண்ணுகிறது, சொட்டையாக்கிறது, அழுகிப்போகிறது.
Rot, *v. n.* அழுகிப்போகிறது, கெடுகிறது, உளுக்கிறது.
Rotary, *adj.* சுழலுகிற, சுற்றுகிற.
to be rotary, சுழலுகிறது, உருளுகிறது.
Rotation, *s.* சுழலல், உருண்டைபோலுருளல்.
Rotative, *adj.* சுற்றுகிற, உருளுகிற.
Rotatory, *adj.* சுழலுகிற, சுற்றுகிற.
Rote, *s. words uttered by mere memory without meaning, memory of words without comprehension of the sense;* வெறும்பாடம், வாய்ப்பாடம், கருதஅறித்தெரியாமல், மனனம்பண்ணுதல், அவதானம்.
Rotten, *adj.* அழுகின, அழுகலான, உளுத்த, சொத்தையான, சொத்தை, சொள்ளை.
Rottenness, *s.* உளுத்ததன்மை.
Rotund, *adj. Round, circular*, வட்டமான.
spherical, உருட்சியான, உருண்டையான, கோளகையான.
Rotundity, *s.* உருண்டை, உண்டை.
Rotundo, *s.* வட்டமாய்க்கட்டியவீடு.

Rouge, *s.* சிவப்பு, சிவப்புவன்னம்.
Rouge, *v.* சிவப்புப்பூசுகிறது.
Rough, *adj.* கரடுமுரடான, பரும்படியான.
person, தடியாள், முரண்டன், முண்டன்.
stone, சொறிக்கல்.
as an edge, கருக்கு, பல்.
copy, பிழைப்பிரதி.
as hair, சிலும்பினமயிர்.
disposition, முரட்டுத்தனம்.
and uneven road, கரடுமுரடானவழி.
manners, காட்டுத்தனமானசெய்கிரியைமுதலியபழக்கம்.
draught, மேற்பிரதி, மேற்பாடம்.
trot, நல்லநடை.
sea, கொந்தளிக்கிறகடல், மும்மரித்தகடல்.
storm, பெரும்பிசல்
voice, தடிக்குரல், கனத்தகுரல்.
wind, கடுங்காற்று, உரத்தகாற்று.
work, பரும்படியானவேலைப்பாடு.
Roughcast, *v. a.* பரும்படியாய்ச்செய்கிறது, சுண்ணாம்புமணலும்பரும்படியாய்ப்பூசுகிறது.
Roughcast, *s.* பரும்படிவேலை, மட்டிசுவேலை.
Roughen, *v. a.* பரும்படியாக்கிறது, கடினப்படுத்துகிறது.
Roughly, *adv.* கரடுமுரடாய்.
Roughness, *s.* கரடுமுரடுநாட்டுப்புறத்துத்தன்மை
Round, *adj.* 1. *cylindrical*, திரண்ட, உருண்ட.
2. *Circular*, வட்டமான, உண்டையான.
3. *Spherical, orbicular*, கோளமான, உண்டைவடிவான.
and round, சுற்றிச்சுற்றி.
to become round, திரளுகிறது, உண்டையாகிறது.
sum, பெருந்தொகை.
Round, *s.* 1. *A circle, a sphere, an orb*, உண்டை, வட்டம், கோளம்.
2. *Rundle, step of a ladder*, ஏணிப்படி, நெம்பு.
3. *The time in which any thing has passed through all hands and comes back to the first; hence applied to a carousal*, முறை, ஒழுங்கு, வட்டம், தரம், விசை.
4. *A revolution, a course ending at the point where it began*, ஒருசுற்று, ஓட்டம், நடை.

5. *Rotation, succession in vicissitude,* சுற்றிச்சுற்றிவரல், மாறிமாறிவரல்.
6. *A walk performed by a guard or officer to survey a certain district,* வட்டம், காவற்காரன்சுற்றிப்பார்க்கிறஊர்வட்டம், பாரிபோகுதல்.

Round, *v. a.* சுற்றுகிறது, சுழற்றுகிறது.
Round, *v. n.* திரளுகிறது, சுழலுகிறது.
Round, *adv.* சுற்றி, எங்கும்.
about, சூழவர, எவ்விடத்தும்.
All the year round, வருஷமுழுதும்.
Round, *prep.* சூழ, சுற்ற.
Round-about, *adj.* சுற்றிலும்.
A round about way, சுற்றுவழி.
Round house, *s.* ஓர்காவற்கூடம், கப்பலில்ஓர்கூடம்.
Roundish, *adj.* வட்டமான, உண்டையான.
Roundly, *adv.* வட்டமாய்.
Roundness, *s.* உண்டைவடிவம்.
Rouse, *v. a.* எழுப்பிவிடுகிறது, கிளப்பிவிடுகிறது.
Rouse, *v. n.* எழும்புகிறது, ஊக்கங்கொள்ளுகிறது.
Rout, *s.* 1. *A clamorous multitude, a rabble, a tumultuous crowd,* போக்கிரிகள்கூட்டம், இழிந்தோர், காவாலிகள்.
2. *Confusion of an army defeated or dispersed,* படைமுறிவு, சேனைபின்னிடைதல், முறியடிக்குதல்.
3. *Road, course,* தெரு, நடை.
Rout, *v. a.* ஓட்டிவிடுகிறது, துரத்தியடிக்கிறது.
to become routed, கலைந்துபோகிறது, நிலைகுலைந்தோடுகிறது.
Route, *s.* வழி, பாதை, பிரயாணம், கூத்தாட்டம்.
Routine, *s.* கிரமம், முறை.
Rove, *v. n.* அலைந்துதிரிகிறது.
Rover, *s.* திக்கற்றவன், தேசாந்திரி.
Row, *s.* வரிசை, அடுக்கு, பத்தி.
Row, *v. a.* தண்டுவலிக்கிறது.
Row, *s.* அமளி, சந்தடி, கொந்தளிப்பு.
Rowel, *s. The points of a spur running on an axis,* குதிரைமுள், சப்பாத்துக்குதிகாலில்மாட்டிகுதிரையைகுத்துகிறமுள்.
Royal, *adj.* இராசாவுககுரிய, இராசரீகமான.
city, இராசதானி, நகரம்.
presence, இராசசமுகம், கொலு.
attire, style, இராசகோலம்.

Royally, *adv.* இராசரிக்கமாய்.
Royalty, *s.* 1. *Kingship, character or office of a king,* இராசத்தன்மை, இராசாங்கம்.
2. *Emblems of royalty,* இராசக்குறிப்புகள், இராச அடையாளங்கள், அரசச்சின்னம்.
Rub, *s.* 1. *Friction, act of rubbing,* தேய்ப்பு, உரைஞ்சல்.
2. *Inequality, of ground, that hinders the motion of a bowl,* கரடுமுரடு.
3. *Collision, hinderance, obstruction,* இடி, தடை.
Rub, *v. a.* துடைக்கிறது, தேய்க்கிறது
Rub, *v. n.* உரைஞ்சுகிறது, தேய்க்கிறது.
out, துடைக்கிறது, சுரண்டிப்போடுகிறது.
over, துலககுகிறது, விளக்குகிறது.
Rubber, *s.* துடைப்போன், சாணைக்கல், அரம்.
India rubber, ஓர்பிசின்.
Rubbing, *s.* துடைப்பு, தேய்பபு.
Rubbish, *s.* குப்பை, கழிகடை, கழிசடை.
Rubicund, *adj.* சிவப்புக்கொண்ட, சிவப்புககுரிய
Rubric, *s.* சட்டம், சட்டதிட்டம், முறை.
of the church, பூசைமுறை, தேவாராதனைமுறை, அனுஷ்டானகிரமம்.
Ruby, *s.* மாணிக்கம், கெம்பு.
Ruby, *adj.* சிவத்த, சிவப்பான.
Rudder, *s.* சுககான்.
Ruddiness, *s.* சிவப்பு.
Ruddy, *adj.* சிவப்பான, செழிப்பான.
Rude, *adj.* மௌடியமான, மரியாதையில்லாத, படியாத, வாய்மைசீர்மையற்ற,
person, காட்டாள்.
to be rude, துடுககுப்பண்ணுகிறது.
Ruddle, சிவப்புமண், செம்மண்.
Rudely, *adv.* முண்டாய், முரடாய், அவமரியாதையாய், அபசாரமாய்.
Rudeness, *s.* மூர்க்கம், முரட்டுத்தனம், படியாமை, அபசாரம்.
to a superior, அவமரியாதை.
Rudiment, *s.* 1. *The first principles, the first elements of a science,* சாத்திரங்களின் அடிப்படையானஇலக்கணம், மூலாதாரம்.
2. *The first part of education,* முதற்படிப்பு, நூலாதாரப்படிப்பு, அடிப்படையான படிப்பு.

3. *The first inaccurate unshapen beginning or original of anything*, யாதேனுமொன்றினுடையமுதலெடுப்பு, துவக்கம், மூலம், ரூபீகரமேற்படாதபிண்டம்.
Rudimental, *adj*. முதலான, ஆதியான, துவக்கமான, மூலாதாரமான, நூலாதாரமான.
Rue, *s*. ஓர்பூண்டு.
Rue, *v. a.* துக்கப்படுகிறது, புலம்புகிறது.
Ruefully, *adv*. துக்கமாய், கிலேசமாய்.
Ruff, *s*. கழுத்துக்குட்டை.
Ruffian, *v*. தூக்குணி, தலைகொண்டுபோறபயல், துஷ்டன்.
Ruffle, *v. a.* கலைத்துப்போடுகிறது, குளறுபடியாக்குகிறது, குசகம்வைக்கிறது, சுருக்குகிறது.
Ruffle, *s*. குளறுபடி.
Rug, *s*. கம்பளி, கம்பளம், சமுக்காளம்.
Rugged, *adj*. கரடுமுரடான.
ground, கரடுமுரடானதரை.
road, மேடும்பள்ளமுமானவழி.
Ruggedness, *s*. கரடுமுரடு, கடுமை, நாட்டுப்புறத்துத்தன்மை.
Ruggedly, *adv*. கரடுமுரடாய்.
Ruin, *s*. கேடு, அழிவு, கெடுதி.
ruins, இடிசுவர், பாழ, குட்டிச்சுவர்.
Ruin, *v. a.* கெடுக்கிறது, அழிக்கிறது.
a family, குடிகெடுக்கிறது.
to be ruined in circumstances, கெட்டழிந்துபோகிறது, சீர்கெடுகிறது, நிலைகுலைகிறது.
Ruin, *v. n.* அழிகிறது, நாசமாகிறது.
Ruination, *s*. சங்காரம், அழிவு, நாசம், சேதம்.
Ruinous, *adj*. அழிந்த, பாழான, நாசமான.
Ruinously, *adv*. நாசமாய், கெடுதியாய்.
Ruinousness, *s*. பாழ், கெடுதி, நாசமானதன்மை.
Rule, *s*. ஒழுங்கு, சட்டம், பிரமாணம், திட்டம்.
as government, ஆளுகை, இராச்சியபாரம்.
of grammar, விதி, சூத்திரம்.
of conduct, ஒழுக்கம், ஆசாரம்.
of three, ஒருகணக்கு.
exception to, ஒழிபு, மாட்டேற்று, விதிக்குப்புறனடை,
an instrument for drawing lines, மட்டப்பலகை, சட்டப்பலகை, நூல்.
Rule, *v*. ஆளுகிறது, ஆண்டுகொள்ளுகிறது, நடத்துகிறது.
Ruler, *s*. ஆண்டவன், அதிகாரி, தலைவன்.
as a straight stick, சட்டப்பலகை, மட்டப்பலகை, நூல், நேரானகோல்.
Rumble, *s*. இரைச்சல், கோஷிடம்.
Rumble, *v. a.* உறுமுகிறது, கோஷிடிக்கிறது, குறுகுறென்றிரைகிறது.
Rumbling, *s*. இரைச்சல், குமுறுகை.
Ruminant, *adj*. அசைபோடுகிற.
Ruminate, *v*. To chew the cud, அசைபோடுகிறது.
To muse, to think again and again, நினைக்கிறது, நினைத்துநினைத்துப்பார்க்கிறது, கேட்டவைநினைக்கிறது.
Rummage, *v*. தேடித்தேடிப்பார்க்கிறது, பிரட்டிப்பிரட்டித்தேடுகிறது.
Rumor, *s*. *Flying or popular report*, கேள்விப்பேச்சு, அலம்பல், ஓமல், கடைப்பேச்சு, சமாச்சாரம்.
Rumor, *v. a.* கட்டிவிடுகிறது, கட்டுவிசேஷம்பரப்புகிறது.
Rumored, *prep*. ஊரடிபட்ட, அலம்பல்பட்ட.
Rump, *s*. விலங்கின்முதுகெலும்பின்முளி, ஆசனம், இருப்பிடம், குண்டி, புட்டம்.
Run, *s*. ஓட்டம்.
run of a passage, வாக்கியநடை, மூலபாடம், வாக்கியத்தின்சரியானவார்த்தைகள்.
Run, *v. a.* ஓட்டுகிறது, செலுத்துகிறது.
a vessel with the wind on shore, சாய்க்கிறது, சாயவிடுகிறது, தட்டவைக்கிறது.
as cast or found, உருக்கிவார்க்கிறது.
as baste, நூலோட்டுகிறது.
to run down, விரட்டியடிக்கிறது, நொறுக்கியடிக்கிறது, கீழேவிழப்பண்ணுகிறது.
Run, *v. a.* 1. *To move swiftly, to make haste, to pass with very quick pace*, ஓடுகிறது.
2. *To contend in a race*, பந்தயமோடுகிறது
3. *To go away by stealth*, திருட்டளவாய்ப்போய்விடுகிறது.
4. *To emit or let flow any liquid*, ஊற்றுகிறது, வடிக்கிறது.
5. *To be in force*, வழங்குகிறது.
6. *To be generally received*, செல்லும்படியாயிருக்கிறது, பலருமொப்பும்படியாயிருக்கிறது, செலாமணியாயிருக்கிறது.

7. *To be predominant*, மிகுதியாயிருக்கிறது, விசேஷித்திருக்கிறது.
into, உருவுகிறது, தைக்கிறது.
through, ஊடுருவுகிறது.
as ink in paper, ஊறுகிறது.
away, ஓடியொளிக்கிறது.
as roots, வேரோடுகிறது.
as a creeper, படருகிறது, கொடிமுதலியவை படருகிறது.
as water, நீர்பாய்கிறது, தண்ணீர்புறப்படுகிறது.
about, ஓடித்திரிகிறது.
aground, தறைதட்டுகிறது, நிலந்தட்டிப்போகிறது.

Runagate, *s*. போக்கிரி, வஞ்சகன, திருட்டுப்பயல்.

Runaway, *s*. *One that flies from danger, one who departs by stealth, a fugitive*, மோசத்துக்குத்தப்பிப்போகிறவன், திருட்டளவாய்ப் போய்விடுகிறவன், ஓடினவன், ஒளித்தவன்.

Rundle, *s*. ஏணிப்படி.

Runner, *s*. கொடி.
as messenger or post man, தூதன், தபால்காரன்.

Running, *s*. ஓட்டம்.

Rupee, *s*. ரூபாய், ஓர்நாணயம்.

Rupture, *s*. உடைதல், உடைவு, நின்றுவிடல், முறிவு.
1. *Hernia; preternatural eruption of the gut*, குடல்வாதம், வளி, வாதம்.
to have a rupture, ஓதமிறங்கிறது.

Rupture, *v. a. To break, to suffer disruption, to burst*, வெடிக்கிறது, உடைக்கிறது.

Rural, *adj*. நாடடுக்கடுத்த, நாட்டுப்புறத்துக்குரிய.

Ruse, *s*. தந்திரம், வித்தை, உபாயம்.

Rush, *s*. 1. *a plant*, ஒருபூண்டு, நாணல், கோரை.
2. *any thing proverbially worthless*, கடைகெட்டது, துரும்பு, அற்பமானது.

Rush, *v. a*. பாய்கிறது, பெருகுகிறது.
on or against, தாக்குகிறது, மொத்துகிறது.
down, பாய்கிறது.

Rushing, *adj*. பாய்கிற, மோதுகிற.
of water, நீரிரைச்சல், சலசலப்பு.

Rushy, *adj*. *abounding with rushes*, நாணலான, நாணல்நிறைந்த.

Rusk, *s*. *Hard bread for stores*, காய்ந்தரொட்டி, ஓர்பலகாரம்.

Russet, *s*. வெண்மைகலந்தசிவப்பு.

Rust, *s*. கறை, துரு, களிம்பு.

Rust, *v*. துருப்பிடிக்கிறது, கறைபிடிககிறது.

Rustic, *s*. நாட்டான், நாட்டுப்புறத்தான்.

Rustic, *adj*. நாட்டுப்போங்கான.

Rusticate, *v. a*. *To reside in the country*, நாட்டில்குடியிருக்கிறது.
To banish into the country, நாட்டுக்குள்துரத்துகிறது, மாணுக்கனைநாட்டுக்குள்துரத்துகிறது. (இங்கிலிஷ்தேசத்துக்கல்விக்கூடங்களில்வழங்குமோர்சொல்.)

Rustication, *s*. நாட்டில்வாசம், கல்விச்சாலையிலிருந்துதுரத்திநாட்டில்வாசஞ்செய்யப்பண்ணுந்தண்டனை.

Rusticity, *s*. *Qualities of one that lives in the country, simplicity, artlessness, rudeness, savageness*, நாட்டுப்புறத்துமாதிரி, பேதமை, முரட்டுத்தனம், காட்டுத்தனம்.

Rustily, *adv*. கறையாய், துருவாய்.

Rustiness, *s*. கறை, களிம்பு, துரு.

Rustling, *s*. சலசலத்தல், கடகடத்தல், விண்விண்ணெனல்.

Rustle, *v. a*. ஈரடுக்கொலியொலிக்கிறது, கடகட சலசலசரசரவென்கிறது

Rusty, *adj*. கறைபிடித்த, துருப்பிடித்த.

Rut, *s*. மதம், மான்புணர்ச்சி, உருளையோடியபதிவு,

Rut, *v. a*. மான்புணருகிறது.

Ruthful, *adj*. துக்கமுள்ள, திற்பந்தமான, இரக்கமான.

Ruthfully, *adv*. துக்கமாய், சஞ்சலமாய், விசனமாய்.

Ruthless, *adj*. கொடூரமான, கொடிய, கொடுமையுள்ள.

Ruthlessness, *s*. இரக்கமில்லாமை, வன்குணம்.

Rye, *s*. ஒருபெரும்படியானகோதுமை, சிறுகோதுமை.

S

Sabaoth, *s. Heb.* கணங்கள், சேனைகள், கூட்டங்கள்.
Holy Lord God of Sabaoth, that is, Lord of hosts, சேனைகளின்பராபரனாகியகோவா.
Sabbath, *s.* களையாறல், ஓய்வு, ஓய்வுநாள.
Sabbath-breaker, ஓய்வுநாளைமீறுகிறவன்.
Sabbatical, *adj.* ஓய்வுநாளுக்குரிய, தன்னீங்கனுக்குரிய, விடுதலையான, சுயாதீனமான.
Sable, *adj.* கறுப்பான, கன்னங்கறேரொன்றிருக்கிற. *s.* கீரிப்பிள்ளைபோலொருமிருகம்.
Sabre, *s.* ஓர்வாள், கைவாள்.
Sabre, *v. a.* வாளால்வெட்டுகிறது, கத்தியால்வெட்டுகிறது.
Saccharine, *adj.* சருக்கரைக்குணமுள்ள, சீனிபோலொத்த, தித்திப்புள்ள.
Sacerdotal, *adj.* குருவுக்குரிய, ஆசாரியத்துவத்துக்கடுத்த, குருத்தன்மையுள்ள, குருபீடத்துக்குரிய.
Sack, *s.* பை, சாக்கு, கச்சந்தி, கோணி.
as pillage, கொள்ளை.
Sack, *v. a.* கொள்ளையாடுகிறது, கொள்ளையிடுகிறது.
Sackbut, *s.* ஓர்வகையூதுகுழல்.
Sackcloth, *s.* இரட்டு, கோணிப்புடவை.
Sacking, *s.* கொள்ளை, சூறை.
as canvas, கோணிச்சீலை, கித்தான்.
Sacrament, *s.* ஆணை, ஞானமானதிரவியம், ஞானதிரவியம்.
of baptism, ஞானஸ்நானம், திருமுழுக்கு, ஞானமுழுக்கு, தீட்சை.
of the Lord's Supper, Eucharist, the Holy communion, நற்கருணை, நன்மை.
Seven Sacraments of Popery, பாப்புமதஸ்தருடைய ஏழுதிரவியங்களாவன:-ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், தேவநற்கருணை, பச்சாத்தாபம், அவஸ்தைப்பூசுதல், குருத்துவம், மெய்விவாகம்.
Sacrament is an outward and visible sign of an inward and spiritual grace, ஞானதிரவியமாவதென்னவென்றால் ஆவிக்குரிய உள்ளானகிருபையின் புறம்பான காட்சியடையாளமாம்.
Sacred, *adj.* பரிசுத்தமான, தெய்வசம்பந்தமுள்ள, தெய்வீக, கொலைக்கப்படாத.
place, தேவஸ்தலம், பரிசுத்தஸ்தானம், பரிசுத்தஸ்தலம்.
writings, வேதாகமம், திவ்வியப்பிரபந்தங்கள்.
water, தீர்த்தம், பரிசுத்தசலம்.
Sacredly, *adv.* தெய்வீகமாய், பரிசுத்தமாய்.
Sacrifice, *s.* பலி, காணிக்கை.
Any thing destroyed or quitted for the sake of something else, ஒன்றுக்காக மற்றொன்றையிழந்துவிடுவது, *as he made a sacrifice of his friendship to his interest,* அவன்தற்பொழிவுக்காக தன்சிநேகத்தையிழந்தான், சிநேகத்தைப்பெரிதுபண்ணினனில்லையென்றதுபோல்.
of a horse, அசுவமேதம, குதிரையாகம்.
to fall a sacrifice, பலியாய்ப்போகிறது, இரையாய்ப்போகிறது.
Sacrifice, *v.* பலியிடுகிறது, பலிகொடுக்கிறது.
property, கெடுத்தழிக்கிறது, வீண்செலவுபண்ணுகிறது.
voluntarily, மனதாரதத்தம்பண்ணுகிறது, செலுத்துகிறது.
Sacrilege, *s. The crime of appropriating to himself what is devoted to religion, the crime of robbing heaven, the crime of violating or profaning things sacred,* தெய்வீகமானவற்றை யபகரித்தல், பரிசுத்தமானதைக்கொள்ளையிடல், பரிசுத்தத்திற்கு அபசாரம், தெய்வத்துக்கபசாரமாதல.
Sacrilegious, *adj. Violating things sacred,* தெய்வீகமானவற்றிற்குஅபசாரமான, அபசாரமுள்ள.
Sacrilegiously, *adv.* அபசாரமாய்.
Sad, *adj.* 1. விசனமான, துக்கமான.
2. *Habitually melancholy, heavy, gloomy, not gay, not cheerful,* குறுவிசாரமான, குறுவின, பீடையான, மனப்பீடையான, கோட்டரவான.
3. *Afflictive, calamitous,* துன்பமான, இடிசாமமுள்ள.
To appear sad, குறுவிசாரங்கொண்டிருக்கிறது, பீடைபிடித்தாற்போலிருக்கிறது.
Sadden, *v. a.* விசனப்படுத்துகிறது.
Saddle, *s. The seat which is put upon the horse for the accommodation of the rider,* சீனி, சேணம்.

for an elephant, அம்பாரி, அவுதா.
girth, இறுக்குவார், குதிரையினிடைக்கட்டு.
Saddle, *v. a.* சேணம்போடுகிறது, சீனிகட்டுகிறது.
Saddle-bag, *s.* பொதி.
Sadly, *adv.* துக்கமாய், துயரமாய்.
as calamitously, miserably, பரிதாபமாய்,நிர்ப்பந்தமாய்.
Sadness, *s.* துக்கம், துயரம்.
as dejection of mind, மனமடிவு.
of countenance, முகவாட்டம், முகங்குருவல்.
Safe, *adj.* மோசமில்லாத, பத்திரமான.
Safeguard, *s. Defence, protection, security*, பாதுகாப்பு, காவல், உயிர்த்துணை.
Safely, *adv.* பத்திரமாய், மோசமில்லாமல்.
Safety, *s. exemption from danger*, பத்திரம், பதனம், சேதமோசமில்லாமை.
Saffron, *s.* மஞ்சள்.
Sag, *v. n.* பளுவாய்த்தொங்குகிறது.
Sagacious, *adj.* 1. *Quick of scent*, மோப்பம்பிடிக்கிற.
2. *Quick of thought, acute in making discoveries*, தீட்சண்ணியபுத்தியுள்ள,தீவிரபுத்தியுள்ள,கூரியபுத்தியுள்ள, யூகிப்பான.
to be sagacious, கூர்ந்தபுத்தியாயிருக்கிறது.
Sagacity, *s.* யூகிப்பு, அதிதீவிரபுத்தி, தீட்சண்ணியபுத்தி.
Sage, *s.* ஞானி, தபோதனன், வேதாந்தி.
a plant, ஓர்பூண்டு.
Sage, *adj.* விவேகமான, ஞானமான.
Sagely, *adv.* விவேகமாய், ஞானமாய்.
Sageness, *s. gravity, prudence*,ஆழ்ந்தகுணம், விவேகம், பெருந்தன்மையானகுணம்.
Sagitarius, *s.* தனு, தனுராசி.
Sail, *s.* கப்பற்பாய்
Sail, *v. a.* பாய்வலித்தோடுகிறது, கப்பலோடுகிறது.
along the coast, கரைபிடித்தோடுகிறது.
Sailing, *s.* கப்பலோட்டம், கப்பற்போக்கு.
Sailor, *s. a seaman, one who practices* or *understands navigation*, கப்பலோட்டி,மாலுமி, மாலுமிநூலுணர்ந்தோன், கப்பற்காரன்.
Saint, *s.* தேவபத்தன்,பரிசுத்தன்,பரிசுத்தவான்.
Saintly, *adv.* பத்தியாய், தேவபத்தியாய்.

Sake, *s.* 1. *Final cause, end, purpose*, நிமித்தம், பொருட்டு, முகாந்திரம், மூலம்.
2. *Account, regard to any person or thing*, குறித்து, பற்றி.
Salacious, *adj.* காமமுள்ள, காமவிகாரமுள்ள.
Salammoniac, *s.* நவட்சாரம்.
Salary, *s.* சம்பளம், கூலி.
Sale, *s.* விற்றல், விக்கிரயம், ஏலம்.
of goods, பண்டங்கள், விற்பனை.
for sale, வியாபாரத்துக்கு விலைகரு, விற்கிறத்துக்கு.
bill of sale, விக்கிரயச்சீட்டு.
Salient, *adj.* துள்ளுகிற, அடித்தடித்துக்கொண்டுதுள்ளுகிற, குதிக்கிற.
Saline, Salinous, } *adj.* உப்பான, உவர்ப்பான, கரிப்புள்ள.
Saliva, *s.* உமிழ்நீர், எச்சி, வாயூறல்.
Salivate, *s.* வாயிலெச்சியூறுகிறது, உமிழ்நீர் கூட்டுகிறது, வாய்வெந்துபோகிறது.
Salivation, *s.* வாயூறல்,எச்சியூறல்,வாய்வேவுகை.
Sallow, *adj.* வெளுப்பான, பசலையான.
to be sallow or bloated, குளுப்பைதட்டியிருக்கிறது.
Sallowness, *s.* பசலை, வெளுப்பு, குளுகுளுப்பை.
Sally, *s.* 1. *Eruption, issue from a place besieged, quick egress*, சீக்கிரம்வெளிப்புறப்படல், விட்டோடல், கம்பிவாங்கல், முத்திகைபோடப்பட்டவர்கள் சத்துருவின்மேல் புறப்படுதல்.
of wit, எடுப்புப்பேச்சு, நொநொடிப்பு, நொடிப்புப்பேச்சு, குச்சித்திரப்பேச்சு.
Sally port, *s. Gate at which sallies are made*, நுழை, நுழையாயிருக்கிறவாயில், திட்டிவாசல்.
Sally, *v. n.* பாய்கிறது, புறப்படுகிறது.
Saloon, *s.* மண்டபம், கொலுமண்டபம்.
Salt, *s.* உப்பு, கரியுப்பு.
marsh, கழிக்கனா, உப்பளர்.
rock, இந்துப்பு, கல்லுப்பு.
in lumps, கல்லுப்பு.
superior, கம்பியுப்பு, கல்லுப்பு.
3. *To pass inadvertently,* தெரியாமற்போய்விடுகிறது, நழுவுகிறது.
4. *To pass silently and gradually from good to bad,* நாளடைவிலே நன்மையினின்று தீமையில்விழுகிறது, நாளுக்குநாள்கீழ்க்கிறங்குகிறது.
5. *To pass with a free and gentle course or flow,* தண்ணீர்போல்வழிந்தோடுகிறது, மெதுவிலேபோகிறது.
6. *To be not firm,* உறுதியில்லாதிருக்கிறது, நிலைகெடுகிறது.
7. *To go down a precipice,* சரிகிறது.
Sliding, *s.* சரிவு, சறுக்கு, நழுவல், வழுக்கல்.
rule, நீட்டக்குறுக்கற்றஅளவுகோல்.
Slight, *adj.* 1. *Small worthless, inconsiderable,* இளப்பான, சின்ன, இலேசான.
2. *Not important, not cogent, weak,* அற்ப, வலிமையில்லாத, விசேஷிப்பில்லாத.
3. *Negligent, not vehement, not done with effort,* சாடையான, கடுமையாய்ச்செய்யாத, சற்றுஅசட்டையான, *as, The shaking of the head is a gesture of slight refusal,* தலையையாட்டல்வேண்டாமென்பதற்குச்சற்றேசாடையான அடையாளம்.
Slight, *s.* 1. *Neglect, contempt, act of scorn,* மதியாமை, எண்ணாமை, அசட்டை.
2. *Artifice, cunning practice,* சூது, சாலம், மாயம்.
Slightness, *s.* 1. *Weakness, want of strength,* பலவீனம், நொய்மை, மெலிவு.
2. *Negligence, want of attention, want of vehemence,* அசட்டை, பெரும்படிநடத்தை, மதியாக்குணம்.
Slily, *adv.* தந்திரமாய், உபாயமாய்.
Slim, *adj.* மெல்லிய, நோஞ்சலான.
person, நோஞ்சலாள்.
Slime, *s.* சேறு, குழைசேறு, குழம்பு, குழைவு, கோழை.
in bowels, சீதம், உளைகோழை.
Sliminess, *s.* குழைவு, சகதி.
Slimy, *adj.* குழைவான, குழம்பான, சேறுன.
stools, சீதக்கழிச்சல், சீதமலம்.
to be slimy, குழைதல்.
Sliness, *s.* உபாயதந்திரம்.
Sling, *s.* கவண், குணில்.
Sling, *v. a.* கவண்டெறிகிறது.
Slink, *v. n.* *To steal out of the way,* பதுங்குகிறது, நுழைந்துநழுவுகிறது.
away, ஒளிக்கிறது, மறைக்கிறது.

Slinker, *s.* பதுங்கி, நழுவி.
Slip, *s.* 1. *A long narrow piece,* கீற்று, கீலம், நீண்டதுண்டு,
2. *Error, mistake, fault,* தவறு, குற்றம், வாய்ப்பிசக்கு.
3. *A twig torn from the main stalk,* மிலாறு, குச்சி, சிராய்.
4. *An escape, a desertion,* நழுவுதல், காணமற்போதல், தலைமறைந்துநீங்கல்.
5. *The act of slipping, false step,* கால்நழுவல், கால்தவறல்.
knot, சுருக்கு.
of the tongue, நாக்குப்பிசகு, நாவுதடுமாட்டம், வாய்ப்பிழை, நாக்குப்பிரட்டு,
of cloth, சீலைத்துணி, துணியின்துண்டு.
of the hand, கைப்பிசகு, கைமோசம், கைத்தவறு.
To give one the slip, ஒருதனைவிட்டுமறைந்துபோகிறது.
Slip, *v. a.* 1. *To convey secretly,* இரகசியமாய் விடுகிறது.
2. *To lose by negligence,* அசட்டையினுலிழந்துவிடுகிறது, கைதப்புகிறது.
3. *To part twigs from the main body by laceration,* மிலாறொடிக்கிறது, உரிக்கிறது, கழிக்கிறது.
4. *To escape from, to leave slily,* தப்பியோடுகிறது, தந்தரமாய்த்தப்புகிறது, நழுவுகிறது.
5. *To let loose,* விட்டுவிடுகிறது, தப்பவிடுகிறது, நழுவவிடுகிறது.
Let not this opportunity slip, இந்தசமயத்தைத்தப்பவிடாதே.
Let not one word slip, ஒருசொல்லும்விடாதே.
Slip, *v. n.* வழுக்குகிறது, சறுக்குகிறது.
back, பிசகுகிறது, பின்னிடுகிறது, பின்விழுந்துபோகிறது.
away slily, ஒளிகிறது, பதுங்கிவிடுகிறது, நழுவுகிறது.
as time, பொழுதுகழிக்கிறது.
out of hand, கைநழுவுகிறது.
down, சரிகிறது
off clothes, ஆடைகொலைக்கிறது, ஆடையவிழ்க்கிறது.
through, ஒழுகுகிறது, விழுகிறது.
out, பறிந்துபோகிறது, காணுதொழிகிறது.
Slipper, *s.* பாதகுறடு, தொடுதோல், செருப்பு, சோடு, பாப்பாசு.
Slippery, *adj.* வழுக்கலான, சறுக்கலான.
person, நழுவி, பிடிகொடாதவன்.
slippery tongue, அலப்புவாய்.
Slipperiness, *s.* வழுக்கல், சறுக்கல.
Slipshod, *s.* தொடுசெருப்பு, குதிகாலில்வளைந்துபிடித்திராதசெருப்பு.
Slit, *s.* பிளவு, பிளப்பு, கீற்று.
Slit, *v. a.* பிளக்கிறது, வெடிப்பாக்கிறது, பீறுகிறது, கீறுகிறது.
Sloop, *s. A small ship commonly with only one mast,* சிறுகப்பல், ஒருபாய்மரக்கப்பல்.
Slop, *s.* கலங்கல்நீர், நாற்றமெடுத்தநீர், ஓர்வித அங்கி.
Slop, *v. n.* சிந்துகிறது, தளம்பப்பண்ணுகிறது.
Sloping, *adj. Oblique, not perpendicular. It is generally used of acclivity or declivity forming an angle greater or less with the plane of the horizon,* சாய்வான, சாய்ப்பான, இறக்கமான, கோணமான, அடிவானத்தின் தளமட்டத்தோடுசேர்தநோக்குகையில்கோணலாகிததோற்றுகிறசரிவு.
roof, கூரை, தாழ்வாரம்.
of a verandha, சாய்ப்பு, இறப்பு.
Slope, *v. a.* சரிக்கிறது, சாய்க்கிறது, இறக்குகிறது.
Slope, *v. n.* சரிகிறது, சாய்கிறது, தாழ்கிறது.
Slopingly, *adv.* சரிவாய், சாய்வாய், சாய்பாய்.
Sloppy, *adj. Miry, and wet,* ஈரிப்பான, சேறுந்தண்ணீருமான, சதசதப்பான.
Sloth, *s.* அசதி, அட்டி, மந்தம், அசமந்தம், திமிர், சோமபல்.
the animal, தேவாங்கு.
Slothful, *adj.* சோம்பலுள்ள, திமிர்ப்பிடித்த, அசமந்தமுள்ள.
Slothfulness, *s.* சோம்பு, மந்தம், திமிர்.
Slouched hat, *s.* விரித்துவிட்டபெரியதொப்பி.
Slough, *s. A deep miry place, a hole full of dirt,* சகதிக்குழி, சாக்கடைச்சேறு, அட்டுஉளையானகுட்டை, பாம்பின்சட்டை.
Slough, *v. n.* புண்டுவிழுகிறது, கழலுகிறது, உரிகிறது.

Sloven, *s.* அழுக்குப்பிடித்தவன், அசுத்தன்.
Slovenliness, *s.* அலங்கோலம், சுத்தமில்லாமை. கசம்பிடித்ததன்மை.
Slovenly, *adj.* அசுத்தமான, அவலட்சணமான.
to be slovenly, காலாகோலமாய்த்திரிகிறது.
Slow, *adj.* மெதுவான, தாமதமான, தூங்கிவிழுகிறநடையுள்ள.
pace, மெதுவானநடை.
Slowly, *adv.* மெள்ள, மெள்ளமெள்ள, மெதுவாய், உறக்கமாய்.
Slowness, *s. Smallness of motion, not speed, want of velocity, absence of celerity or swiftness*, மெதுவுத்தன்மை, மந்தம், துரிதமில்லாமை.
Slue, *v. n.* திரும்புகிறது.
Slug, *s.* ஓர்விதநடை.
Sluggard, *s. An idler, a drone*, சோம்பேறி, தூங்குமூஞ்சி.
Sluggish, *adj.* சோம்பலான, தாமதகுணமுள்ள, தூங்கலான.
Sluggishly, *adv.* சோமபலாய், மந்தமாய், தூக்கமாய்.
Sluggishness, *s.* சோம்பல், அசமந்தம்.
of system, வாதம், திமிர்.
Sluice, *s.* மதகு, நீர்க்கால்.
the gate to, நீரடைக்குங்கதவு.
Slumber, *v. n.* தூங்குகிறது, உறக்கங்கொள்ளுகிறது.
Slumber, *s.* தூக்கம், உறக்கம், அரைநித்திரை.
Slumberer, *s.* தூக்கமுள்ளவன், தூங்குவோன், தூங்கி.
Slur, *s. Taint, reproach, slight disgrace*, இழுக்கு, சிறுநிந்தை. கறைபாடு.
Slur, *v. a.* 1. *To sully, to soil, to contaminate*, கறைபடுத்துகிறது, வடுப்படுத்துகிறது.
2. *To pass lightly, to back, to miss*, பட்டும்படாமற்கடக்கிறது, தட்டியுந்தட்டாதுகடக்கிறது.
Slut, *s. A dirty woman*, அசுத்தமுள்ளவள், அட்டுப்பிடித்தவள்.
Sluttish, *adj.* அசுத்தமுள்ள, அழுக்குள்ள, அட்டுப்பிடித்த.
Sluttishly, *adj. in a sluttish manner, nastily, dirtily*, அழுக்காய், அசுத்தமாய், ஊத்தையாய்.
Sluttishness, *s.* அழுக்குத்தனம், அசுத்தம்.
Sly, *adj.* சதிசாமத்துரோகமுள்ள, தந்திரமான, உபாயமுள்ள, துப்புள்ள.
fellow, தந்திரக்காரன், நழுவி.
remark, தந்திரப்பேச்சு.
Slyness, *s.* கரவிடம், வினயம்.
Smack, *s.* 1. *Taste, savour*, உரிசை, மணம்.
3. *A pleasing taste*, இன்பமானருசி, இனியஉரிசை.
4. *The act of parting the lips audibly as after a pleasing taste*, சப்புக்கொட்டல.
5. *A loud kiss*, முத்தியிடல, சத்தப்படமுத்தியிடல்.
6. *A small ship*, தோணி, சிறுகப்பல்.
of a whip, பளீர், படார்.
Smack, *v. a.* முத்தமிடுகிறது, படார்,பளீரென்கிறது, அறைகிறது.
as a whip, படீரென்கிறது, சாட்டையாலடித்தசத்தங்குறிக்கிறது.
Small, *adj. Little in quantity, not great*, சிறு, சின்ன, அற்ப, கொஞ்ச.
craft, சிறுகப்பல்.
object, நுண்ணியவிடயம், நுட்பப்பொருள்.
quantities, சில்லறை.
Smallness, *s. littleness, not greatness*, சிறுமை, சிறுதன்மை, சொற்பம், அற்பம், நொய்மை.
Smallpox, *s. An eruptive distemper of great malignity*, வைசூரி, அம்மை, சின்னம்மை.
Smart, *s.* 1. *Quick, pungent, lively pain*, கடுநோய், குத்துவலி.
2. *Pain, corporal or intellectual*, நோய், வருத்தம்.
Smart, *v. n.* உறைக்கிறது, எரிகிறது. சுள்ளென்கிறது.
as the eyes, கண்ணுக்கரிக்கிறது, கண்ணெரிகிறது.
Smart, *adj. Pungent, sharp, causing smart*, உறைப்புள்ள, கரிப்புள்ள, கூரிய, சுறுசுறுப்புள்ள, சுறுக்குள்ள.
Smartly, *adv.* உறைப்பாய், கரிப்பாய், கூர்மையாய்.
Smartness, *s.* உறைப்பு, கரிப்பு, விவேகம், புத்திக்கூர்மை.

Smash, *v. a.* நெரிக்கிறது, நொறுக்குகிறது, தகர்க்கிறது.
to be smashed, நொறுங்குகிறது, தவிடுபொடியாகிறது.
Smatter, *v. n.* *To have a slight taste, to have a slight superficial and imperfect knowledge*, கொஞ்சப்படிப்புடைத்தாயிருக்கிறது, பருப்படியறிவாய்ப்பேசுகிறது, அலட்புகிறது.
Smatter, **Smattering**, } *s.* சிற்றறிவு, அற்பக்கல்வி.
Smear, *v. a.* பூசுகிறது, அப்புகிறது, மெழுகுகிறது.
a floor, வீடுமெழுகிறது.
with ungents, தைலம்பூசுகிறது.
Smell, *s.* மணம், வாசனை, கந்தம், மோப்பம்.
of something burnt, தீஞ்சநாற்றம், சுண்டல் வாசனை.
good, நற்கந்தம், சுகந்தம், வாசனை.
bad, துற்கந்தம், நாற்றம்.
of a living being, வாசனை, மோப்பம்.
Smell, *v. a.* மணக்கிறது, மோப்பம்பிடிக்கிறது, முகருகிறது.
as he smells a flower, அவனொருபூமுகருகிறான், மோந்துபார்க்கிறது.
Smell, *v. n.* மணமடிக்கிறது, வாசம்வீசுகிறது, கமழுகிறது.
Smelling, *s.* மோப்பம், முகர்ப்பு.
Smelt, *v. a.* *To melt ore so as extract the metal*, கலப்பான லோகங்களையுருக்குகிறது, பொன்மணல் வெள்ளிமணல்முதலியவற்றையுருக்குகிறது.
Smelter, *s.* புடமிடுகிறவன், உருக்குகிறவன்.
Smile, *s.* புன்சிரிப்பு, புன்னகை, குறுஞ்சிரிப்பு.
Smile, *v. n.* புன்சிரிப்புச்சிரிக்கிறது, குளிர்ந்தமுகங்காட்டுகிறது, இச்சொல் *frown*, என்னுஞ்சொல்லுக்கெதிர்பதமாம்.
Smiling, *adj.* சிரிப்புள்ள, சிரித்தமுகமுள்ள, நகைமுகமுள்ள.
face, சிரித்தமுகம், மலர்ந்தமுகம்.
Smirk, *v. n.* சிரிக்கிறது, இன்பமுகங்காட்டுகிறது, புன்சிரிப்புக்கொள்ளுகிறது.
Smite, *v. a.* அடிக்கிறது; கொல்லுகிறது.

Smith, *s.* கம்மாளன்.
black, கொல்லன், கருமான்.
forge, உலைக்களம், கொல்லனுலை.
Smithery, **Smithy**, } *s.* உலைக்களமிருக்கும்வீடு.
Smoke, *s.* புகை, ஆவி, தூமம்.
Smoke, *v. n.* புகைகிறது, ஆவிபறிகிறது.
Smoke, *v. a.* புகையச்செய்கிறது, புகைபோடுகிறது, புகைக்கிறது.
tobacco, புகையிலைகுடிக்கிறது, சுருட்டுப்பிடிக்கிறது.
to be smoked as food, புகைசூழ்கிறது.
Smoker, *s.* புகைக்குடிக்கிறவன்.
Smoking, *s.* புகைக்குடித்தல்.
Smoky, *adj.* புகைகிற, புகைச்சலுள்ள, புகைபோன்ற.
Smooth, *adj.* வழவழப்பான, கரடுமுரடில்லாத, சமமான, மெதுவான, மெருகான.
as level, மட்டமான, தரைமட்டமான, நேரான, செவ்வையான.
as slimy, நழுவலான, பிசுபிசுப்பான.
Smooth, *v. a.* ஒத்ததரையாக்கிறது, வழவழப்பாக்கிறது, செப்பம்பண்ணுகிறது, மெதுவாக்குகிறது, மெருகாக்குகிறது, வருத்தத்தைலகுவாக்குகிறது.
off, கழிக்கிறது, கழித்துவிடுகிறது, வழித்துவிடுகிறது.
by planing, சீவுகிறது.
a ploughed field, பரம்படிக்கிறது.
Smoothly, *adv.* செப்பமாய், ஒப்பரவாய்.
Smoothness, *s.* *Evenness on the surface, freedom from asperity*, வழவழப்பு, கரடுமுரடில்லாமை, மெருகு, மெதுவு.
Smother, *v. a.* மூச்சடைக்கப்பண்ணுகிறது, திக்குமுக்காடப்பண்ணுகிறது, அமுக்குகிறது.
to be smothered, திக்குமுக்கடைக்கிறது, திட்டுமுட்டுப்படுகிறது.
Smouldering, *adj.* *Burning and smoking without vent*, அடைப்பிலேயெரிகிற, அவிந்துபுழுங்குகிற, அனலும்புகையும் வெளிப்போகவிடமில்லாமலுள்ளவிகிற.
Smuggle, *v. a.* சரக்குகளைக்கள்ளவழியாய்க்கொண்டுவருகிறது, கள்ளச்சரக்கேற்றுகிறது, கள்ளச்சரக்குபபறிக்கிறது.

Smuggled goods, *s.* கள்ளச்சரக்கு, தீர்வைதீராதசரக்கு.
Smuggler, *s.* கள்ளச்சரக்கேற்றுகிறவன்.
Smuggling, *s.* கள்ளச்சரக்கேற்றியிறக்குதல், கள்ளச்சரக்குவியாபாரம்.
Smut, *s.* ஒட்டடை, புகையடை.
Smuttily, *adv.* ஒட்டடையாய், புகையடையாய் கருமையாய்.
Smuttiness, *s.* ஒட்டடை, புகையடை.
Smutty, *adj.* ஒட்டடையான, புகையடையான, தீழ்ப்பான்.
Snacks, *s. To go snacks*, பங்குபோட்டுக்கொள்ளுகிறது.
Snaffle, *s.* இலகான், இலகாம்.
Snail, *s.* நத்தை, பனிநத்தை, ஊமச்சி.
Snake, *s.* பாம்பு, சருப்பம்.
dance, பாம்பாட்டல்.
dancer, பாம்பாட்டி.
in the grass, குளிர்ந்தகொள்ளி, சிநேகசத்துரு, கபடன்.
Snap, *s.* வெடி, இடி.
of thumb and finger, நொடிநொடிப்பு, கைநொடிப்பு.
Snap, *v. a.* முறிக்கிறது, வெடிக்கச்செய்கிறது, படாரெனச்செய்கிறது.
the fingers, கைநொடிக்கிறது, நொடிக்கிறது.
Snap, *v. n.* வெடிக்கிறது, தெறிக்கிறது.
off or asunder, ஒடிகிறது, தெறிக்கிறது.
at a bait, கொத்துதல், கவவுதல்.
as a dog, கௌவுதல்.
with the finger, தெறித்தல்.
Snappish, *adj.* எடுத்தடிமடக்கான, வெடுவெடுப்பான, வெப்பமான.
to be snappish, எரிப்பெடுக்கிறது, வெடுவெடுக்கிறது.
Snappishly, *adv.* வெடுவெடுப்பாய், வெப்பமாய், எடுத்தடிமடக்காய்.
Snappishness, *s.* வெடுவெடுப்பு, வெப்பம், எடுத்தடிமடக்கானகுணம்.
Snare, *s.* கண்ணி, சுருக்கு, வலை, சிக்கு, தந்திரம், உபாயம், நூற்சிக்கு, மயிர்ச்சிக்கு.
Snare, *v. a.* கண்ணியிலகப்படுத்தல், வலைக்குட்படுத்தல்.

Snarl, *v. n.* உறுமுகிறது, இரைகிறது, மொறுமொறுக்குகிறது.
Snarling, *adj.* உறுமுகிற, முறுமுறென்கிற.
Snarlish, *adj.* எரிவுள்ள, எரிச்சலுள்ள.
Snatch, *s.* பிடுங்கிக்கொள்ளல், பறித்தல், செந்தூக்காயிறுஞ்சுதல்.
Snatch, *v. a.* பிடுங்கிக்கொள்ளுகிறது, அப்பிக்கொள்ளுகிறது.
up as prey, இறுஞ்சுகிறது, தூக்கிப்பறிகிறது.
with a twist, திருகிப்பிடுங்கிவிடுகிறது.
Sneak, *s.* பதுங்கி, நழுவி.
Sneak, *v. n.* பதுங்குகிறது, நகர்ந்துவருகிறது.
Sneaking, *adj.* 1. *Servile, mean, low*, இழிந்த, கீழான.
2. *Covetous, niggardly, meanly, parsimonious*, பிடித்தகுணமுள்ள, எச்சித்தனமான பிசினித்தனமான, இடுக்கக்குணமான.
Sneakingly, *adv. meanly, servilely*, இழிவாய், எச்சித்தனமாய், இடுக்கமாய்.
Sneer, *s.* 1. *A look of contemptuous ridicule*, அசட்டையானபார்வை, நிஷ்காரம்.
2. *An expression of ludicrous scorn*, பரிகாசப்பேச்சு.
Sneer, *s. To show contempt by looks*, பார்வையாலசட்டைகாண்பிக்கிறது, மூக்கைநெறிக்கிறது, முகஞ்சுளுக்கிறது, நெளிப்பாய்ப்பேசுகிறது.
Sneeringly, *adv.* பழிப்பாய், பரிகாசமாய்.
Sneeze, *s.* தும்மல், தப்மு.
Sneeze, *v. n.* தும்முகிறது.
Sneezing, *adj.* தும்முகிற, தும்மலுள்ள.
Sniff, *v. n. To draw breath audibly up the nose*, உறிஞ்சுகிறது, மூக்கால்வாங்குகிறது.
Snip, *s.* வெட்டு, கத்திரிப்பு.
Snip, *v. a.* கத்திரிக்கிறது, நறுக்குகிறது.
Snipe, *s.* உள்ளான்.
Snivel, *v. n.* சிணுங்குகிறது, மூக்காலழுகிறது.
Snore, *v. n.* குறட்டைவாங்குகிறது, குறட்டைவிடுகிறது.
Snoring, *s.* குறட்டை.
Snort, *v. n. To blow through the nose as a high mettled horse*, குதிரைமூக்கால் உறுமிவலுவாய் இரைக்கிறது, இரைப்பிரைக்கிறது, சுவாசமவாங்குகிறது, மூக்குச்சீறுகிறது.

Snorting, *s.* சீறல், மூக்காற்சீறல்.
Snot, *s.* சளி, ஊளை.
Snotty, *adj.* ஊளையான, சளிப்பிடித்த.
Snout, *s.* 1. *The nose of a beast,* நீண்டமூக்கு, மிருகமுதலியவற்றின் மூஞ்சி.
 2. *The nose of a man, in contempt,* மூஞ்சி, மோறை, மூக்கு.
 3. *The nosel or end of any hollow pipe,* துருத்திமுதலிபகுழாயின்மூக்கு.
Snouted, *adj.* *Having a snout,* மூக்குள்ள, மூஞ்சியையுடைய.
Snow, *s.* *The small particles of water frozen before they unite in drops,* பனித்துளி, பனித்தண்ணீர், உறைந்தமழை, பனிக்கட்டி, சின்னக்கப்பல்.
Snowdrift, *s.* பனிமேடு, பனிக்குவியல், பனிக்கும்பல்.
Snowy, *adj.* 1. *White like snow,* பனிபோல் வெண்மையான.
 2. *Abounding with snow,* பனிநிறைந்த, பனிக்காடான.
Snub, *v. a.* *To check, to reprimand,* முகமுறித்துப்பேசுகிறது, கண்டிப்பாய்ப்பேசுகிறது, உதம்புகிறது.
Snuff, *s.* புகையிலைத்தூள், மூக்குத்தூள், பொடி. *of a lamp candle, &c.* திரிச்சிலைவெந்தகரி, சாம்பல், காந்தல், நசியம்.
Snuff, *v. a.* 1. *To draw in with the breath,* மூக்காலுறிஞ்சுகிறது, மூக்காலிழுக்கிறது, *To snuff at,* சீறுகிறது,
 2. *To scent,* மோப்பம்பிடிக்கிறது, மோருகிறது, வாசனைபார்க்கிறது.
 3. *To crop the candle,* திரிச்சிலையைக்கத்திரித்துத்தூண்டிவிடுகிறது.
Snuff, *v. n.* மணப்பிடிக்கிறது, மணத்துப்பார்க்கிறது, மோந்துபார்க்கிறது.
Snuffbox, *s.* பரணை, செப்பு, பொடிச்சிமிள், சிமிள்.
Snuffers, *n.* கத்திரிக்கோல், இடுக்கி, எரியுந்திரியைக்கத்திரிக்கவும் தூண்டிவிடவும் வழங்குகிற கத்திரிக்கோல்.
Snuffle, *v. n.* *To speak through the nose to breathe hard through the nose,* மூக்காற்பேசுகிறது, குணுகுணென்கிறது, மூக்குறிஞ்சுகிறது.
Snuffler, *s.* மூக்காற்பேசுகிறவன், குணுகுணுக்கிறவன்.
Snuffling, *s.* குணுகுணுப்பு.
Snug, *adj.* 1. *Close, free from any inconvenience, yet not splendid,* அடங்கிய, வள்ளிசான, சட்டவட்டமான.
Snugly, *adv.* அடக்கமாய், வள்ளிசாய், செவ்வையாய்.
Snugness, *s.* அடக்கம், வள்ளிசு, செவ்வை.
So, *adv.* 1. *In like manner,* அப்படி, அப்படியே, அதுபோல், *It answers to* as, either *preceding or following,* இது as என்னுஞ்சொல்லுக்குமுன்னாவதுபின்னாவது நின்று அதையொட்டி அருத்தங்கொடுக்கும்.
 2. *To such a degree,* அவ்வளவுக்கு, அம்மாத்திரத்துக்கு.
 3. *In such a manner,* அதுமாதிரிப்படி, அவ்விதமே, அப்படிக்கொத்தவிதமாய்.
 4. *It is regularly answered by* as, *or* that, *but they are sometimes omitted; as* அல்லது *that* என்னுஞ்சொல்லுக்குமுன்பெரும்பாலும்வரும், சிறுபான்மைவாராதொழிவதுமுண்டு.
 5. *In the same manner,* அதுவேமாதிரிப்படி, அந்த ஒரேவிதமான, யதாப்பிரகாரம்.
 6. *Thus, in this manner,* இப்படி, இவ்வழியாய், இம்முறையே.
 7. *Therefore, for this reason, in consequence of this,* ஆகையினால், இதினால், இதற்காக, இந்தமுகாந்திரத்துக்காக.
 8. *On these terms, noting a conditional petition, answered by, as;* படியாக, அதின்மேல், படிக்கு.
 9. *Provided that, on condition that,* ஆனால், ஆல்.
 10. *In like manner, noting conception of one proposition, and assumption of another, answering to as;* இதுபோலதுவாக, அதுபோலிதுவாக, அந்தச்சட்டத்தின்படியே, அவ்வண்ணமே, இவ்வண்ணமுமாக.
 As, *a war should be undertaken upon a just motive; so a prince ought to consider the condition he is in when he enters on it;* நீதிப்பிரமாணத்தின்படியே யுத்தம்நடத்தப்படவேண்டியது. அவ்வண்ண

மே அரசனும் யுத்தம்பண்ணப் புறப்படுகை யில் தன் நிலைமையை குறித்து ஆலோசிக்க வேண்டும்.

11. So, *sometimes returns the sense of a word or sentence going before, and is used to avoid repetition,* இவ்வார்த்தைமுன்சென்றசொல்லின் அல்லது வாககியத்தின் கருத்தைமறுபடியுங் குறிக்கிறதினால் கூறியது கூறுதலைவிலக்குகின்றது, *as the two brothers were valiant, but the eldest was more so, that is more valiant,* இவ்விரண்டுசகோதரரும் வல்லமைசாலிகளாயிருந்தார்கள்; மூத்தவனோ அப்படியதிகமாயிருந்தான் அதாவது அதிக வலிமைசாலியாயிருந்தான் என்பதாம்.

12. *Thus it is, this is the state* இவ்வண்ணமிருக்கின்றது, இதுதானுள்ளஸ்திதி.

13. *At this point, at this time,* தற்காலத்திலே, இப்போது.

14. *It notes a kind of abrupt beginning well,* நல்லது, பொறும், நான் சொல்லுகிறேன்.

15. *So* much, *as, However much,* எவ்வளவாயிருந்தாலும் எவ்வளவுபெரிதானாலும்.

16. *So then, Thus then it is, that therefore,* அப்படியானால் இப்படியிருக்கிறதினாலே ஆகையாலே, *much* இவ்வளவு அவ்வளவு. *far* அவ்வளவுதூரம், *forth,* முதலிய, முதலான, as *or* that படி, போல.

Strike, so as to hurt, நோகஅடி, வருத்தும் படியாக அடி.

Soa, *v. n.* ஊறுகிறது, தோய்கிறது. சுவறுகிறது. *as tiles,* விம்முகிறது, நீர்க்கொண்டுப்புகிறது. *as a pen,* துவளுகிறது.
through, பொசிகிறது, கசிகிறது.

Soak, *v. a. To macerate in any moisture; to steep, to keep wet till moisture is imbibed, to drench,* ஊறவைக்கிறது, உப்பவைக்கிறது.
2. *To draw in through pores,* இழுக்கிறது, உறிஞ்சுகிறது, உள்ளிழுக்கிறது, குடிக்கிறது.

Soaking, *s.* தோய்கை, ஊறுகை.
rain, மிகுமழை, பெருமழை.

Soap, *s.* சவுக்காரம்.

Soap, *v. a.* சவுக்காரம்போடுகிறது, சவுக்காரத்தாற்சுத்திசெய்கிறது.

Soapsuds, *s.* சவுக்காரநுரை.

Soapy, *adj.* சவுக்காரம்போன்ற.

Soar, *v. n. To fly aloft, to tower, to mount, properly, to fly without any visible action, of the wings,* உயர்ந்துபறக்கிறது, உயர்ந்தெழும்புகிறது, ஓங்கியுயருகிறது.

Soaring, *s.* கிளம்பல், உயர்தல்எழும்பிப்பறத்தல்.

Sob, *s.* தேம்பல், விம்மல், செருமல்.

Sob, *v. n.* தேம்புகிறது, விம்மியழுகிறது, செருமிச்செருமியழுகிறது.

Sober, *v. a.* தெளியப்பண்ணுகிறது, சொஸ்தப்புத்திவரப்பண்ணுகிறது.

Sober, *adj.* சொஸ்தப்புத்தியுள்ள, தெளிவுள்ள, வெறியில்லாத.
to become sober, தெளிகிறது, சொஸ்தமாகிறது.

Soberly, *adv.* தெளிவாய, சொஸ்தப்புத்தியாய், சாதுவாய்.

Soberminded, *adj.* தெளிந்தமனதான, மயக்கமில்லாத, நல்மனதான, சுவாபமாய்.

Soberness, *s.* தெளிவு, பித்தமின்மை, தெளிந்த புத்தி, சொஸ்தபுத்தி.

Sobriety, *s.* 1. *Temperance in drink, soberness,* மிதம், மட்டு, புத்திதெளிவு.
2. *freedom from inordinate passion,* மட்டுக்குமிஞ்சின தன்மையில்லாமை, மட்டுக்குள்ளான தன்மை.
3. *Calmness, coolness,* அமைதி, சாந்தம், தண்மை.
4. *Seriousness, gravity,* கனத்தபுத்தி, பாரதூரம்யோசிக்கிறதன்மை.

Sociability, *s.* பழக்கவழக்கம், சேர்த்திகை. இணக்கக்குணம், கூட்டுறவானகுணம், அன்னியொன்னியம்.

Sociable, *adj.* கூடியிருககிற, கூடிவாழ்கிற, சேர்த்திகைகயுள்ள.
to be sociable, உறவாகுகிறது, ஊடாடுகிறது.

Sociableness, *s.* இணங்கியிருக்குந்தன்மை, கூடிவாழ்கிறகுணம், சேர்த்திக்கை, சங்காத்தம்.

Sociably, *adv.* சேர்த்திக்கையாய், கூட்டுறவாய், சங்காத்தமாய்.

Social, *adj.* 1. *Relating to a general or public interest, relating to society,* பொதுமைக்குரிய, பத்தையுமனுசரிக்கிற, இனஞ்சனத்தைத்தழுவிய, எல்லாரோடுமிணங்கியிருக்கிற

2. *Easy to mix in friendly gaiety, companionable*, தோழமைக்கிலேசான, சகிதமாயிருக்கக்கூடிய, சிநேகத்துக்கான, ஐக்கத்துக்கான.
man, இணக்கத்துக்கானவன், கூட்டாளி, உறவாளி, தோழமைக்காரனவன்.
bonds, கட்டுப்பாடு, அன்னியோன்னியசம்பந்தம், பாத்தியம், பந்துபந்தயம்.
enjoyment, கொண்டாட்டம், ஏகவைபோகம், ஒருமையனுபவம்.
Sociality, *s.* உறவு, சிநேகம், கூட்டாளித்தனம், இணக்கம்.
Society, *s.* 1. *Union of many in one general interest*, பொதுக்காரியத்துக்காகப்பலர்கூடிய கூட்டம், சங்கம், சபை.
2. *Numbers united in one interest, community*, ஒன்றுகூடியகூட்டம், ஒருகாரியத்துக்கென்றுகூடிய பலபேர்த்தொகுதி.
3. *Company, converse*, சங்காத்தம்,இணக்கம், கூட்டுறவு.
4. *Partnership, union on equal terms*, இனம், சகசம், சகிதம், ஒருமைப்பாடு.
Sock, *s.* மேல்சோடு.
Socket, *s.* கூடு, உறை, குவளை, பூண், குழி, பில்பத்தை.
of the eye, கண்குவளை, கண்ணின்குழி.
of a hoe, மண்வெட்டிமாட்டுவளயம், காது.
Sod, *s.* பில்லுப்பத்தை, மண்வெட்டியின்குழை.
Sod, *v. a.* கழிப்பத்தை, கழிமோதுகிறது.
Soda, *s.* காரம், உவர்மண்.
Sodawater, *s.* உவர்நீர், குளிர்நீர்.
Soder, *s.* பற்று, பற்ருசு, பொடிப்பற்று, வெங்காரம்.
of the gold smith, பச்சைக்காரம்.
Soder, *v. a.* பொடிவைத்துபற்றவைக்கிறது.
Sodomite, *s.* ஆண்புணர்ச்சிக்காரன், சுயமைதுனன்.
Sodomy, *s.* ஆண்புணர்ச்சி, சுயபுணர்ச்சி.
Soever, (*adv. particle*, so *and* ever,) *A word properly joined with a pronoun or adverb*, தன்மைமுதலியபெயரோடும் வினையுரிகளோடும் புணர்ந்துவரும் இடைச்சொல், *as whosoever*, ஆராகிலும், *what so ever*, எதாகிலும், *how so ever*, எவ்விதமாகிலும், என்றாலும், ஆகிலும்.

Sofa, *s.* சார்மணைக்கட்டில், சாய்மானக்கட்டில்.
Soft, *adj.* மெதுவான, மெதுமெதென்கிற, மிருதுவான, மெத்துமெதெதென்கிற,இளசான், கனிவான, சாதுவான.
pace, தளர்ந்தநடை.
Soften, *v. a.* மெதுவாக்குகிறது, இளக்குகிறது, தணிக்கிறது.
Soften, *v. n.* இளகுகிறது, மெதுவாகுகிறது, கனிகிறது.
Softly, *adv.* மெதுவாய், இளக்கமாய்.
Softness, *s.* மெதுவு, நொய்மை, மெருகு.
Soil, *s.* நிலம், நிலத்தின்தன்மை, மண், மண்வாசி, தரை, எரு, அழுக்கு, *Red, soil*, சிவந்தமண், செம்மண்ணிலம்.
one's native soil, பிறந்தகம், பிறந்ததேசம்.
original, இயேற்கைபூமி, நிலமண்.
made, கொட்டுமண், திருத்தியமண்.
stain, மாசு, களங்கம்.
Soil, *v. a.* கறையாக்குகிறது, மாசடையச்செய்கிறது.
Soiled, *adj.* கறைப்பட்ட.
to become soiled, நலுங்கிப்போகிறது.
Sojourn, *s.* சஞ்சரிப்பு, சஞ்சாரம், விடுதி, தங்கல்.
Sojourn, *v. n.* தங்குகிறது, சஞ்சரிக்கிறது.
Sojourner, *s.* விடுதியில் தங்கியிருக்கிறவன், பரதேசி.
Solace, *s.* தேற்றரவு, தேறுதல், ஆறுதல்.
Solace, *v. a.* ஆற்றுகிறது, தேற்றுகிறது, ஆறுதற்படுத்துகிறது, உல்லாசமாயிருக்கிறது.
Solar, *adj.* சூரியனுக்குரிய, ஆதித்தனுக்குரிய.
month, சூரியமாதம்.
system, சூரியமண்டலம்.
Solder, *s.* வெங்காரம், பற்று, பொடி.
Solder, *v. a.* பற்றுவைத்து ஊதுகிறது, பொடிவைத்துப்பற்றவைக்கிறது.
Soldier, *s.* சேவகன், போர்ச்சேவகன், சிப்பாயி, போர்வீரன்.
Soldiery, *s.* படை, சேனை, பெலம்.
Sole, *s.* உள்ளங்கால்.
of a shoe, செருப்பினடி. அடித்தோல்.
a fish, எருமைநாக்கு, நாக்குமீன்.
Sole, *adj.* ஒன்றேயான, ஒரு, தனியான.
as alone, ஒன்றியான, ஏகமான.

Solecism, *s.* *Unfitness of one word to another, impropriety in language,* இலக்கணவழு, சொற்பிழை.

Solely, *adv.* தனித்து, தனியே.

Solemn, *adj.* *Religiously grave, awful,* பத்தியோக்கியமான, பயபத்தியுள்ள, வெகுகனங்கொண்ட, கம்பீரமான.

2. *Formal, ritual, religiously regular,* பயபத்தியுள்ளமுறையான, ஒழுங்கான, ஆராதனை நியமமான, நியமநிஷ்டையுள்ள.

Style, காம்பீரநடைகொண்டவாசகம், பயபத்தியுறுத்துவிக்கும் மகத்துவ வசன நடை.

day, திருநாள், பெருநாள்.

sound, மந்தநாதம், காம்பிரதொனி, உருக்கமான நாதம்.

instruction, திவ்வியோபதேசம்.

Solemness, *s.* கனம், பயபத்தி, பயம், மகத்துவம்.

Solemnization, *s.* ஆசரிப்பு, அநுசரிப்பு.

Solemnize, *v. a.* ஆசரிக்கிறது, ஆதரிக்கிறது, கொண்டாடுகிறது.

a marriage, விவாகச்சடங்குசெய்கிறது, பாணிக்கிரகணம்பண்ணுகிறது.

Solemnizer, *s.* சடங்குசெய்கிறவன்.

Solemnly, *adv.* பயபத்தியாய், காம்பிரமாய், வணக்கமாய்.

Solicit, *v. a.* வேண்டிக்கொள்ளுகிறது, கேட்கிறது, அலட்டிக்கேட்கிறது.

Solicitation, *s.* வேண்டுதல், பிரார்த்தனே, கேள்வி.

Solicitor, *s.* பரிந்துபேசுகிறவன், ஒருதன்பாரிசமாய்ப்பேசுகிறவன்.

Solicitous, *adj.* ஆவலான, கவலையுள்ள, விருப்பமுள்ள, அவாவான.

Solicitude, *s.* அவா, எண்ணம், ஏக்கம், கவலை, சிந்தனை, விசாரம்.

Solid, *s.* வைரமானது, உறுதியானது, உரமானது, வைரம், கெட்டியானது.

Solid, *adj.* வைரமான, உரமான, உறுதியான, கெட்டியான, தடிப்பான.

angle, கனகோணம்.

discourse, சாரமானபேசசு, திவ்வியபிரசங்கம்.

information, ஆழமானகல்வி, கசடற்றகல்வி, மாசற்றகல்வி.

mind, மாசற்றமனம், ஐயமற்றமனம், மனநிறை, ஆழியபுத்தி.

thought, பலமானவெண்ணம், உறுதியானவெண்ணம், ஆழந்தகருத்து.

to become solid, கனக்கிறது, தடிப்பாகிறது, உறுதியாகிறது.

Solidify, *v. a.* ஸ்திரப்படுத்துகிறது, திடப்படுத்துகிறது, பலப்படுத்துகிறது, கெட்டிப்படுத்துகிறது, வைரப்படுத்துகிறது.

Solidity, *s.* கெட்டி, உறுதி, திரண்டிருக்கை, வைரம், தைரியம்.

Truth, not fallaciousness, intellectual strength, certainty, உண்மை, சத்தியம், குற்றமல்லாதது.

Solidly, *adv.* வைரமாய், உண்மையாய், உறுதியாய், சத்தியமாய், பெலனுய், அசையாநிலையாய்.

Solidness, *s.* வைரத்தன்மை, பெலன், வன்மை, தடிப்பு.

Soliloquize, *v. n.* தன்னிலேதானேபேசிக்கொள்ளுதல், மனோபாஷிதம்பண்ணுதல்.

Soliloquy, *s.* தன்னிலேதானே பேசுகை, மனோபாஷிதம்.

Solitarily, *adv.* தனிமையாய், ஏகாந்தமாய், ஒண்டியாய்.

Solitariness, *s.* ஒண்டியாயிருக்கை, தனித்திருக்கை, ஏகாந்தம், தனிமை.

Solitary, *adj.* ஏக, ஒண்டியான, ஏகாந்த, தனிமையான.

person, ஒற்றையாள், ஒண்டி, தனித்தவன்.

to be solitary, தனித்திருக்குதல், ஒண்டியாயிருக்குதல், அந்தரித்தல், ஏகாங்கவாசமாயிருக்கிறது.

Solitude, *s.* தனிமை, ஏகாந்தம்.

1. *Lonely life, state of being alone,* தனியாயிருக்குந்தன்மை, ஏகாநதமானசீவனம், வனவாசம்.

2. *A lonely place, a desert,* வனந்தரம், தனிமையானவிடம்.

Solo, *s.* ஒருவன்மாத்திரம்பாடும்பாட்டு, ஒற்றைக்குரல்.

Solstice, *s.* *The point beyond which the sun does not go, the tropical point, the point at which the day is longest in summer or shortest in winter,* சூரியன் வடக்கிலாயினும்

தெற்கிலாயினும் அப்பாற்கடத்தலில்லாத அயனவரை; கோடைகாலத்தில் பகல் நீடசியாயிருக்குமந்தப்பக்கம் மழைகாலத்தில் பகல் குறுகியிருக்கும்பட்சம்.
northern, வடபாலில் சூரியனப்புறம்போர்தலில்லாதபக்கம், வடபாலயனம், உத்தராயனம்.
southern, தென்பாலயனம், தக்ஷ்ணாயனம்.
Solstitial points, *s.* அயனம்.
Solubility, *s.* கரைவு, கரையுந்தன்மை, உருகுந்தன்மை.
Soluble, *adj. Capable of dissolution or separation of parts*, கரையத்தக்க, உருகத்தக்க.
Solution, *s.* 1. *Disruption, breach, disjunction, separation*, பிரிவு, நீக்கம், கரைவு.
2. *Matter dissolved, that which contains any thing dissolved*, கரைவு, கரைந்தது, கரைக்கப்பட்டது.
3. *Resolution of a doubt, removal of an intellectual difficulty*, சந்தேகநிவர்த்தி, முட்டுப்பாடுதீர்த்தல், முட்டறுத்தல்.
4. *Explanation, exposition*, விரித்துரைத்தல், தொகைவகைவிரிப்பு.
Solvable, *adj.* விரிக்கப்படத்தக்க, அவிழ்க்கப்படத்தக்க.
Solve, *v. a.* அவிழ்க்கிறது, விரிக்கிறது, ஐயமறுக்கிறது, விஸ்தரிக்கிறது.
a knotty question, சிக்கறுக்கிறது, முட்டறுக்கிறது.
riddles, விடுகதை, விடுவிக்கிறது.
Solvency, *s.* கடன்கழிக்கக்கூடியதிராணி, பணங்கொடுக்கக்கூடிய சத்தி.
Solvent, *adj.* பிரிக்கக்கூடிய, கரைக்கக்கூடிய, கடன்தீர்க்கத்திராணியுள்ள.
Somber, Sombre, *adj.* மங்கலான, குருவுதலான, மனங்குருவிய, இருளான.
Some, *adj.* கொஞ்ச, சில, அற்ப, சிற்சில.
This is a termination of adjectives which denote quality or property of any thing, ஒன்றினகுணத்தையுங் கிழமையையுங் குறிக்கு முரிச்சொற்களின் விகுதி. *as Handsome*, அழகுள்ள, *trouble some*, தொந்தரையுள்ள, *&c.*
persons, சிலர்.
Somebody, *s.* ஆரோ, எவரோ, சிலர், ஒருவன்.
Somehow, *adv.* எப்படியோ, எவ்விதமோ.
Somerset, *s.* குட்டிக்கரணம், கரணம், குத்துக்கரணம்.
Something, *s.* ஏதோ, ஏதாகிலும், யாதொன்று.
Sometime, *adv.* சிலவேளை.
or other, எப்பொழுதாகுதல், எப்பொழுதாவது.
Sometimes, *adv.* சிலவேளை.
Somewhat, *adj.* சற்று, சற்றே, கொஞ்சம்.
Somewhere, எங்கேயோ.
Somniferous, Somnific, *adj.* தூக்கமுண்டாக்குகிற, நித்திரைவரப்பண்ணுகிற.
Somnolence, Somnolency, *s.* தியக்கம், மயக்கம், தூக்கம்.
Son, *s.* மகன், புத்திரன், பிள்ளை, குமாரன்.
in law, மருமகன்.
adopted, சுவிகாரபுத்திரன், மஞ்சணீர்ப்பிள்ளை.
Song, *s.* பாட்டு, சங்கீதம்.
of praise, தோத்திரப்பாட்டு.
as poetry or poems, செய்யுள், யாப்பு.
of bird, குருவிகளினிசை, புள்ளோசை.
Songster, *s.* பாடகன், கீதம்பாடுகிறவன், பாட்டகன்.
Songstress, *s.* பாடுகிறவள்.
Sonnet, *s.* தனிக்கவி, ஒருவகைக்கவி, பாட்டு, பதிகம், பஞ்சாத்றம்.
Sonorous, *adj.* தொனியுள்ள, நாதமிடுகிற.
Sonorously, *adv.* தொனியுடையதாய், ஓசையுள்ளதாய்.
Sonorousness, *s.* தொனியிடுந்தன்மை.
Sonship, *s.* மகனுயிருக்குந்தன்மை, புத்திரத்துவம், புத்திரசுவிகாரம்.
Soon, *adv.* சுறுக்காய், சீக்கிரமாய், உடனே.
Soot, *s.* ஒட்டடை, ஒட்டறை, புகையடை.
Soothe, *v. a.* ஆற்றுகிறது, தேற்றுகிறது, சாந்தமாக்கிறது, குளிரப்பண்ணுகிறது, முகப்போதரவாய்ப்பேசுகிறது.
a child, தாலாட்டுகிறது,
Soother, *s.* ஆற்றுவோன், தாலாட்டுவோன்.
Soothing, *adj.* தேற்றுகிற, ஆற்றுகிற, தணிக்கிற ஆதரிக்கிற, சாந்தம்பண்ணுகிற
to be soothed, தணிக்கப்படுதல், ஆற்றப்படுதல், சாந்தம்பண்ணப்படுதல், தேற்றப்படுதல்.
Soothingly, *adv.* தணிவாய், ஆறுதலாய், தேற்றுதலாய.

Soothsayer, *s.* குறிசொல்லுவோன், நிமித்திகன், புரோகிதன்.
Soothsaying, *s.* குறி, சாத்திரம், நிமித்திகம், புரோகிதம்.
Sop, *s.* துவைத்த துணுக்கை.
Sop, *v. a.* துவைக்கிறது, தோய்க்கிறது.
to be sopped, தோய்கிறது.
Sophism, *s.* தந்திரநியாயம், கள்ளநியாயம், பிரட்டுநியாயம்.
Sophist, *s.* கலைஞானத்தில்தேர்ந்தவன், வித்தியாப்பியாசி, சாஸ்திரிபுலவன், புரட்டிக்குதர்க்கவாதி.
Sophisticate, *v. a.* கலக்கிறது, வித்தியாசப்படுத்துகிறது, பழுதாக்குகிறது, புரட்டுகிறது.
Sophistication, *s.* கலப்பு, புரட்டு, வித்தியாசப்படுத்தப்பட்டது, பழுதாக்கப்பட்டது.
Sophistry, *s.* புரட்டு, குதற்கம், வித்தியாசப்படுத்துகை, பழுதாக்குகை.
Soporific, *s.* தூங்கப்படுத்துகிறமருந்து, நித்திரையாக்கக்கூடியமருந்து.
Sorcerer, *s.* சூனியக்காரன், தந்திரவாதி, மந்திரதந்திரஞ்செய்வோன்.
Sorcery, *s.* சூனியம், தந்திரம், மந்திரதந்திரம், மாநதிரிக்கம், பில்லிசூனியம்.
Sorceress, *s.* சூனியக்காரி, தந்திரி, மந்திரதந்திரஞ்செய்பவள், பில்லிசூனியக்கார இஸ்திரி.
Sordid, *adj.* அழுக்கான, கையழுத்தமுள்ள, கீழ்மையான, பிசினித்தன்மையான.
Sordidly, *adv.* அழுக்கான, ஆசையாய், பிறர்பொருளிச்சையாய், கீழ்மையாய், தீழ்ப்பாய்.
Sordidness, *s.* கையிறுக்கம், கையழுத்தம், உலோபம், அழுக்குத்தனம்.
Sore, *s.* இரணம், புண்.
eyes, கண்ணோவு.
mouth, வாய்வேக்காடு.
Sore, *adj.* புண்ணான, இரணமுள்ள.
Sore, Sorely, *adv.* புண்ணாய், நோவாய், வேதனையாய்.
Soreness, *s.* புண்ணோவு, துன்பம், நோவு.
Sorrel, *s.* சுக்கான்கீரை, புளிசசைக்கீரை.
Sorrel, *adj.* சிவப்பான, வெண்மைகலந்த, சிவப்புள்ள.
Sorrow, *s.* துக்கம், விசனம், கிலேசம், மனநோவு.
Sorrow, *v. n.* துக்கப்படுகிறது, சஞ்சலப்படுகிறது.
Sorrowful, *adj.* துக்கமுள்ள, விசனமுள்ள.
event, துக்கசமாசாரம், பீடைகாரியம்.
feelings, மனவியாகுலம்.
Sorrowfully, *adv.* துயரமாய், கிலேசமாய்.
Sorry, *adj.* துக்கமுள்ள, விசனமான.
as poor, &c. அற்ப, ஈன, எளிய.
Sort, *n.* 1. *A kind, a species,* வகை, இனம்.
2. *A manner, a form of being or acting,* விதம், மாதிரி, முறைமை.
3. *A degree of any quality,* தரம், படி.
4. *A class or order of persons,* வரிசை, சாதி.
5. *Rank, condition, above the vulgar,* உயர்வு, உயர்வரிசை, மேன்மை.
6. *A pair, a set, a suit,* சோடு, இரண்டிரண்டு, ஜதை.
Sot, *s.* குடிகாரன், மூடன்.
Sottish, *adj.* மூடத்தனமான.
Sottishly, *adv.* மடத்தனமாய்.
Sottishness, *s.* மடத்தனம்.
Soul, *s.* 1. *The immaterial and immortal of man, spirit,* ஆன்மா, ஆத்துமா.
2. *Intellectual principle,* புத்தி, அறிவு, சேதனம்.
3. *Vital principle,* சீவன், சீவான்மா.
4. *Spirit, essence, quintessence, principal part,* ஆவி, சத்துவம், தத்துவம், தாது.
5. *Interior power,* உட்குணம், உள்ளானதன்மை, உள்ளுரிமை.
6. *Human being,* மனிதன், மனுஷாத்துமா, நராத்துமா, நரசீவன்.
7. *Acting power,* இயக்குஞ்சத்தி, ஆட்டிவைக்குஞ்சத்தி.
8. *Spiritfine, grandeur of mind,* மகத்துவம், மனதீரம், ஆவி, உள்ளக்கிளர்ச்சி.
9. *Intelligent being in general,* புத்தியுள்ளசெந்து, அறிவுடையசெந்து.
Sound, *s.* 1. *Any thing audible, a noise, that, which is perceived by the ear,* சத்தம், தொனி, நாதம்.
2. *Mere empty noise opposed to meaning,* வெறும்தொனி, கோஷ்டம், பொருளில்லாத்தொனி, ஆரவாரம்.

of a musical string, யாழ்நரம்போசை கின்னரநரம்பினிசை.
of rushing waters, நீர்பாயுமிரைச்சல், தண்ணீரிரைவாரம், ஆலோலம்.
solemn, கம்பீரநாதம், துக்கத்தொனி.
a strait, கால்வாய், கடற்கால், கழி, வாய்க்கால்.
as distant thunder, தூரத்திற்கேட்குங்குமுறல், மதமதவென்னுமிடியின்முழக்கம்.

Sound, *v. a.* விழுதுவிடுகிறது, கயறுவிட்டுப்பார்க்கிறது, ஆழம்பார்க்கிறது.
as fathom, ஆழமறிகிறது, உளவறிகிறது, ஆண்டறிகிறது.

Sound, *v. n.* சத்தமிடுகிறது, ஒலிக்கிறது, ஓசையிடுகிறது.
solemnly, கம்பீரசத்தமிடுகிறது, துக்கதொனியிடுகிறது.

Sound, *adj.* 1. *Healthy, hearty, not morbid. not diseased, not hurt*, சுகசௌக்கியமுள்ள, பீடையற்ற, உள்ளூடைவில்லாத.
2. *Right, not erroneous, orthodox*, சரியான, சுயம்பான, நிலைதளராத, கட்டுத்தளராத, அப்பட்டமான. *He has sound principles*, சற்குணனுயிருக்கிறன்.
3. *Stout, strong, lusty*, பலமுள்ள, கொழுத்த, மஸ்தான.
4. *Valid, not failing*, திறமான, திடமான, தொய்யாத.
as sound sleep, அசந்தநித்திரை.

Sounding, *adj. sonorous*, தொனிக்கிற, நாதமிடுகிற.

Soundings, *s.* விழுதுவிடுகை, விழுதெட்டுமிடம், கயிறுவிடுதல், கடலில் ஆழமறியத்தக்கஇடம், விழுதுவிடக்கூடியவிடம்.

Soundless, *adj.* சத்தமற்ற, தொனியில்லாத.

Soundly, *adv.* சொஸ்தமாய், நன்றாய், சுகமாய்.

Soundness, *s.* சுகம், சௌக்கியம், சொஸ்தம்.
1. *Truth, rectitude, incorrupt state*, கெடாநிலைமை, யதார்த்தம், சுப்பட்டம், அப்பட்டம்.
2. *Strength, solidity*, திடம், உறுதி, பலம், திண்மை.

Soup, *s.* ஆணம், குழம்பு, சூப்பு.

Sour, *s.* புளி, புளிப்பு, வெறுப்பு.

Sour, *adj.* 1. *Acid, austere, pungent on the palate with astringency, as vinegar, or unripe fruit*, புளிப்புள்ள, கடுப்புள்ள, சுள்ளென்கிற, கரிப்புள்ள, காடிமுற்றுககாய்முதலியபோல்வன.
2. *Harsh of temper, morose, peevish, severe*, கடுகடுப்பான, கண்டிப்பான, சிடுசிடுப்பான, சுள்ளென்கிற, விதனமுள்ள.
face, சலித்தமுகம், வேண்டாவெறுப்புள்ளமுகம்.
excessively, கடும்புளிப்புள்ள.
look, பிரியமற்றபார்வை, சுள்ளென்றபார்வை.

Sour, *v. a.* புளிப்பிக்கிறது, உவர்ப்பிக்கிறது.

Sour, *v. n.* நொதிக்கிறது, புளிக்கிறது.

Source, *s.* ஊற்று, காரணம், மூலம், சுனை.

Sourly, *adv.* புளிப்பாய், கசப்பாய், வெடுப்பாய்.

Sourness, *s.* புளிப்பு, வெடுப்பு.

Souse, *s.* ஊறுகிற இறைசசி, ஊறுகாயென்பதுபோல, ஊறினயிறைச்சி.

Souse, *v. a.* ஊறுகாய்போடுகிறது, ஈரமாக்குகிறது.

South, *s.* தெற்கு, தென்றிசை.
westly, தென்மேற்காய்.
pole, தெற்குதுருவம், தக்ஷிணதுருவம்.
wind, தென்றல், தென்றற்காற்று.

Southeast, *s.* தென்கிழக்கு.
wind, தென்கீழ்காற்று.

Southerly, *adv.* தெற்காய், தெற்கே.

Southern, *adj.* தெற்கேயுள்ள, தெற்குக்குரிய.

Southernmost, *adj.* தெற்கான, தெற்கிலுள்ள, தெட்சணத்தின் அந்தத்திலுள்ள.

Southernwood, *s.* மருக்கொழுந்து.

Southing, *s.* தெற்கேயோடல், தெற்கோட்டம்.

Southwest, *s.* தென்மேற்கு.
wind, தென்மேற்குக்காற்று.

Southwesterly, *adv.* தென்மேற்காய்,

Sovereign, *s. Supreme lord*, இராசன், சுயாதிபதி, சக்கரவர்த்தி.
as a coin, ஒருநாணயம், ஒருபவுன்-ம-ரூபாய் விலையுள்ளபொற்காசு

Sovereign, *adj.* இராசரீகமான, மேலான, மகத்துவமான.

Sovereignty, *s.* இராசத்துவம், கிரீடாதிபத்தியம்.
absolute, ஏகாதிபத்தியம் சக்கராதிபத்தியம்.

Sow, *s.* பெண்பன்றி.

A sow of lead, ஈயப்பாளம்.
Sow, *v. a.* விதைக்கிறது, வித்திடுகிறது.
to sow discord, பகையுண்டாக்குகிறது, விரோதம்பண்ணிவைக்கிறது
Sower, *s.* விதைக்கிறவன்.
Sowing, *s.* விதைப்பு.
Space, *s.* 1. *Room, local extension,* இடம், அகவிடம், வெளி, விரிவு.
Space, *is the relation of distance between any two bodies or points,* இடமென்பது இரண்டுகுறிகளுக்கிடையேயுள்ள தூரத்தின் சம்பந்தமாம்.
2. *Quantity of time,* காலம்.
For the space of 3 years, மூன்றுவருஷமாய்.
In a short space of time, பொழுது, கொஞ்சநேரத்திலே.
Space, *v. n.* அச்சிலேவெள்ளிடைவிடுகிறது.
Spacious, *adj.* விஸ்தாரமான, இடமகன்ற.
road, பெருந்தெரு, சாலை.
Spaciously, *adv.* விசாலமாய், விரிவாய்.
Spaciousness, *s.* விஸ்தாரம், விசாலம், விசாயம்.
Spade, *s.* மண்வெட்டி.
Spadix, *s.* பூ, பூம்பாளை.
Span, *s.* சாண், ஒட்டைச்சாண்.
as pair, சோடு.
Span, *v. a.* சாணளக்கிறது.
Spangle, *s.* மெல்லியதகடு, பொற்றகடு, வெள்ளித்தகடு, மினுக்குத்தகடு.
Spangle, *v. a.* மின்னுகிறது, மினுக்குமினுக்கென்கிறது, அப்பிரேக்பொடிபோடுகிறது.
Spaniel, *s.* ஓர்வகைநாய்.
Spanishfly, *s.* எரிவண்டு, பச்சைநிறமான ஈ, கொப்பளமெழுப்புகிறவண்டு.
Spank, *s.* கையடி.
Spank, *v. a.* கையாலறைகிறது.
Spar, *s.* ஒருவகைக்கல், உத்திரம், திராவி.
Spar, *v. n. To fight as boxers,* சிலம்பம்பண்ணுகிறது, சண்டைபண்ணுகிறது.
To shut, to close, to bar, பூட்டுகிறது, அடைக்கிறது.
Spare, *v. a. To use frugally, not to waste, not to consume,* கட்டுசெட்டாய்செலவிடுகிறது, வீண்செலவுசெய்யாமல்பிடித்துச்செலவழிக்கிறது, இரக்கமாய்நடத்துகிறது.
from ruin, காக்கிறது, இரட்சிக்கிறது.
as give, கொடுக்கிறது.
as forbear, தவர்கிறது, விட்டுவிடுகிறது, ஆக்கினைபண்ணாமல்விடுகிறது.
Spare, *adj.* 1. *Scanty, not abundant, parsimonious, frugal,* கொஞ்சமான, சின்ன, சிறுத்த, அற்பமான, செலவிலேபிடிப்புள்ள.
2. *Lean, wanting flesh,* ஒல்லியான, இளைத்த, மெலிந்த, சதைப்பற்றில்லாத.
person, ஒல்லியாள், நோஞ்சலாள்.
Enough, and to spare, சேனையுண்டு, இதுவும் போதும், இதற்காப்பாலும்போதும்.
Can you spare me a sheet of paper? ஒருகடுதாசி தருவாயோ?
I will spare you the trouble, நீர்வருத்தப்படவேண்டாம், நான் அதைச்செய்வேன்.
Spare no time, வீண்காலம்போக்காதே, நேரத்தைவிடாதே.
spare no expense, சிலவைப்பாராதே.
Spareness, *s.* ஒல்லி, மெலிவு, நோஞ்சல்.
Sparerib, *s.* விலாவெலும்புத்துண்டு.
Sparing, *adj. Scarce, little,* கொஞ்சமான, அற்ப.
to be sparing, சிறுகச்செலவழித்தல.
Sparingly, *adv.* சிறுக, பிடிப்பாய், கையழுத்தமாய்.
Sparingness, *s.* பிசுனத்தனம்.
Spark, *s.* பொறி, நெருப்புப்பொறி.
as a lover, நண்பன், பிலுக்கன், அலங்காரப்பிரியன்.
Sparkle, *v. n.* பளிரிடுகிறது, மின்னுகிறது, பொறிபறக்கிறது.
as spirits, நொதிக்கிறது,
as fire, anger, &c. கோபப்பொறிபறக்கிறது.
as the eyes, கண்பொறிகலங்குகிறது, பொறிமின்னுகிறது.
Sparkling, *s.* பளபளப்பு, மினுமினுப்பு, சோதி.
Sparrow, *s.* அடைக்கலங்குருவி.
Spasm, *s. convulsion, violent and involuntary contraction of any part,* இசிவு, இழுப்பு, சன்னிவலிப்பு, கால்பிரட்டல், கைபிரட்டல் அரட்டல், பிரட்டல, நரம்புமுடுக்கு.

Spasmodic, *adj. convulsive,* இசிவான, வலிப்புள்ள, கெண்டையேறுகிற.
Spatter, *v. a.* தெறிக்கிறது, தெளிக்கிறது.
Spatter, *v. n.* துப்புகிறது, உமிழ்கிறது.
Spattering, *s.* தெறிப்பு, துப்பு, உமிழ்தல்.
Spatula, *s. A spattle or slice,* மருந்துதடவும் சவளக்கத்தி, துடுப்பு.
Spawn, *s.* முட்டை, சினை.
  of fish, மீன்சினை. கரு.
  of frogs, தவளைச்சினை.
Spawn, *v. a.* சினையிடுகிறது, சினைபீச்சுகிறது.
Spawner, *s.* பெண்மீன்.
Spay, *v. a. To castrate females,* ஸ்திரிசாதிகளைகருப்பமறவடிக்கிறது, கருப்பதாதுவில்லாமற்செய்கிறது, ஆண்சாதிகளை விதையடிக்கிறதென்பதுபோல.
Speak, *v. n. To utter articulate sounds, express thoughts by words,* பொருள்தருமொழியொலிக்கிறது, நினைவுகளைச்சொல்லால் வெளிப்படுத்துகிறது, பேசுகிறது.
  2. *To harangue, to make a speech,* பிரசங்கிக்கிறது, நெடுகப்பேசுகிறது,விஸ்தரிக்கிறது.
  3. *To talk for or against, to dispute,* வாதாடுகிறது, தருக்கிக்கிறது, வாக்குவாதம் பண்ணுகிறது.
  4. *To discourse, to make mention,* சொல்லுகிறது, பேசிக்கொள்ளுகிறது.
  briefly சுருக்கமாய்ப்பேசுகிறது.
  cautiously, விழிப்பாய்ப்பேசுகிறது, தன்னைக்கட்டிப்பேசுகிறது.
  with confidence, துணிந்துபேசுகிறது, நிலைவரங்கொண்டுபேசுகிறது.
  with a feigned voice, குரல்மாறிப்பேசுகிறது.
  distinctly, தீர்க்கமாய்ப்பேசுகிறது.
  harshly, கண்டித்துப்பேசுகிறது.
  of, குறித்துப்பேசுகிறது.
  artfully or affectedly, தந்திரமாய்ப்பேசுகிறது, ஒயிலாய்ப்பேசுகிறது, இலாவாய்ப்பேசுகிறது.
Speaker, *s.* பேசுவோன், பிரசங்கி, வாய்சாலகன்.
Speaking, *s.* பேச்சு.
Spear, *s.* ஈட்டி, வல்லையம்.
Spear, *v. a.* ஈட்டியாற்குத்துகிறது.
Spearman, *s.* ஈட்டிக்காரன்.
Spearmint, *s.* ஓர்பூண்டு.
Special, *adj.* 1. *Denoting a sort or species,* சாதிக்குரிய, வகைக்குரிய, இனத்துக்குரிய, வகைதொகைக்குரிய.
  2. *Particular, peculiar,* விசேஷித்த, குறிக்கபட்ட, முக்கியமான.
  3. *appropriate, designed for a particular purpose,* உரிய, உரித்தான நியமித்தசிறப்பான.
  4. *Extraordinary, uncommon,* ஒருபொழுதுமில்லாத, எங்குமில்லாத, மிகுவிசேஷிப்பான, புதுமையான.
  to be special, சிறந்திருக்கிறது, விசேஷித்திருக்கிறது.
Specially, *adv.* விசேஷிப்பாய்.
Speciality, *s. Particularity,* விசேஷிப்பு, முக்கியம், சிறப்பு.
Specie, *s.* நாணயம், காசு, வெள்ளிக்காசு, பொற்காசு.
Species, *s.* இனம், கூட்டம், கணம், வகை, தினுசு, பெருந்தொகைக்குட்பட்டசிறுவகைகள்.
Specific, *s.* கைகண்டமருந்து.
Specifical, *adj.* 1. *That which makes a thing of the species of which it is,* ஒன்றையதின் இனத்துக்குரித்தாக்குங்குணமுள்ள, சாதிக்குணமுடைய, இனவியற்கையுடைய, எந்த இனத்துக்கு எதுசேர்த்திக்கையோ அந்தஇனத்தோடு அதைச்சேர்ப்பிக்குந்தன்மையுடையது.
  2. *In (medicine) Appropriated to the cure of some particular distemper,* யாதேனுமொரு விசேஷித்த நோவுக்கான மருந்துக்குரிய.
  gravity, தன்கனம், தன்பளுவு.
Specifically, *adv.* குறிப்பாய், தொட்டுக்காட்டும்படியாய், அதததற்குரிய.
Specificate, *v. a.* தொட்டுக்காட்டுகிறது, குறிக்கிறது.
Specification, *s. Distinct notation, determination by a peculiar mark,* சுட்டிக்குறிக்குங் குறிப்பு, உரியகுணங்களாற்குறித்துத் தீர்மானித்தல்.
Specify, *v. n. To mention, to show by some particular marks of distinction,* குறித்துச்

சொல்லுகிறது, சுட்டிக்காட்டுகிறது, வயணமாய்க்காண்பிக்கிறது.
Specimen, *adj.* மாதிரி, சாயல், போங்கு.
Specious, *adj.* மேற்பார்வையான, போலியான, தோற்றமான.
Speciously, *adv.* போலியாய் மேல்பார்வையாய், வெளிவேஷமாய்.
Speciousness, *s.* போலி, மேல்மினுக்கு வெளிவேஷம்.
Speck, *s.* புள்ளி, பொட்டு, கறை, மாசு.
Speck, *v. a.* புள்ளிபோடுகிறது, பொறிபொறியாய்ப்பொட்டிடுகிறது.
Speckle, *v. a.* பலநிறப்புள்ளிகளிடுகிறது.
Speckle *s.* பலநிறப்பொறி பலவர்னப்புள்ளி.
Speckled, *adj.* புள்ளியுள்ள, பொட்டுப்பொட்டான.
Spectacle, *s.* 1. *A show, a gazing stock, any thing exhibited to the view as eminently remarkable,* வெளிப்பார்வை, காட்சி, தோற்றம், வேடிக்கை.
2. *Any thing perceived by the sight,* கண்ணாற்பார்க்கப்படுவது.
3. (*In the plural*) *Glasses to assist the sight,* கண்ணாடி, மூக்குக்கண்ணாடி.
Spectator, *s.* பார்க்கிறவன், காண்பான்.
Spectre, *s. Apparition, appearance of persons dead,* ஆவேசக்காட்சி, செத்தோருருவந்தோற்றுகை.
Spectrum, *s. An image, a visible form,* வெற்றுருவம், உருவெளி, உருவத்தின்வெறுந்தோற்றம்.
Speculate, *v. a. To consider attentively, to look through with the mind,* மனக்கண்ணாற்பார்க்கிறது, உள்ளாராய்ச்சிசெய்கிறது, யூகிக்கிறது, தியானிக்கிறது.
Speculation, *s. Examination by the eye, view,* கண்ணாற்பார்த்துப்பரிசோதித்தல்.
2. *mental view, intellectual examination, contemplation,* மனக்கண்பார்வை, அறிவாராய்ச்சி, யூகிப்பு, யோகம், தியானம்.
3. *mental scheme not reduced to practice,* யோசனை, எண்ணம், பிராந்தி, கியானயோசனை.
Speculative, *adj.* 1. *given to speculation, contemplation,* யூகிக்கிற, ஆராய்கிற, மனக்கண்ணாற்பார்க்கிற, வெறும்யோகிப்பான.
2. *Theoretic, notional, ideal, not practical,* வீண்யோசனையான, கலெக்கியானமான, செய்கையல்லாத, காரியமற்ற.
Speculatively, *adv.* சிந்தனையாய், எண்ணமாய்.
Speculator, *s.* சிந்திக்கிறவன், யூகி, விவேகி.
Speculum, *s. A mirror, a looking glass that in which representations are formed by reflection,* உருவங்காட்டுங்கண்ணாடி, ஸ்படிகம், பிரதிபிம்பிகை.
Speech, *s.* பேச்சு, பாஷை.
as oration or harangue, பிரசங்கம், பாஷியம்.
Speechless, *s.* பேச்சற்ற, பேச்சுமூச்சில்லாத, ஊமையான.
Speechlessness, *s.* பேச்சின்மை, ஊமைத்தன்மை.
Speed, *s.* சீக்கிரம், விரைவு, வேகம், துரிதம், *of the horse,* குதிரைவேகம், *good speed,* காரியசித்தி.
Speed, *v. a.* விரைவாய்விடுகிறது, ஆகப்பண்ணுகிறது, சித்தியாக்குகிறது, சீக்கிரப்படுத்துகிறது, துரிதமாய்நடத்துகிறது.
Speed, *v. n.* ஓடுகிறது, தீவரிக்கிறது.
Speediness, *s.* சீக்கிரம், வேகம், துரிதம்.
Speedy, *adj.* சீக்கிரமான, விரைவான.
Spell, *s.* மந்திரம், உச்சாரணம்.
Spell, *v. a.* எழுத்துக்கூட்டுகிறது, மந்திரோச்சாரணம்பண்ணுகிறது.
Spend, *v. a.* செலவழிக்கிறது.
time, பொழுதுபோக்குகிறது.
time in a thing, ஒருவேலையில்காலம்போக்குகிறது.
If I should spend my life, என் ஆயுசையுமிழந்தால்.
I am quite spent, நான் விடாய்த்திருக்கிறேன்.
to be spent, செலவழிக்கிறது, செலவிடுகிறது.
when the night was far spent, இராச்சாமமானபொழுது.
Spendthrift, *s.* ஊதாரி, ஆராதூரிச்செலவுக்காரன், செலவாளி.
Spend, *adj.* செலவழிந்த, செலவாய்ப்போன.

Sperm, *s.* விந்து, சுக்கிலம், வித்து, இந்திரியம். *of frogs, &c.* சினை, கரு.
Spermaceti, *s.* இந்திரியம், திமிங்கலநிணம், திமிங்கலவித்து.
Spermatic, *adj.* இந்திரியசம்பந்தமான, சுக்கிலமுள்ள.
chord, விதைநரம்பு, இந்திரியநரம்பு.
Spew, *v. n.* வாந்திபண்ணுகிறது, ஒக்களிக்கிறது, கக்குகிறது.
Spewing, *s.* வாந்தி, ஒக்காளம், கக்கு.
Spew, *v. n.* உமிழ்கிறது, எதிர்க்களிக்கிறது.
Sphere, *s.* 1. *A globe; an orbicular body; a body of which the centre is at the same distance from every point of the circumference*, உண்டை, கோளம், உருண்டை, வடிவம்.
A thing out of my sphere, என்னால்கூடாத காரியம்.
Circle in the celestial sphere, மண்டலம், கிரகவட்டம்.
as neighbourhood, &c. சுற்று, எல்லை, சுற்றுப்புறம்.
2. *A glole representing the earth or sky*, பூமியுண்டை, ஆகாசவுண்டை.
Spheric, Spherical, *adj.* உண்டையான, கோளமான.
Spherically, *adv.* உண்டையாய், திரட்சியாய்.
Spherics, *s.* கோள்சாத்திரம்.
Spheroid, *s.* நீண்டகோளம். முட்டைவடிவு.
Spheroidal, *adj.* முட்டைவடிவான.
Sphinx, *s.* காமதேனு, நாரிமுகசிங்கதேகமிருகம்.
The sphinx was a famous monster in Egypt, that remained by Nilus, having the face of a virgin, and the body of a lion, நாரிமுகசிங்கதேகமிருகமானது எகிப்த்துதேசத்திலே நீலுநதிஓரத்தில் யிருக்கின்றதாம். அதற்கு முகம் ஸ்திரிரூபம் தேகம் சிங்கரூபம்.
Spice, *s.* சுகந்தச்சரக்கு, வாசனைப்பூண்டு, சுகந்தசம்பாரம்.
Spice, *v. a.* உப்புறைப்பு, கரிப்புமுதலியவைகளிடுகிறது, மசாலைக்கட்டுகிறது, சம்பாரமிடுகிறது.
Spicery, *s.* 1. *The commodity of spices*, வாசனைப்பண்டங்கள், வாசனைச்சரக்குவகைகள்.
Spicy, *adj.* சுகந்தவாசனையான.
abounding with aromatics, கந்தம்நிறைந்த.
Spider, *s.* *The animal that spins a web for flies*, சிலம்பிப்பூச்சி, பொட்டுப்பூச்சி, சிலந்தி.
web, சிலம்பிநூல், சிலம்பிநூற்பின்னல்.
Spigot, *s.* மரவாணி, ஆணி, ஆப்பு.
Spike, *s.* ஆணி, ஊசி, சலாகை, குண்டில்லாத ஆணி.
of grain, கதிர்.
Spike, *v. a.* ஆணிதைக்கிறது, ஆணியடிக்கிறது.
Spikenard, *s.* வெட்டிவேர், இலாமிச்சைவேர்.
Spile, *s.* ஆணி, ஆப்பு.
Spill, *v.* சிந்துகிறது, சிதறுகிறது.
Spin, *v.* நூல்நூற்கிறது.
a top, பம்பரமாட்டுகிறது.
with a wheel, இராட்டினஞ்சுற்றுகிறது.
Spinal, *adj.* முதுகெலும்புக்குரிய.
marrow, மூளை, மச்சை.
joints, முதுகெலும்பின்பொருத்தம், கணு.
Spindle, *s.* கதிர், கதிர்க்கம்பி, கதிரூசி.
Spine, *s.* *The backbone*, முதுகெலும்பு, தண்டெலும்பு, முள்ளெலும்பு.
Spinning, *s.* சுழலல், நூல்நூற்கை.
wheel, இராட்டினம்.
Spinous, *adj.* முள்ளெலும்புள்ள, முள்ளுநிறைந்த.
Spinster, *s.* 1. *(In law.) The general term for a girl or maiden woman*, குமரி, கன்னிகை, விவாகம்பண்ணாதவள்
Spiny, *adj.* முள்ளெலும்புள்ள, முள்ளுள்ள.
Spiracle, *s.* *A breathing hole, a vent, a small aperture*, காற்றுப்பரியுஞ் சிறுதுவாரம், துளை, நாராசத்துவாரம்.
Spiral, *adj. and sub.* *Curve, winding, circularly involved like a screw*, சுற்றுன, முறுக்கான, வளையம், வளையமான.
Shells, முறுக்குக்கிளிஞ்சில், சுரிமுகம்.
Spirally, *adv.* முறுக்குக்கிளிஞ்சில்போன்ற, கிளிஞ்சில்முறுக்கான, முறுக்காய்.
Spire, *s.* 1. *A curve line, any thing wreathed or contorted, every wreath being in a*

different plane; a curl, a twist, a wreath, முறுக்கு, சுற்று, சரி, வளையம், திருகு, திருகல்.
2. *Any thing growing up taper, a round pyramid, a steeple,* வட்டமானகோபுரம், கொடுமுடி.
Spirit, *s.* 1. *Breath, wind,* காற்று, மூச்சு.
2. *An immaterial substance, an intellectual being,* உருவமற்றது, ஆவி, சேதனவஸ்து, அரூபி.
3. *The soul of man,* மனுஷாத்துமா, சீவன், உயிர்.
4. *An apparition,* பிசாசு, பேய், ஆவேசம்.
5. *Temper, habitual disposition of the mind,* குணம், தன்மை, சுபாவம், போங்கு.
6. *Ardour, courage, elevation, vehemence of mind,* தைரியம், தீரம், ஊக்கம், மனோச்சாகம்.
7. *Genius, vigour of mind,* யூகம், மனக்கூர்மை, அறிவின்நுழை, புலம்.
8. *Eagerness, desire,* ஆசை, விருப்பம், அவா.
9. *An inflammable liquor raised by distillation, as Brandy, Rum, &c.* சாராயம், பிராந்தி, வஸ்து.
Spirited, *adj.* உரோசமுள்ள, வேகமுள்ள, முயற்சியான.
Spiritedly, *adv.* உற்சாகமாய், விவேகமாய்.
Spiritedness, *s.* விவேகம், கூர்மை, சுரணை.
Spiritless, *adj.* தளர்ந்த, உடைந்த, சோர்ந்த, பெலனற்ற.
Spiritlessness, *s.* சுறுசுறுப்பில்லாமை.
Spirits, *s. as essence,* திராவகம், வடிநீர்.
Spiritual, *adj.* ஆவியுள்ள, அரூபமான, ஞானசம்பந்தமான.
body, ஆவி, சூக்ஷமதேகம், ஆவிக்குரியசரீரம்.
enjoyment, ஞானஅநுபவம், ஆனந்தம்.
gift, வரப்பிரசாதம், வரம், தேவப்பிரசாதம்.
instruction, தீட்சை, உபதேசம், ஞானபோதனை.
teacher, / *adviser,* } குரு, தேசிகன் உபதேசி.
knowledge, பேரறிவு.
Spirituality, *s.* ஆவியாயிருக்குந்தன்மை, அருபத்தும், ஞானசம்பந்தம், ஆத்துமசம்பந்தகாரியம், குருபீடசம்பந்தமானகாரியம்.
Spiritualize, *v. n. To refine the intellect, to purify from the feculencies of the world,* அறிவைச்சுத்திசெய்கிறது, உலகசம்பந்தமறச்செய்கிறது,
Spiritually, *adv.* ஞானமாய், நல்லசிந்தையாய், வைதிகமாய்.
Spirituous, *adj.* வெறியுள்ள, மஸ்தமாக்குகிற, இலாகிரியுள்ள.
liquors, மஸ்து, மதுபானம்.
Spiry, *adj.* புரியுள்ள, முறுக்குள்ள.
Spissitude, *s. Grossness, thickness,* தடிப்பு, கதுமன், கதிப்பு.
Spit, *s.* துப்பல், உமிழ்நீர்.
for roasting, இருப்புச்சலாகை, இறைச்சிகுத்திச்சுடுங்கம்பி.
Spit, *v.* துப்புகிறது, உமிழ்கிறது.
Spite, *v.* மனமடிவாக்குகிறது.
Spite, *s. Malice, rancour, hate, malignity, malevolence,* எரிப்பு, வருமம், பகை.
in spite of, இன்னானுக்கு எவ்வளவு எதிராயிருந்தாலும் எவ்விதமாயிருந்தாலும்.
Spiteful, *adj.* வருமமுள்ள, பகையுள்ள.
Spitefully, *adv.* வருமமாய், வைராக்கியமாய்.
Spitefulness, *s.* வைராக்கியம், வருமம், பகை,
Spitting, *s.* துப்பல், உமிழ்நீர்.
pot, படிக்கம், எச்சிதுப்பும்படிக்கம்.
Spittle, *s.* துப்பல், உமிழ்நீர்.
Splash, *s.* தெறிப்பு, சேற்றைவாரியெறிதல்.
Splash, *v. a.* அறைகிறது, சேற்றைவாரியடிக்கிறது.
Splash, *v. n.* தெறிக்கிறது.
Splashy, *adj.* சதசதப்பான, சேற்றுளையான.
Spleen, *s.* மண்ணீரல், ஈரல்.
as spite, பகை, உட்பகை.
Spleeny, *adj. Angry, peevish, humorous,* கோபமுள்ள, எரிச்சலுள்ள.
Splendent, / Splendid, } *adj.* சிறப்பான, வேடிக்கையான, அலங்காரமான.
Splendor, *s.* பிரகாசம், ஒளி.
as magnificence, pomp, மேன்மை, பிரஸ்தாபம், பிரபலம், மகத்துவம்.

Splenetic, *adj. Troubled with the spleen, fretful, peevish,* மண்ணீரல்நோயால்வாதைப்படுகிற, துயரமான, குறுவுதலான.
Spleenish, *adj. Fretful, peevish,* வேக்காளமுள்ள.
Splice, *s.* துண்டு, அண்டை.
in carpentry, பற்று, அண்டை, துண்டு, இரண்டுதுண்டுகளைமுடிச்சுத் தெரியாமலிசைப்பது.
in seamanship, இசைப்பு, அடுப்பு.
Splinter, *s.* கட்டை, சிராய், சிம்பு.
Split, *s.* பிளப்பு, பிளவு, சிராய்.
Split, *v. a.* பிளக்கிறது, சிராயடிக்கிறது.
lengthwise, நெடுகப்பிளத்தல்.
Split, *v. n.* பிளக்கிறது, விரிகிறது, வெடிக்கிறது.
Splutter, *v. n.* அலப்புகிறது, கத்துகிறது, அமளிபண்ணுகிறது.
Spoil, *s.* 1. *That which is taken by violence, that which is taken from an enemy, plunder, pillage, booty,* கொள்ளை, சூறை.
2. *The act of robbery, robbery, waste,* திருட்டு, கொள்ளையாடல்.
Spoil, *v. a.* கெடுக்கிறது, பழுதாக்குகிறது.
as plunder, கொள்ளையிடுகிறது, சூறையாடுகிறது.
Spoil, *v. n.* பழுதாகிறது, கெடுகிறது.
as food, ஊசுகிறது, அழுகுகிறது, ஊளைநாறுகிறது.
Spoiled, *adj.* ஊசலடிக்கிற.
spoiled child, செல்லப்பிள்ளை.
Spoiler, *s.* கொள்ளைக்காரன், கெடுக்கிறவன்.
Spoke, *s. The bar of a wheel that passes from the nave to the felloe,* சக்கரத்தில்சுற்றிவரவைத்திருக்குங்கட்டை, அராவிட்டம், சகடக்கால்கட்டை, நாராசக்காம்பு, அராக்கால்.
Spoliate, *v. a. To rob, to plunder,* கொள்ளையிடுகிறது, திருடுகிறது, பறிக்கிறது.
Spoliation, *s.* கொள்ளை, பறிப்பு.
Spondee, *s.* நேரசைச்சீர்.
Sponge, *s.* கடற்காளான், கடற்பஞ்சு.
Sponge, *v.* கடற்பஞ்சினால் நீரையுட்டுகிறது, துடைக்கிறது, பிறரிடத்தில்வீண்சோறுதின்றலைகிறது.
Sponger, *s.* தூக்குணி, வீடுதூங்கி, வீண்சோறுதின்னி.

Sponsor, *s.* பிணையாளி, உத்தரவாதி.
in baptism, ஞானத்தகப்பன், ஞானத்தாய்.
Sugarcandy, *s.* சுவைக்கட்டி, கற்கண்டு, கருப்புக்கட்டி.
Suggest, *v. a.* காட்டிச்சொல்லுகிறது, குறித்துச்சொல்லுகிறது, நினைப்பூட்டுகிறது.
Suggestion, *s.* குறி, நினைப்பு, நினைப்பூட்டுகை.
Suicide, *s.* தற்கொலை, சுயநாசனம்.
the person, தற்கொல்லி, தற்கொலைக்காரன், சுயநாசகன்.
Suigeneris, *adj.* தன்னினமான, சுயதருமங்கொண்ட.
Suit, *s.* அணி, வரிசை.
in law, வழக்கு, வியாச்சியம், பிராது.
of clothes, சோமன்சோடு, ஒருசோடுதோவத்தி, உடுப்பு, உடுப்புமுஸ்திப்பு.
as request, மனு.
as retinue, பரிவாரம், சூழ்ந்துவருவோர்.
as courtship, வசியம்.
Suit, *v. a.* பொருத்துகிறது, இசைக்கிறது, இணைக்கிறது.
to be suited to, இசைகிறது, பொருந்துகிறது, இணங்குகிறது.
Suit, *v. n.* ஆகிறது, ஒத்துக்கொள்ளுகிறது, சரிப்படுகிறது, நேர்படுகிறது.
Suitable, *adj.* தகுதியான, தகுந்த, தக்க.
Suitably, *adv.* தகுதியாய், தகுந்தபடி, தக்கபடி.
Suitor, *s.* இஸ்திரிவசியன், இஸ்திரியைத்தொடர்வோன், வழக்காளி.
Sulkily, *adv.* சுடுமூஞ்சுத்தனமாய், முரணாய், மனவெப்பமாய்.
Sulkiness, *s.* மனவெப்பம், சுடுமூஞ்சுத்தனம்.
Sulky, *adj.* சுடுமூஞ்சுத்தனமான, மனவெப்பமான.
Sullen, *adj.* குறும்புத்தனமான, துஷ்ட, படியாத.
person, குறும்புத்தனம்பண்ணுவோன், துஷ்டன்.
Sullenness, *s.* கடுகடுப்பு, வெடுவெடுப்பு, வினைக்குணம், ஒட்டாரம்.

Sullied, *adj.* கறைப்பட்ட, மங்கலான, அழுக்கான, வடுவுள்ள, மாசுள்ள, பங்கமான.
Sully, *s.* மாசு, மறு, கறை, களங்கம், கேடு, மங்கல்.
Sully, *v. a.* மாசுப்படுத்துகிறது, கறைப்படுத்துகிறது, மங்கப்பண்ணுகிறது.
Sully, *v. n.* மாசுப்படுகிறது, கறைப்படுகிறது.
Sulphate, *s.* கந்தகத் திராவகத்தாலாயது.
of zinc, வெள்ளைத்துத்தம்.
of iron, அன்னபேதி.
of copper, துரிசி, மயிற்றுத்தம்.
Sulphate, *of alumine, alum*, படிக்காரம்.
Sulphur, *s.* கந்தகம், புடமிடப்பட்டகந்தகம்.
of copper, துத்தம், துரிசு, பாற்றுத்தம்.
of zinc, மயிற்றுத்தம், பாற்றுத்தம்.
in sticks, சுரைக்காய்க்கந்தகம்.
in small pieces, நெல்லிக்காய்க்கந்தகம்.
flowers of, பூக்கந்தகம், கந்தகபஸ்பம்.
Sulphuret, *of mercury or vermilion*, சாதிலிங்கம், இங்குலிகம்.
of arsenic—yellow, அரிதாரம், பொன்னரிதாரம், தாளகம்.
red, மனோசிலை.
Sulphuric, *adj.* கந்தகமுள்ள, கந்தகத்தாலாய.
acid, கந்தகத்திராவகம், கந்தகச்செய்நீர்.
ointment, கந்தகத்தைலம்.
Sulphurious, *adj.* கந்தகமுள்ள, கந்தகமான.
Sultan, *s.* துருக்கவரசன், துருக்கதேசாதிபதி.
Sultan, *adj.* துருக்கவரசனுக்குரிய.
Sultana, Sultaness, } *s.* துருக்கவரசி, துருக்கராணி.
Sultriness, *s.* புழுக்கம், உட்டணம், வெப்பம்.
Sultry, *adj.* உருமமான, புழுக்கமான, வெப்பமான.
Sum, *s.* தொகை, அடக்கம், பொழிப்பு, திரட்சி.
total, மொத்தம், ஆகத்தொகை.
Sum, *v. a.* தொகைப்படுத்துகிறது, கணக்குகூட்டுகிறது, தொகுக்கிறது.
to be summed up, தொகுகிறது, தொகுதல்.
Summarily, *adv.* தொகையாய், பொழிப்பாய், திரட்டாய், சுருக்கமாய்.
Summary, *s.* அடக்கம், சுருக்கம், பொழிப்பு, திரட்டு.
Summary, *adj.* அடக்கமான, தொகையான, பொழிப்பான, திரட்டான.
to be, சுருங்குகிறது.

Summer, *s.* கோடைகாலம், கோடை, வேனில், வசந்தம்.
Summerset, Somersault, Somerset, } *s.* குத்துக்கரணம்.
Summit, *s.* தலைப்பு, உச்சி, கூர், முனை, நுனி.
of a mountain, சிகரம், மலைச்சிகரம், முடி.
Summon, *v. a.* நியாயஸ்தலத்துக்கழைக்கிறது, வரக்கட்டளையனுப்புகிறது.
Summons, *s.* ஒப்பம், அழைப்புப்பத்திரம், கட்டளைப்பத்திரம்.
Sumoom, *s.* (*see* simoom,) உட்டணம், நச்சுக்காற்று.
Sumptuary, *adj.* அன்னவஸ்திராதிப்பிரமாணத்துக்கடுத்த.
Sumptuous, *adj.* சம்பிரமமான, குசாலுள்ள, அலங்காரமான.
Sumptuously, *adv.* சம்பிரமமாய், அலங்காரமாய்
Sumptuousness, *s.* சம்பிரமம், அலங்காரம்.
Sun, *s.* சூரியன், ஞாயிறு, ஆதித்தன், அருக்கன், உதயன்.
shine, வெயில், ஆதபம்.
a burning, கடுவெயில், வெயில்.
stroke of, கிரணவீச்சு.
Sunbeam, *s.* கதிர், சூரியகிரணம், ஆதபம்.
Sunday, *s.* ஞாயிற்றுக்கிழமை.
Sunder, *v. a.* அறுக்கிறது, கண்டிக்கிறது, கலைக்கிறது, சிதைக்கிறது, துண்டிக்கிறது.
Sundered, *adj.* அறுந்த, பிரிந்த, விட்ட, பிளந்த, தெறித்த.
to be sundered, பிய்கிறது.
claws, நகத்தாலேபீறப்பட்ட.
Sundial, *s.* சூரியகடிகாரம்.
Sundry, *adj.* பலவித, பற்பல, நானாவித, பலவகையான.
affairs, பற்பலகாரியம்.
Sundries, *s.* (*plur.*) பலபண்டம், பலவர்க்கங்கள், கலப்பு.
Sunflower, *s.* சூரியகாந்தி, பொழுதுவணங்கி.
Sunken, *adj.* அமிழ்ந்தப்பட்ட, அமிழ்ந்தின, பள்ளமான.
eyes, குழிந்தகண்.
Sunny, *adj.* வெயிலுள்ள, வெயிலெறிக்கிற.

Sunrise, Sunrising, } *s.* சூரியோதயம், உதயம், அருணோதயம், பிராதக்காலம்.
Sunset, Sunsetting, } *s.* அத்தமனம், அத்தமிப்பு, அந்தம், அபராணகாலம், அஸ்தம்.
Sunshine, *s.* வெயில், தீயோதம்.
Sunstone, *s.* சூரியகாந்தம், சூரியகாந்தக்கல்.
Sup, *v. n.* இராச்சாப்பாடுசாப்பிடுகிறது.
Sup, *v. a.* சூப்புகிறது, உறிஞ்சுகிறது, உமிகிறது.
Superableness, *s.* செயிக்கத்தக்கதன்மை, வெல்லக்கூடியதன்மை.
Superably, *adv.* வெல்லத்தக்கதாய்.
Superabound, *v. n.* பொங்கிவழிகிறது, அதிகப்படுகிறது, மிகுகிறது.
Superabundance, *s.* மிகுதி, அதிகம், மலிவு, மிச்சம்.
Superabundant, *adj.* பரிபூரணமான, மிகுதியான, மிச்சமான.
Superabundantly, *adv.* பரிபூரணமாய், மிகுதியாய், மிச்சமாய்.
Superadd, *v. a.* கூட்டுகிறது, அதிகமாய்ச்சேர்க்கிறது.
to be superadded, அதிகமாய்ச்சேர்க்கப்படுகிறது.
Superannuate, *v. n.* விருத்தாப்பியமாகிறது, வயதுசென்றுபோகிறது.
Superannuation, *s.* கிழத்தன்மை, விருத்தாப்பியம், மூப்பு.
Superb, *adj.* சிறப்புள்ள, கீர்த்தியான, நேத்தியான.
to be superb, சிறக்கிறது, அலங்காரமாகிறது.
Supercargo, *s.* கப்பற்காரியக்காரன், கப்பற்கணக்கன், பண்டாரி.
Supercilious, *adj.* நிமிர்ச்சியான, முதிர்ச்சியான, அகந்தையான.
conduct, நிமிர்ந்தநடை, இறுமாப்பான நடை.
to be supercilious, வீறுப்புக்கொள்ளுகிறது, முதிர்ச்சிபண்ணுகிறது.
Supereminent, *adj.* மகாசிறப்புள்ள, மகாகீர்த்யுள்ள.
to be supereminent, பெருமையிற்சிறக்கிறது, தலைமைப்படுகிறது.
Supererogation, *s.* மட்டுக்குமிஞ்சினசெய்கை.
works of, அதிகபுண்ணியம்.

Superficial, *adj.* ஆழமற்ற, பருமட்டியான, புறக்கோலமான.
work, சரவைவேலை, பருவேலை, போலிவேலை.
Superficially, *adv.* ஒருவிதமாய், போலியாய், பருமபடியாய்.
Superficialness, *s.* மேற்பூச்சு, ஆழமின்மை.
Superficies, *s.* பரப்பு, தட்டு, பரவை, வீதி, வெளிப்புறம்.
Superfine, *adj.* மெல்லிய, உயர்ந்த.
Superfluity, *s.* மட்டுக்குமிச்சம், அளவுக்கதிகம், மேன்மிச்சம்.
Superfluous, *adj.* கழிவான, சேடமான, மேல்மிச்சமான.
Superfluously, *adv.* மேல்மிச்சமாய், கழிவாய், சேடமாய்.
Superhuman, *adj.* மனுஷீகத்துக்குமேற்பட்ட, மனிதனுக்கெட்டாத.
Superincumbent, *adj.* மேற்கிடக்கிற, மேற்றங்குகிற.
weight, பொறுப்பு, சுமை, பாரம்.
Superinduce, *v. a.* மேற்கூட்டுகிறது, மேலே சேர்க்கிறது.
Superintend, *v. a.* நடத்துகிறது, நடப்பிக்கிறது, பராமரிக்கிறது, கண்காணிக்கிறது.
Superintendence, *s.* மேல்விசாரணை, கண்காணம், கண்காணிப்பு.
Superintendent, *s.* கண்காணி, மேல்விசாரணைக்காரன், அதிகாரி.
Superintendent, *adj.* கண்காணிக்கிற, மேல்விசாரிக்கிற.
Superior, *s.* மேல்விசாரிப்புக்காரன்.
Superior, *adj.* உத்தம, உசிதமான, உயர்ந்த.
person, அதிகாரி, கருத்தா, உயர்ந்தவன்.
to be superior, கதிக்கிறது, சிறக்கிறது, மேற்படுகிறது.
Superiority, *s.* தலைமை, அதிகாரம், ஆதிக்கம், உயர்ச்சி, மேன்பாடு.
Superlative, *adj.* மகாஉச்சமான, நிகரற்ற, உத்தமோத்தம்.
degree, உச்சப்படி.
Supernatural, *adj.* இயல்புக்கெட்டாத, சுபாவத்தைக்கடந்த.
Supernumerary, *adj.* தொகைக்குமேர்பட்ட, எண்ணுக்கடங்காத.

Superscribe, *v. a.* மேல்விலாசமெழுதுகிறது.
Superscription, *s.* மேல்விலாசம், மேலெழுத்து.
Supersede, *v. a.* விலக்குகிறது, தவிர்க்கிறது, கழிக்கிறது, நீக்குகிறது.
Supersedure, *s.* விலக்குகை.
Superstition, *s.* வீண்பத்தி, அவபத்தி, குருட்டுப்பத்தி.
Superstitious, *adj.* நிமித்தம்பார்க்கிற.
person, நிமித்தகன, சகுனி.
Superstitiously, *adv.* வீண்பத்தியாய், அவபத்தியாய்.
Superstitiousness, *s.* அஞ்ஞானப்பிடிவாதம், அவபத்தி.
Superstruct, *v. a.* மேற்கட்டுகிறது, கடைகால் மேற்கட்டுகிறது.
Superstructure, *s.* மேற்கட்டு, அஸ்திவாரத்தின் மேற்கட்டப்பட்டது.
Supervene, *v. n.* மேலதிகமாய்வருகிறது, மேற்செல்லுகிறது, சம்பவிக்கிறது.
Supervention, *s.* இடையிட்டகாரியம், பதிற்காரியம், அபூரவசம்பவம்.
Supervise, *v. a.* கண்காணிக்கிறது, கண்காணப் பண்ணுகிறது, மேல்விசாரிக்கிறது, பரிசோதிக்கிறது, திருத்துகிறது.
Supervision, *s.* கண்காணம், மேல்விசாரணை, பரிசோதனை.
Supervisor, *s.* கண்காணி, பார்வைக்காரன், மேல்விசாரணைக்காரன், பரிசோதிப்போன்.
Supine, *adj.* சோம்பலான, மல்லாந்துகிடக்கிற அசதியுள்ள, முகமேலாய்ச்சயனிக்கிற.
Supineness, *s.* மல்லாப்பு, மல்லாக்கு, சோம்பல், கவலையின்மை.
Supper, *s.* இராச்சாப்பாடு, இராப்போசனம்.
Supperless, *adj.* இராப்போசனமில்லாத, இராப்பசியான.
Supplant, *v. a.* தட்டிவீழ்த்துகிறது, தள்ளிவிட்டபகரிக்கிறது, மோசப்படுத்துகிறது.
Supple, *adj.* பதமான, மெதுவான, இணக்கமான.
Supple, *v. a.* பதமாக்குகிறது, மெதுவாகவளையச்செய்கிறது, இளகச்செய்கிறது.
Supplement, *s.* தொடர்ச்சி, சேர்ப்பு, அனுபந்தம், தொடர்பு.
Supplemental, } *adj.* தொடர்ச்சியான, சேர்க்
Supplementary, } கப்பட்ட, அட்டவணையான.
remark, ஒருதொடர்வுசனம், முடிவுவாக்கியம்.

Suppleness, *s.* பதம், மெது, நெகிழ்ச்சி, இளக்கம், மிருது.
Suppliant, *s.* இரப்போன், பிச்சைக்காரன், யாசகன், பிச்சகன்.
Supplicant, *s.* கெஞ்சுகிறவன், இரப்போன், மன்றாடுவோன்.
Supplicant, *adj.* கெஞ்சுகிற, இரக்கிற, மன்றாடுகிற.
Supplicate, *v. a.* வேண்டுதல்செய்கிறது, கெஞ்சிக்கேட்கிறது, பிரார்த்திக்கிறது, இரக்கிறது.
Supply, *s.* திருத்தி, நிறைவு, பூரணம்.
for a journey, ஆற்றுணவு, வழிச்செலவு.
Supply, *v. a.* நிரப்புகிறது, திருத்தியாக்கிறது, தருகிறது.
food, விருந்துசெய்கிறது, ஊட்டுகிறது, சாப்பாடுகொடுக்கிறது.
an ellipsis, வருவித்துச்சொல்லுகிறது, தொகைநிலைநிறைக்கிறது, ஒழிந்ததுணாக்கிறது.
Support, *s.* ஒத்தாசை, ஆதரவு, சகாயம், உபகாரம், தஞ்சம், தாங்கி.
as a prop, அணை, பொறுப்பு, உதைகால்.
Support, *v. a.* துணைசெய்கிறது, ஆதரிக்கிறது.
as uphold, prop, ஆதரிக்கிறது, அனுசரிக்கிறது, தாங்குகிறது, சுமக்கிறது.
to supply with food, பிழைப்பூட்டுகிறது, பராமரிக்கிறது, போஷிக்கிறது.
in need, கைகொடுக்கிறது, கைதூக்குகிறது
an opinion, ஸ்தாபிக்கிறது, சாதிக்கிறது, ரூபிக்கிறது.
ones' self, பிழைக்கிறது, சுயசீவனம் பண்ணுகிறது, தற்காப்புசெய்கிறது.
Supportable, *adj.* தாங்கக்கூடிய, ஆதரிக்கக்கூடிய, பொறுக்கத்தக்க.
Supporter, *s.* தாங்குகிறவன், உபகாரி, நியாயபரிபாலனன், நியாயதுரந்தரன்.
as a comforter, தேற்றுகிறவன், ஆற்றுவோன்.
of a roof fitted into the wall of a building, தாழ்வாரந்தாங்கி.
Supporting, *ppr.* தாங்கி, சகிப்பு, தாபரம்.
a speaker, &c. துணைச்சொல்சொல்லுகிற.
by the hand, கையாற்றூங்குகிற.
Suppose, *v. a.* எண்ணுகிறது, துணிகிறது, நினைக்கிறது, பாவிக்கிறது, உத்தேசிக்கிறது.

Supposition, *s.* எண்ணம், கருத்து, நினைப்பு, அனுமானம், அபிர்ப்பு.
doubt, சந்தேகம், சமுசயம்.
Suppress, *v. a.* அடக்கிறது, அவிக்கிறது, ஒடுக்குகிறது.
the passions, ஒறுக்கிறது, இச்சையடக்குகிறது.
to be suppressed, நசுக்குகிறது, அவிகிறது, அடங்குகிறது.
Suppression, *s.* அடக்கம், ஒடுக்கம், அமைவு.
of the passions, அவாவின்மை, வெறுப்பு, ஐம்புலனொடுக்கம்.
Suppurate, *v. n.* சீப்பிடிக்கிறது.
Suppuration, *s.* சீழ்ப்பிடி, சீக்கட்டு.
Supremacy, *s.* முதன்மை, மேன்மை, நாயகம், உச்சிதம்.
Supreme, *adj.* மகாமேன்மையான, உச்சிதமான.
delight, பேரின்பம், பரமாநந்தம்.
The supreme Being, கர்த்தர், கடவுள், இறைவன், பராபரன், தேவன்.
Surcease, *v.* நின்றுவிடுகிறது, அற்றுப்போகிறது, ஒய்கிறது.
Surcharge, *v. a.* அதிபாரமேற்றுகிறது, மட்டுக்குமிஞ்சியேற்றுகிறது.
the stomach, அதிபோசனம்பண்ணுகிறது.
Surcingle, *s.* கலணைவார், குதிரையிடைக்கட்டு.
Surd, *s.* வர்க்கமூலங்காணக்கூடாததொகை.
Sure, *adj.* நிசமான, நிச்சயமுள்ள.
as firm, நிலையுள்ள, உறுதியான, அசைவற்ற,
Surely, *adv.* நிசமாய், சத்தியமாய், நிச்சயமாய்.
Sureness, *s.* நிச்சயம், நிசம், சத்தியம், உண்மை.
Suretiship, *s.* பிணை, உத்தரவாதம்.
Surety, *s.* பிணை, உத்தரவாதம்.
Surface, *s.* பரப்பு, மேற்புறம்.
Surfeit, *s.* தேக்கம், தெவிட்டு.
Surfeit, *v. a.* தேக்கிடுகிறது, தெவிட்டுகிறது, திருத்திக்கு அதிகமாகிறது.
Surge, *s.* அலை, தரங்கம், கடற்றிரை, திரை.
Surge, *v. a.* அலைவீசுகிறது, அலையடிக்கிறது, திரைவீசுகிறது.
Surgeon, *s.* சத்திரவைத்தியன், இரணவைத்தியன், அசுரவைத்தியன்.
probe, இரணவைத்தியச்சலாகை.
Surgery, *s.* சத்திரம், சத்திரவைத்தியம், இரணவைத்தியம்.
the practice of, இரணவைத்தியபரிட்சை.

Surgical, *adj.* சத்திரபிரயோகமான, இரணவைத்தியத்துக்கடுத்த.
operation, சத்திரமிடல், இரணவைத்தியப்பிரயோகம்.
Surliness, *s.* வெடுக்கு, வெடுவெடுப்பு, கடுகடுப்பு, குறும்பு.
Surlily, *adv.* குறும்பாய், தறுகுறும்பாய், துடுக்காய், கோபமாய்.
Surly, *adj.* தறுகுறும்பான, துடுக்கான, கோபமான, வெடுக்கான.
person, துடுக்கன், குறும்பன், வெடுக்கன்.
Surmise, *s.* எண்ணம், உத்தேசம், ஏகதேசம், மதியம், கணிசம்.
Surmise, *v. a.* எண்ணுகிறது, உத்தேசிக்கிறது, பாணிக்கிறது.
Surmount, *v. a.* மேற்படுகிறது, மேற்கொள்ளுகிறது, வெல்லுகிறது.
Surname, *s.* உபநாமம்.
Surpass, *v. a.* கடந்துபோகிறது, வெல்லுகிறது, முந்துகிறது.
to exceed, கதிக்கிறது, அதிகப்படுகிறது, மேற்படுகிறது.
calculation, எண்ணிறக்கிறது, அளவிறக்கிறது.
in play, வெல்லுகிறது, கெலிக்கிறது.
Surpassed, *adj.* மேற்பட்ட, அதிகமான.
Surpassing, *adj.* அதிகரிப்புள்ள, கதிப்புள்ள, கொள்ளாத, உசிதமான.
Surpassingly, *adv.* அதிகமாய், கதிப்பாய், உசிதமாய், மேன்மையாய், பாராட்டி.
Surplice, *s.* குருமார்போடுகிறவெள்ளை நிலையங்கி.
Surplus, *s.* நிலுவை, மீதி, குறை, சொச்சம், பாக்கி.
left, கழிவுப்பணம்.
in hand, இருப்புப்பணம்.
Surprisal, *s.* திடுக்காட்டம், திகில், ஏக்கம், பிரமிப்பு.
Surprise, *v. a.* ஆச்சரியப்படுத்துகிறது, அதிசயப்படுத்துகிறது, பிரமிக்கச்செய்கிறது.
to be surprised, ஆச்சரியப்படுகிறது, அதிசயப்படுகிறது, வியப்பிக்கிறது.
Surprisingly, *adv.* அதிசயமாய், ஆச்சரியமாய், பிரமிப்பாய், விம்மிதமாய்.
Surrender, *s.* கையளிப்பு, இணக்கம், ஒப்படைப்பு, தோர்வி.

Surrender, *v. a.* ஒப்புவிக்கிறது, ஒப்புக்கொடுக்கிறது.
to one's charge, கையளிக்கிறது, ஒப்புவிக்கிறது, கையடைக்கிறது.
a ward, apprentice, ஒரு இளைஞனை ஒருவனிடத்தில் ஒப்படைக்கிறது.
to justice, பாரப்படுத்துகிறது, குற்றஞ்சுமத்திவைக்கிறது, நீதித்தீர்ப்புக்கொப்புக்கொடுக்கிறது.
Surreptitious, *adj.* கள்ள,சோரகிருத்தியமுள்ள, களவான, திருட்டுச்செயலான.
Surreptitiously, *adv.* கள்ளமாய், சோரமாய், திருட்டுச்செயலாய்.
Surround, *v. a.* சூழ்ந்துகொள்ளுகிறது, வளைந்துகொள்ளுகிறது, சுற்றுகிறது, கோலுகிறது.
Surrounding, *adj.* சூழ்ந்த, சுற்றுகிற.
wall, சுற்றுமதில், மதிற்சுற்று, அரணம், வேலி.
Surtout, *s.* மேற்சட்டை, அரைச்சட்டை, கஞ்சுகம்.
Survey, *s.* நோக்கம், பார்வை, விசாரணை.
Survey, *v. a.* நோக்குகிறது, பார்க்கிறது, அளவிடுகிறது, விசாரிக்கிறது.
land, நிலமளக்கிறது.
Surveying, *s.* பார்வை, விசாரணை.
in mathematics, நீட்டலளவை, நிலவளவைச்சாத்திரம், நீட்டலளவைமானம்.
Surveyor, *s.* பார்வைக்காரன், விசாரணைக்காரன், நிலமளப்போன்.
Survive, *v. n.* *To live after the death of another,* ஒருவன் மரித்தபின்பு அவனோடிருந்தவர் பிழைத்திருக்கிறது.
Susceptibility, *s.* உணர்ச்சி,சுவரணை,மனக்கசிவு.
Susceptible, *adj.* பற்றத்தக்க, பதியக்கூடிய, உணர்ச்சியுள்ள.
Susceptibleness, *s.* பதிவு, உணர்ச்சி.
Susceptive, *adj.* பற்றுகிற, பிடிக்கிற, ஏற்றத்தக்க, கிரகிக்கக்கூடிய.
Suscitate, *v. a.* எவுகிறது, தேற்றுகிறது, தூண்டுகிறது, முயற்சிபடுத்துகிறது.
Suspect, *v. n.* ஐயப்படுகிறது, சந்தேகப்படுகிறது, சமுசயப்படுகிறது.
Suspend, *v. a.* தூக்குகிறது, நிறுத்துகிறது, தொங்கச்செய்கிறது.
to intermit, இடைவிட்டுநிறுத்துகிறது.
an undertaking or intercourse, பின்போடுகிறது, நிறுத்துகிறது.
from office, தள்ளிவைக்கிறது, நிறுத்துகிறது, விலக்கிவைக்கிறது, நீக்குகிறது.
one's judgement, நிச்சயந்தோன்றுமட்டுக்கும்நிதானிப்பைநிறுத்துகிறது.
to be suspended, தொங்குகிறது, நிற்கிறது, ஐயப்படுகிறது, சந்தேகிக்கிறது, தூங்குகிறது.
Suspender, *s.* தூக்கிவைப்போன், தூக்குவன், நிறுத்துகிறவன்.
Suspense, *s.* இழுப்பு, தரிப்பு, ஐயம், சந்தேகம்.
Suspension, *s.* தொங்கல், தொங்குவது, தூக்குநிறுத்தல்.
Suspicion, *s.* சந்தேகம், அசாத்தியம், சமுச்சயம்.
Suspicious, *adj.* அசைகையான, அசுவையுள்ள.
Suspiciously, *adv.* ஐயமாய், சந்தேகமாய்.
Suspiciousness, *s.* அசுவை, சந்தேகம்.
Suspiration, *s.* பெருமூச்சு, நெடுமூச்சு.
Suspire, *v.* *To sigh; to fetch the breath deep,* பெருமூச்சுவிடுகிறது.
Sustain, *v. a.* 1. *To bear, to prop, to hold up,* தாங்குகிறது, முட்டுகொடுக்கிறது, பிடித்துநிற்கிறது, சுமக்கிறது.
2. *To support; to keep from sinking under evil,* தாழ்ந்துபோகாமற்றூக்கிநிற்கிறது, சுமக்கிறது.
3. *To maintain; to keep,* ஆதரிக்கிறது.
in need, கைகொடுத்துதவுகிறது, கைதூக்குகிறது.
loss in trade, நஷ்டமனுபவிக்கிறது, நஷ்டப்படுகிறது.
loss, தோற்கிறது, நஷ்டமடைகிறது.
Sustainer, *s.* ஆதரிக்கிறவன், தாங்குவோன்.
Sustenance, Sustentation, } *s.* சாப்பாடு, சீவனம், காலட்சேபம், உணவு, போசனம்.
Sutler, *s.* *A man that sells provisions and liquor in a camp,* இராணுவத்திற்குத்தின்பண்டமுதலியவைகளைவிற்கிறவன்.
Suttee, *s.* உடன்கட்டையேறுபவள், உடன்கட்டையேறிச்சாகுஞ்சாவு. இது சத்தியென்னுஞ் சமஸ்கிறதமொழி.
Suture, *s.* தையல், புணாவு.
of the Skull, தலையோட்டுப்பொருத்து.
Swab, *s.* துடைப்பம், விளக்குமாறு, துடைக்கிறதுவாலை.
Swaddle, *v. a.* துணியாற்சுற்றுகிறது.

Swage, *v. a. To ease, to soften to mitigate,* இலகுபடுத்துகிறது, மெதுவாக்குகிறது, தடவிக்கொடுக்கிறது, தணிக்கிறது, மிருதுவாக்குகிறது, பதப்படுத்துகிறது.

Swagger, *v. n. To bluster; to bully; to be turbulently and tumultuously proud and insolent;* மிரட்டுகிறது, வீறுப்புகாட்டுகிறது, வீம்புகாட்டுகிறது, மேட்டிமைபாராட்டுகிறது.

Swaggerer, *s.* மிரட்டுகிறவன், வீம்புக்காரன், வீறுப்புக்காரன்.

Swain, *s.* வாலிபன், இடையன், நாட்டுப்புறத்தான்.

Swallow, *s.* மிடறு, தொண்டை, இரைக்குழல்.
the bird so called, தூக்கணங்குருவி, தகைவிலான்குருவி.

Swallow, *v. a.* விழுங்குகிறது.
as devour, பக்ஷிக்கிறது, ஒருமிக்கவிழுங்குகிறது, கொட்டிக்கொள்ளுகிறது.
as a current, a whirlwind, &c. வாங்குகிறது, ஆழத்திலிழுத்துக்கொள்ளுகிறது.
as an island by the sea, கடல்மூடிப்போடுகிறது, கடலெடுக்கிறது.
in small quantities, சிறுகச்சிறுகவிழுங்குகிறது, இறக்குகிறது.
juice, சாரமிறக்குகிறது, மென்று உள்ளுக்கு இறக்குகிறது.

Swallower, *s.* விழுங்கி, முழுங்கி, பெருந்தீனிக்காரன்.

Swamp, *s.* சேற்றுநிலம், களர்நிலம்,

Swamp, *v. a.* சேற்றிற்புதைக்கிறது.

Swampy, *adj.* சேறுள்ள, சதக்கலான, களரான.

Swan, *s.* அன்னம், அன்னப்பட்சி, எகினம்.

Swap, *v. a. To exchange,* மாற்றுகிறது, பதில்கொடுக்கிறது.

Sward, *s.* 1. *The skin of bacon,* பன்றிவார்.
2. *The surface of the ground,* தரை, புல்லுநிலம், புல்லுத்தரை.

Swarm, *s.* 1. *A great body or number of bees or other small animals, particularly those bees that migrate from the hive,* வண்டுக்கூட்டம், மொய்திரள்.
2. *A multitude, a crowd,* கூட்டம், திரள், கும்பு.

Swarm, *v. n.* திரளுகிறது, மொய்க்கிறது, மூய்கிறது, கூடுகிறது.

Swart, Swarth, } *adj. Black, darkly brown, tawny,* கறுப்புள்ள, இருளான, கபிலநிறமான.

Swarthiness, *s. Blackness of complexion; tawniness,* கறுப்புநிறம், மங்கல்நிறம், புகர்நிறம், கபிலம்.

Swarthy, *adj.* செங்கல்மங்கலான, கபிலநிறமுள்ள.

Swath, *s. A band, A fillet,* கச்சு, கட்டு, வார்க்கச்சை.

Swathe, *v. a.* கச்சக்கட்டுகிறது, இறுகக்கட்டுகிறது.

Sway, *s.* அதிகாரம், ஆட்சி, ஆளுகை, ஆக்கினைச்கரம்.

Sway, *v. a.* 1. *To wave in the hand, to move or wield any thing mossy;* அசைக்கிறது, சுழற்றுகிறது, ஆட்டுகிறது.
2. *as to sway the sceptre;* செங்கோல்செலுத்துகிறது, ஆளுகிறது, அதிகாரம்பண்ணுகிறது.

Swear, *v. a.* ஆணையிடுகிறது, சத்தியம்பண்ணுகிறது, நம்பிக்கைபண்ணிக்கொடுக்கிறது.

Swearer, *s.* சத்தியம்பண்ணுகிறவன், ஆணையிடுகிறவன்.

Swearing, *s.* ஆணை, சத்தியம்.

Sweat, *s.* வேர்வை, வெயர்வை.

Sweat, *v. n.* வேர்க்கிறது.

Sweaty, *adj.* வேர்வையான, வெயர்வையுள்ள.

Sweep, *s.* வீச்சு, சுற்று.
of a well, துலா, ஏற்றமரம்.

Sweep, *v. a.* கூட்டுகிறது, பெருக்குகிறது, துடைக்கிறது.
up rubbish, குப்பைகூட்டுகிறது.
superficially, சீக்கிறது.
as an army, &c., over a country, துடைக்கிறது, வாருகிறது, அள்ளுகிறது, சூறையாடுகிறது.

Sweepings, *s. (plu.)* குப்பை, கூளம், செற்றை.

Sweet, *adj.* இனிப்பான, தித்திப்பான, உருசியுள்ள, மதுரமுள்ள.
to be sweet, இனிப்பாயிருக்கிறது, தித்திக்கிறது.
word, கனிந்தவார்த்தை, இனியபேச்சு.
juice, தித்திப்புசாறு, தீஞ்சாறு, ரசம்.
temper, நற்குணம், சாந்தகுணம், மரியாதை.
music, இன்னிசை, மதுவோசை, சங்கீதம்.

smell; நற்கந்தம், சுகந்தம், பரிமளம், வாசனை.
as pleasent to the mind, கனிவான, இனிமையான, இன்பமான, ஆதரவான.
Sweeten, *v. a.* இனிப்பாக்குகிறது, பிரியம்பண்ணுகிறது, சுகிர்தம்பண்ணுகிறது, மதுரமாக்குகிறது.
Sweetflag, *s.* வசம்பு, சடினம்.
Sweetheart, *s.* கண்ணாட்டி, கண்ணாளன், நண்பன்.
Sweetly, *adv.* இனிப்பாய், மதுரமாய், இனிமையாய்.
Sweetmeats, *s. (plu.)* இனித்தபண்டம், தித்திப்பானபண்டம், மிட்டாய், அதிரசம்.
Sweetness, *s.* தித்திப்பு, இனிப்பு, உருசி, மதுரம்.
Sweetpotato, *s.* வத்தாலேக்கிழங்கு, மதுரவள்ளிக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, சீனிக்கிழங்கு.
Sweet scented, Sweet smelling, } *adj.* நற்கந்தமுள்ள, கமழுகிற, வாசனையுள்ள.
Swell, *s.* பெருக்கம், பெருக்கு.
at sea, திரை, நீரோற்றம், பொங்கல், கொந்தளிப்பு.
of land, மேடு, திட்டி.
astumor, கட்டு, திரட்சி, பரு.
as after a hurt, அதைப்பு, வீக்கம், தடிப்பு.
as protuberance, பிதுக்கம், புடைப்பு, மேடு, திட்டு.
Swell, *v.* பருப்பிக்கிறது, உப்புகிறது, வீங்குகிறது.
a list, அதிகநாமஞ்சேர்க்கிறது.
the cheeks, &c., ஊதுகிறது.
as any part of the body, வீங்குகிறது, புடைக்கிறது, பிதுங்குகிறது, பருக்கிறது.
with rage, &c., பொங்குகிறது.
as water, உவட்டுகிறது, பாய்கிறது, பெருகுகிறது.
as the sea, கொந்தளிக்கிறது, பொங்குகிறது, பெருகுகிறது, அலைபொங்குகிறது.
as children's gums, திட்டையிடுகிறது.
as breast, &c., தடிக்கிறது.
Swelling, *s.* புடைப்பு, வீக்கம், திரட்சி.
caused by fever, காய்ச்சற்கட்டி, வெப்புக்கட்டி.
venereal, கிரந்திக்கட்டு.
Swelter, *v. n.* அவிகிறது, வாடுகிறது, புழுங்குகிறது, வெயிலால்தொய்கிறது, அருங்கோடையால்காய்கிறது.
Swelter, *v. a.* புழுக்குகிறது, அவிக்கிறது, வாட்டுகிறது.
Swerve, *v. n.* வழுவுகிறது, தவறுகிறது, நிலைகுலைகிறது, பிசகுகிறது, வழிதப்புகிறது.
Swerving, *s.* தவறு. வழு, குற்றம், பின்னம், வளைவு.
Swift, *s.* ஓர்குருவி, பல்லி, கெவுளி.
for reeling, நிலையாடி, திரிவட்டம், திருகுவட்டம்.
Swift, *adj.* துரிதமுள்ள, வேகமான, சீக்கிரமான, வெகுசீக்கிரமான, கதியுள்ள.
Swiftly, *adv.* துரிதமாய், வேகமாய், சீக்கிரமாய், விரைவாய், அதிவேகமாய்.
Swiftness, *s.* அதிவேகம், விரைவு, கதி, சடுதி, சீக்கிரம், துரிதம், வேகம்.
Swig, *s.* ஒருமிடறுபானம்.
Swig, *v. a.* மிகக்குடிக்கிறது.
Swill, *v. a.* மிச்சமாய்க்குடிக்கிறது, பெருகக்குடிக்கிறது, அதிபானம்பண்ணுகிறது.
Swill, *v. n.* வெறிக்கிறது, வெறிகொள்ளுகிறது.
Swim, *v. n.* நீஞ்சுகிறது, நீந்துகிறது.
to float, மிதக்கிறது.
against the stream, எதிர்த்துநீஞ்சுகிறது, நீரெதிரோடுகிறது.
as the head, சுற்றுகிறது, சுழலையாடுகிறது, கிறுகிறுக்கிறது, உலாஞ்சுகிறது, தலைசுழற்றுகிறது.
Swimmer, *s.* நீச்சுக்காரன், நீந்துவோன்.
Swimming, *s.* நீந்தல், நீஞ்சல், நீச்சல், நீச்சு.
of the head, கிறுகிறுப்பு, சுற்று, தலைச்சுழற்சி, தலைமயக்கம்.
Swindle, *v. a.* சோரம்பண்ணுகிறது, ஏய்த்தபகரிக்கிறது, கவர்கிறது.
Swindler, *s.* சோரன், உபாயி, சூட்சன், மாறுடி, முடிச்சுமாறி, எத்தன்.
Swindling, *s.* ஏய்ப்பு, அணுப்பு, மாறூட்டம், வஞ்சிப்பு.
Swine, *s.* பன்றி, கேழல், கிடி, வராகம்.
Swineherd, *s.* பன்றிமேய்க்கிறவன்.
Swing, *s.* உஞ்சல், ஊசல்.
of the hand, கைவீச்சு, கையாட்டம்.
Swing, *v. a.* ஆட்டுகிறது, அசைக்கிறது.
round, சுழற்றுகிறது, சுற்றுகிறது.

Swing, *v. n.* ஆடுகிறது, உஞ்சலாடுகிறது, அசைகிறது.
round, சுழலுகிறது.
Swinging, *s.* ஆட்டம், உழற்சி, வீச்சு, சுழற்சி.
bed, ஆடுமஞ்சம், தொட்டில்.
Swinish, *adj.* பன்றித்தனமான, பன்றிக்கடுத்த, சுத்தமில்லாத.
Switch, *s.* தடி, வளார், மிலாறு, கம்பு, சுள்ளி.
Switch, *v. a.* கம்பாலடிக்கிறது, வாராலடிக்கிறது, கயிற்றாலடிக்கிறது.
Swivel, *s.* உழன்றி, சுழலத்தக்கது.
Swoon, *v. n.* களைக்கிறது, சோகிக்கிறது, சோர்கிறது, தியங்குகிறது, மூர்ச்சிக்கிறது.
Swoon, *s.* } மூர்ச்சை, சோர்வு, மயக்கம், களை, சோகம், தியக்கம்.
Swooning, *s.* }
Swoop, *v. a.* இறுஞ்சுகிறது, தட்டிப்பறிக்கிறது.
Swop, *v. a.* பதில்கொடுக்கிறது, படைமாற்றுகிறது.
Sword, *s.* கைவாள், வாள், கட்கம், கத்தி, பட்டா, பட்டயம்.
playing, சிலம்பம், வாள்சுழற்றுதல்.
fish, சுறு, கொம்பன்சுறு, மகரமீன்.
Sycophancy, *s.* முகமன், முகத்துதி, இச்சகம்.
Sycophant, *s.* இச்சகம்பாடி, முகமன்காரன்.
Sycophantic, *adj.* இச்சகமான, முகப்பிரியமான, முகமன்பேசுகிற, முகமனுன.
Syllabic, *adj.* அசைக்கடுத்த, அசையான.
Syllable, *s.* அசை, இசை.
metrical, அளபசை, இசையசை.
long, நெட்டசை, நேரசை.
short, குற்றசை, நிரையசை.
Syllabus, *s.* பொழிப்பு, அவையடக்கம், சுருக்கம்.
Syllogism, *s.* மும்மடிநியாயம், திரிபாதசித்தாந்தம்.
Syllogistic, *adj.* மும்மடிநியாயத்துக்கடுத்த, மூன்றேதுவுள்ள.
Syllogize, *v. n.* மும்மடிநியாயமாய்ப்பேசுகிறது.
Sylph, *s.* ஆகாயவாசி.
Sylvan, *s.* சோலை, காடு, வனம், புறவம்.
nymph, காட்டேரி, வனதேவதை.
Symbol, *s.* குறிப்பு, அடையாளம், அறிகுறி, பாவனை, ஒப்பனை.
an abstract, பொழிப்பு.
Symbolic, *adj.* குறிப்புக்கடுத்த, அறிகுறியான, ஒப்பனையான, உவமானமான.
transaction, குறிப்பானசெய்கை, பாவியம்.
Symbolize, *v. a.* குறிகாட்டுகிறது, உவமிக்கிறது, உவமைப்படுத்துகிறது, போலிபடுத்துகிறது.
Symmetrical, *adj.* ஒத்தசாங்கமான, எகாண்ட, இசைவான, ஒத்தபிரமாணமுள்ள.
Symmetrically, *adv.* ஒத்தபிரமாணமாய், சமலக்கணமாய்.
Symmetry, *s.* அங்கலட்சணம்.
Sympathetic, } *adj.* ஒத்துணர்வுள்ள, கூடவுணருகிற, பிறர்வருத்தந்தன்வருத்தம்போலுணருகிற.
Sympathetical, }
Sympathetically, *adv.* பிறருக்காகவுணருகிறவுணர்ச்சியாய்.
Sympathize, *v. n.* பரதபிக்கிறது, அனுதாபப்படுகிறது, பிறரோடுகனிகிறது, உடனுத்தரிக்கிறது.
Sympathy, *s.* உருக்கம், பரிதாபம், கனிவு, உடனுத்தரிப்பு.
Symphonious, *adj.* ஒன்றுயொத்துக்கூடிய, ஓசையுள்ள, சம்பந்தமான.
Symphony, *n.* இன்னிசை, ஒத்தகீதநாதம்.
Symptom, *n.* குணம், குறி, அடையாளம்.
unfavourable, துற்குறி, அவகுணம்,
Symptomatic, *adj.* குறியுள்ள, குறிகாட்டுகிற, அடையாளந்தோற்றுகிற.
Synagogue, *s.* யூதர்கோயில், தேவாலயம், செபக்கூடம், சிலர்கூடியசங்கம்.
Synchronism, *s.* *concurrence of events happening at the same time*, ஏககாலசம்பவம், ஒருகாலத்திலொத்துநடக்கும்பலசங்கதிகளின்கட்டு.
Syncope, *s.* *Contraction of a word by cutting off a part in the middle*, இடைக்குறை, ஒருசொல்லினிடையிலுள்ளவெழுத்தைக்குறைத்தல்.
Synod, *s.* திருக்கூட்டம், குருசங்கம்.
Synodical, *adj.* குருசங்கத்துக்குரிய, இராசிவட்டச்சுற்றுக்கடுத்த.
revolution, கிரகத்தன்மை, கிரகச்சுற்று.
Synonyme, *s.* பலசொல்லொருபொருள், ஒருபொருள்குறித்தபலசொல், ஒரேயருத்தமொழிகள்.

Synonymous, *adj.* ஓரருத்தமுள்ள, ஒத்தபயனுள்ள.
Synopsis, *s.* பொழிப்பு, திரட்டு, அடக்கம், அட்டவணை.
as general view; all the parts brought under one view, ஒருநோக்கு, ஏககாட்சி, மொத்தப்பார்வை, சகலத்தையுமொருசேரப் பார்ப்பது.
Synoptic, *adj.* பொழிப்பான, திரட்டான.
Syntax, *s.* சொன்முடிபுபொருண்முடிபுதெரிவிக்குமிலக்கணப்பகுதி, தொடர்மொழிகளினிலக்கணம், சொல்யாப்பிலக்கணம்.
Synthesis, *s.* கூட்டு, சேர்வை, புணர்ச்சி, கலவை.
Synthetic, *adj.* கூடிச்சேர்ந்த, இசைந்த, இசைக்கப்பட்ட, தொடர்பான, கோவையான.
Syren, *s.* சலதேவி, நீரரமகள், மோகினி, மையற்காரி.
Syringe, *s.* பீச்சாங்குழல்.
Syringe, *v. a.* பீச்சாங்குழலடிக்கிறது.
Syrup, *s.* சாறு, தீஞ்சாறு.
System, *s.* ஒழுங்கு, முறை, நூல், வரிசை, பலவற்றையுமோரொழுங்குப்படுத்துமுறைமை.
of religion, சமயமுறை, சமயநூல், சமயகோட்பாடு, சமயசாத்திரம்.
of worlds, பிரமாண்டம், மண்டலநிரை, அண்டகோளவடுக்கு.
Systematic, *adj.* ஒழுங்குள்ள, அங்கலட்சணமான.
person, ஒழுங்குள்ளவன், கண்டிப்புக்காரன்.
Systematize, *v. a.* ஒழுங்குப்படுத்துகிறது, வரிசைபடுத்துகிறது, நிறைப்படுத்துகிறது.
Sythe, *s.* அரிவாள், வீச்சுவாள்.
Syzygy, *s.* கிரகசங்கமம், கிரகயோகம், கிரகநோக்கு.

T.

Tabernacle, *s.* கூடாரம், பந்தல், குடில், குடிசை, தேவாலயம், செபவாலயம், கோயில், ஆவாசம்.
Table, *s.* மட்டமானதரை, தட்டைநிலம், ஒத்ததரை, உயர்ந்தசமநிலம், மேசை, மேசைப்பலகை, எழுதியஅல்லதுஎழுத்துவெட்டியகற்பலகை முதலானவை, சித்திரம், படம், ஒன்றினுருவமெழுதிய சித்திரப்பலகை, அட்டவணை, பெயர்வரிசை, திரட்டு, பொழிப்பு, சதுரங்கக்காய்கள்.
To turn the Tables, நிலைமாறுகிறது, அதிஷ்டமாறுகிறது.
Arithmetical table, கணக்குச்சக்கரம், கணக்குநிலை, எண்வாய்.
Lord's Table, பரிசுத்தநற்கருணை, திருவிருந்து, கர்த்தருடைய இராப்போசனம்.
Table, *v. a.* போஷிக்கிறது, அட்டவணையெழுதுகிறது, விடுதிகொடுக்கிறது, எண்கூட்டுகிறது.
Tablet, *s.* சிறுபீடம்.
Tabor, Taborine, Tabret, *s.* சிறுதப்பட்டை, தப்பட்டம், ஓர்வாச்சியம், மேளம்.
Tabular, *adj.* அட்டவணையான, வரிசையேற்படுத்திய, பீடம்போன்ற.
Tachi, *s.* தெறி, கொளுவி, கொளுக்கி, குறடு.
Tacit, *adj.* உள்அடங்கின, வாய்பேசாத, வாய்விடாத, மௌனமான, ஊமையான.
consent, மறுபேச்சுபேசாமல் சம்மதித்தல்.
Tacitly, *adv.* மவுனமாய், பேசாமல்.
Taciturn, *adj.* வாய்பேசாத, அடக்கமான.
Taciturnity, *s.* அடக்கம், மோனம், மவுனம்.
Tack, *s.* சிறுஆணி, சிற்றாணி, கப்பல்பாய்க்கயிறு, கப்பலைத் திருப்புதல், கப்பலைச்சாய்த்தோட்டுமோட்டம்.
Tackle, *s.* ஆயுதங்கள், கருவிகள், கப்பியுங்கயிறும், கப்பற்சாமான்கள்.
Tackle, *v. a.* பூட்டுகிறது, கட்டுகிறது, உடுத்துகிறது, மாட்டுகிறது.
Tackling, *s.* கப்பற்பணிமுட்டு, தளவாடந்தட்டுமுட்டுகள், குதிரையுடுப்பு.
Tact, *s.* சாமர்த்தியம், சூட்சி, யூகம்.
Tactics, *s.* போர்க்களத்திலேசண்டைக்குச்சிப்பாய்களைவரிசைப்படுத்தும்வித்தை, யுத்தவித்தை.
Tadpole, *s.* உருவமுழுதுமேற்படாததவளைக்குஞ்சு.
Tag, *s.* கயிற்றுநுனியிற்கட்டியிருக்குஞ் சிறுகுண்டு, குச்சு, இழிந்தது, ஈனமானது.
Tag, *v. a.* இசைக்கிறது, கட்டுகிறது, பூட்டுகிறது, ஒன்றை மற்றொன்றோடொட்டுகிறது.
Tagrag, *s.* நீசமனிதர், கீழ்மக்கள், கயவர்.
Tail, *s.* வால், கீழ்ப்பக்கம், பின்பக்கம்.
To turn tail, ஓடிப்போகிறது, பின்பறிந்து ஓடுகிறது, முதுகுகாட்டுகிறது.
short fox tail, கூழைவால்.
of a peacock, மயிற்றோகை.
plough tail, மேழி.
Tailor, *s.* தையற்காரன்.
Tailoress, *s.* தையற்காரி.

Taint, *s.* மறு, கறை, மாசு, பழுது.

Taint, *v. a.* கலக்கிறது, கறைப்படுத்துகிறது, வடுப்படச்செய்கிறது, துவைக்கிறது, நஞ்சிடுகிறது, விஷங்கலக்கிறது, பழுதுபடுத்துகிறது, நலுக்கிப்போடுகிறது, கசங்கப்பண்ணுகிறது, சுணையழியச்செய்கிறது, ஊசுகிறது, நாறுகிறது.

Taint, *v. n.* சீர்கெடுக்கிறது, நாறுகிறது.

Tainted, *adj.* கறையான, மேனிகொலைந்த.

air, நாற்றமெடுத்தவாயு, கெட்டகாற்று, விஷக்காற்று.

Take, *v. a.* 1. *To receive what is offered, correlative to give, opposed to refuse,* கொடுக்கப்பட்டதை வாங்குகிறது. *To give,* என்னுஞ்சொல்லோடு சம்பந்தப்பட்டசொல்லாம். *To refuse,* என்னுஞ் சொல்லுக்கெதிர்மறையாம்.

2. *To seize what is not given,* எடுத்துக்கொள்ளுகிறது, பிடிங்கிக்கொள்ளுகிறது.

3. *To receive,* ஏற்றுக்கொள்ளுகிறது, ஏற்கிறது, வாங்குகிறது.

4. *To lay hold on, to catch by surprise or artifice,* பிடித்துக்கொள்ளுகிறது, திடீரென்றுகைபோடுகிறது, அமுக்கிக்கொள்ளுகிறது.

5. *To snatch, to seize,* பிடுங்கிக்கொள்ளுகிறது, பறித்துக்கொள்ளுகிறது, அப்பிக்கொள்ளுகிறது.

6. *To make prisoner,* காவற்பண்ணுகிறது, சிறையிலேபோடுகிறது.

7. *To captivate with pleasure, to delight, to engage,* மயக்குகிறது, மனமருளுகிறது, சந்தோஷமடைகிறது, இச்சிப்பிக்கிறது; *as, let her not* take *thee with her eyelids,* அவள் தன் கண்ணிமைகளாலுன்னையெடுத்துக்கொள்ளாதபடிக்குப்பார், அதாவது உன்னை மருட்டாதபடிக்குப்பார் என்பதாம்.

8. *To entrap, to catch in a snare,* சுருக்குக்குட்படுத்துகிறது, கண்ணியிலேமாட்டவைக்கிறது.

9. *To understand in any particular sense or manner,* ஓர்கருத்தில் அறிந்துகொள்ளுகிறது, கிரகித்துக்கொள்ளுகிறது; *as, give them one simple idea, and see that they* take *it right and perfectly comprehend it,* ஒரேயொருகருத்தை அவர்களுக்குச்சொல்லு அவர்களதைச்சரியாய்க்கிரகித்துக்கொள்ளுகிறார்களாவென்றுபார்.

10. *To exact,* வலோக்காரமாய்வாங்குகிறது, வரியிறை எடுக்கிறது.

11. *To get, to have, to appropriate,* தன்னதாக்கிக்கொள்ளுகிறது, எடுத்துக்கொள்ளுகிறது.

12. *To use, to employ,* கையாடுகிறது.

This man always takes *time and ponders things maturely before he passes his judgment,* இந்தமதனின் எந்தவிடயங்களைக்குறித்தும் தீர்ப்புச்செய்யுமுன் காலமெடுத்துக்கொண்டு அதுகளைக்குறித்து சாவதானமாய் ஆலோசனைபண்ணுகிறான்.

13. *To judge in favour of, to adopt,* ஒருபட்சஞ்சார்ந்துதீர்க்கிறது, முடிவுசொல்லுகிறது; *as, I am at a loss what side to* take *in this affair,* இதுவிஷயத்தில் எந்தப்பட்சத்தைச் சார்ந்துகொள்ளுகிறதென்றெனக்குத்தெரியவில்லை.

14. *To admit any thing bad from without,* புறம்பினின்று யாதொரு தீமையை வரப்பண்ணிக்கொள்ளுகிறது; *as, to keep my wounds from* taking *air,* என்காயங்களிற்காற்றுக்கொள்ளாதபடிக்குக்காக்க *or* என்காயங்கள்மேல் காற்றுபடாதிருக்க.

15. *To turn to, to practise,* திரும்புகிறது, செய்கிறது.

16. *To close in with, to comply with,* உட்படுகிறது, ஒப்புக்கொள்ளுகிறது, எடுத்துக்கொள்ளுகிறது.

17. *To receive into the mind,* மனதிற்கொள்ளுகிறது, தெரிகிறது, அறிகிறது; *as, When they saw the boldness, of Peter, and John, they* took *knowledge of them that they had been with Jesus,* பேதுருவையும் யோவானையும் கண்டபோது அவர்கள் இயேசுவோடிருந்தார்களென்று அறிந்தார்கள்.

18. *To swallow, to receive,* விழுங்குகிறது, முழுங்குகிறது; *as, Turkeys take down stones,* வான்கோழிகள்கற்களை முழுங்குகின்றன.

19. *To swallow as a medicine,* மருந்துதின்னுகிறது, மருந்துகுடிக்கிறது, மாத்திரைபோட்டுக்கொள்ளுகிறது, பேதிக்குக்குடிக்கிறது; *as, Upon this assurance he* took *physic,* இந்தவார்த்தையினிமித்தம் அவன்பேதிக்குக்குடித்தான்.

20. *To choose one of more,* தெரிந்தெடுக்கிறது, பார்த்துப்பொறுக்கிறது.

21. *To copy,* பிரதிபண்ணுகிறது, ஒருரூபம்போலமற்றொன்றெழுதுகிறது, ஒன்றைப்பார்த்து மற்றொன்றுசெய்கிறது.

22. *Not to refuse, to accept,* அங்கீகரிக்கிறது, தள்ளாமல் ஏற்றுக்கொள்ளுகிறது.

23. *To adopt,* ஏற்றுக்கொள்ளுகிறது, தன்னதாக்கிக்கொள்ளுகிறது, சுவிகரிக்கிறது.

24. *To endure, to bear,* சகிக்கிறது, பொறுக்கிறது, தாங்குகிறது; *Won't you then* take *a jest,* நீபரியாசத்தைப்பொறுத்துக்கொள்ளாயோ.

25. *To assume,* மேற்போட்டுக்கொள்ளுகிறது, எடுத்துக்கொள்ளுகிறது.

26. *To allow, to admit,* ஒப்புக்கொள்ளுகிறது, விட்டுக்கொடுக்கிறது, ஒத்துக்கொடுக்கிறது, கைக்கொள்ளுகிறது.

27. *To receive with fondness,* அணைத்துக்கொள்ளுகிறது, இடுக்கிக்கொள்ளுகிறது; *as, I loved you still and* took *you into my bosom,* நானுன்னையின்னுஞ்சிநேகித்து என்மடியிலுன்னையணைத்துக்கொண்டேன்.

28. *To suppose, to receive in thought, to entertain in opinion,* எண்ணுகிறது, நினைக்கிறது.

29. *To catch eagerly,* ஆவலாய்ப்பிடிக்கிறது, பிடித்துக்கொள்ளுகிறது.

30. *To have recourse to,* அடைக்கலந்தேடிக்கொள்ளுகிறது, சார்பிடங்கண்டடைகிறது, போய்ப்பற்றுகிறது.

31. *To hire, to rent,* குடிக்கூலிக்குவாங்குகிறது; *as, To take a house to live in,* குடியிருக்கக்குடிக்கூலிக்குவீடுவாங்குகிறது.

32. *To take away, to deprive of,* எடுத்துப்போடுகிறது, நீக்குகிறது, குறைக்கிறது, வாங்கிப்போடுகிறது; *as, By your own law, I* take *your life away,* உன்சொந்தநியாயத்தினாலே உன்சீவனை வாங்கிப்போடுகிறேன்.

33. *To take away, to set aside, to remove,* தள்ளிவைக்கிறது, புறம்பாக்குகிறது, இடமாற்றுகிறது.

34. *To take care, to be careful, to be solicitous for, to superintend,* பத்திரம்பார்க்கிறது, உசாராயிருக்கிறது, மேல்விசாரணைசெய்கிறது.

35. *To take course, to have recourse to measures,* வழிவகைபார்க்கிறது, உபாயந்தேடுகிறது, அடியெடுக்கிறது.

36. *To take down, to crush, to reduce, to suppress,* கீழ்மிதிக்கிறது, கீழடக்குகிறது, மடக்கிறது.

37. *To take down, to swallow, to take by the mouth,* உள்ளுக்கிறக்குகிறது, முழுங்குகிறது.

38. *To take from, to derogate, to detract,* கனத்தைக்குறைக்கிறது, இறக்கிவிடுகிறது.

39. *To take from, to deprive of,* எடுத்துப்போடுகிறது, ஒன்றிலிருந்தொன்றைநீக்கிவிடுகிறது.

40. *To take heed, to be cautious, to beware,* பத்திரம்பார்க்கிறது, முழிப்பாயிருக்கிறது, சாக்கிரதைகொள்ளுகிறது.

41. *To take heed to, to attend,* கவனிக்கிறது, ஒன்றைப்பற்றிக் கவலைப்பாடாயிருக்கிறது, *Nothing sweeter than to* take heed *unto the commandments of the Lord,* கடவுளின் கற்பனைகளைக் கவனித்துக்கொண்டிருப்பதிலும் இன்பமானதொன்றுமில்லை.

42. (a) *Take in, to inclose,* உள்ளடக்கம்பண்ணுகிறது.

(b) *To lessen, to contract,* குறைக்கிறது, சுருங்கச்செய்கிறது, கொஞ்சமாக்குகிறது; *as, He* took in *his sails,* அவன்கப்பற்பாய்களைச்சுருக்கினான்.

(c) *To comprise, to comprehend,* கொள்ளுகிறது, அடங்குகிறது, பிடிக்கிறது, கொள்ளவைக்கிறது, அடக்குகிறது, உள்படச்சேர்க்கிறது.

(d) *To admit,* இடங்கொடுக்கிறது, உள்ளேவிடுகிறது, சேர்த்துக்கொள்ளுகிறது.

43. *To take in hand, to undertake,* கைக்கொள்ளுகிறது, கையிடுகிறது.

44. *To take notice, to observe,* குறிக்கிறது, கவனிக்கிறது.

45. *To take oath, to swear,* ஆணையிடுகிறது, சத்தியம்பண்ணுகிறது.

46. *To take off, to invalidate, to destroy, to remove,* வாங்கிப்போடுகிறது, பலக்குறைச்சல் பண்ணுவிக்கிறது, கெடுக்கிறது, சாகடிக்கிறது, நீக்குகிறது.

47. *To take part, to share,* பங்குபெறுகிறது, கூடுகிறது, உடன்பங்காகிறது, சேருகிறது.

48. *To take place, to prevail, to have effect,* மேற்கொள்ளுகிறது, பலன்படுகிறது.

49. *To take place, to happen, to occur,* சம்பவிக்கிறது, உண்டாகிறது, நடக்கிறது.

50. *To take upon, to appropriate to, to assume, to admit, to be imputed to,* மேற்போட்டுக்கொள்ளுகிறது, தன்மேல்வாங்கிக்கொள்ளுகிறது, தன்னது என்கிறது.

51. *To take upon, to assume, to claim authority,* அதிகாரங்கொள்ளுகிறது, மேற்போட்டுக்கொள்ளுகிறது.

effect, சித்திக்கிறது, பலிக்கிறது.

root, வேர்கொள்ளுகிறது, வேர்பிடிக்கிறது, வேர்பற்றுகிறது, வேரிறங்குகிறது.

up as with fingers or between the fingers, இடுக்குகிறது, கிள்ளிஎடுக்கிறது.

vengeance, பழிவாங்குகிறது.

fire, நெருப்புப்படுகிறது, நெருப்புப்பற்றுகிறது, நெருப்புவிழுகிறது, நெருப்புப்பிடிக்கிறது.

the air, காற்றுவாங்கப்போகிறது, சவாரிபோகிறது, உலாத்துகிறது.

in marriage, கலியாணம்பண்ணுகிறது, பெண்கொள்ளுகிறது.

account, கணக்குவாங்குகிறது, கணக்கொப்புவித்துக்கொள்ளுகிறது, கணக்குகுறிக்கிறது.

medicine, மருந்துதின்னுகிறது, அவிழ்தம்சாப்பிடுகிறது.

Tale, *s.* கதை, சட்டுக்கதை.

Talebearer, *s.* கோட்சொல்வோன், கோண்டுணி, குண்டணிக்காரன்.

Talebearing, *s.* கோள், கோள்கூறல், குண்டணி, புறங்கூறல்.

Talent, *s.* ஓர்நிறை, ஓர்நாணயம், வரம், சாமர்த்தியம்.

Talk, *v. n.* பேசுகிறது.

much, வாயாடுகிறது, அலப்புகிறது.

in vain, வீணுப்பேசுகிறது,

lispingly as children, கொஞ்சுகிறது, மதலைபேசுகிறது,

proudly, வீம்புபேசுகிறது.

Talk, *s.* 1. *Oral conversation, fluent and familiar speech,* பேச்சு, சம்பாஷணை.

2. *Report, rumour* கேள்விப்பேச்சு, கேள்வி, காத்துவிசேஷம், கதை.

Talkative, *adj. Full of prate, loquacious,* அலப்புகிற, மெத்தப்பேசுகிற.

person, வாயாடி, அலப்பன்.

Talkativeness, *s.* அலப்பல், வாயாடல், வீண்பேசல், தொணப்பு, அலப்பு, நச்சு.

Talker, *s.* பேச்சுக்காரன்.

Tall, *adj. High in stature,* நெட்டையான, நெடிய, நீண்ட, உயர்ந்த, ஓங்கியுயர்ந்த,

Tallness, *s.* உயரம், நெட்டை, நெடுமை.

Tallow, *s. The grease or fat of an animal,* மிருகங்களினது நிணம், கொழுப்பு.

Chandler, கொழுப்புத்திரிவிற்கிறவன், மெழுகுதிரிவிற்கிறவன்.

Tally, *s. A stick notched or cut in conformity to another stick and used to keep accounts by,* கணக்குவைக்கிற ஒருகட்டை, இலக்கமெழுதிவைக்கிறஒருதடி, புள்ளி, எண்குறி.

Tally, *v. a.* புள்ளிவெட்டுகிறது, குறியிடுகிறது.

Tally, *v. n. To be fitted, to conform, to be suitable,* ஒத்துவருகிறது, சரிவருகிறது, இசைந்திருக்கிறது; *as, I found pieces of tiles that exactly tallied with the channel,* அந்தக்கால்வாய்க்குச்சரியா யிசையும்படியான ஓட்டுப்பாளங்களைக்கண்டேன்.

Talmud, *s. The book containing Jewish traditions, the rabbinical constitutions and explanations of the Law,* யூதபாரம்பரைகளடங்கியபுத்தகம், வேதத்துக்கு இரபிமார் இட்ட உரைகள், வேதபாஷியம்.

Talon, *s.* பட்சிநகம்.

Tamarind, *s.* புளியமரம்.

the fruit, புளியம்பழம்.

as one of the ingredients in curry stuff, புளி.

Tambor, Tamborin, *s.* ஓர்பறை, ஓர்வாச்சியம், தம்பூர்.
Tame, *adj.* சாதுவான, பதவிசான, பழகிய, அடங்கிய, வணங்கிய.
Tame, *v. a.* பழக்குகிறது, சாதுவாக்குகிறது, அடங்கவும் வணங்கவும் பழக்குவிக்கிறது.
Tamely, *adv.* சாதுவாய், பதவிசாய்.
Tameness, *s.* சாந்து, பழக்கம், படிவு.
Tamper, *v. a.* பிறன்காரியத்தில் தலையிட்டுக்கொள்ளுகிறது, கையிட்டுக்கொள்ளுகிறது, இரகசியமாய்நடப்பிக்கிறது, தந்திரமாய்ச்செய்கிறது.
with witness, சாட்சிகளை வசப்படுத்துகிறது, சாட்சிகளைத்திருப்பிவிடுகிறது.
Tan, *s.* தோல்பதனிடுங்கஷாயம், தோனூறுகிறநீர்.
Tan, *v. a.* பட்டைச்சாயந்துவைக்கிறது, சாயநீரில் ஊறவைக்கிறது, பதனிடுகிறது.
in the sun, கருகுகிறது, கன்றிப்போகிறது.
Tangent, *s.* புடைபெயர்ச்சிக்கோடி, கோடி.
Tangibility, *s.* தொடுதலுணர்ச்சி, தொட்டாலுணருந்தன்மை.
Tangible, *adj.* பரிசிக்கப்படத்தக்க, பரிசத்தாலுணரக்கூடிய.
Tangle, *s.* சிக்கு, பின்னல், சன்னபின்னல்.
Tangle, *v. a.* சிக்குப்படுத்துகிறது, வலைக்குள்ளாக்குகிறது, சன்னல்பின்னலாக்குகிறது.
Tangle, *v. n.* சிக்குகிறது, சிக்கிக்கொள்ளுகிறது, சிக்குப்படுகிறது.
Tank, *s.* குளம், வாவி, தண்ணீர்த்தடாகம்.
diggers, ஒட்டர், குளம்வெட்டிகள், உப்புறவர்.
Tankard, *s.* மூடியுள்ளஒருபெரியபானபாத்திரம்.
Tanner, *s.* தோல் பதனிடுகிறவன், சக்கிலியன், செம்மான்.
Tannery, *s.* தோல்பதனிடுமிடம்.
Tannin, *s.* தோல் பதமிடுங்கஷாயம்.
Tanning, *s.* தோல்பதனிடுகை.
Tantalize, *v. a.* ஒருவனுக்கு ஆசையை மூட்டி ஆசைப்பட்டபொருளைக் கிடைக்கவொட்டாமற் செய்வதினால் அவனைவருத்துகிறது, தகாக்காட்டுகிறது, ஏய்க்கிறது, அவாகொள்ளப்பண்ணுகிறது.
Tantalizer, *s.* ஏய்க்கிறவன், எத்தன்.
Tantamount, *adj.* சரியான, ஒரேவிதமான, ஒரேவிலையான, சரீடான.
Tap, *s.* இலேசாய்தட்டுதல் *or* அடித்தல், ஒருபாத்திரத்திலிருக்குஞ்சாராயத்தை மறுபாத்திரத்தில் இறக்குங்குழாய்.
Tap, *v. a.* தட்டுகிறது, அடிக்கிறது, தொளைக்கிறது, பீப்பாயிலிருந்துசாராயத்தைவடிக்கிறது.
a cask, பீப்பாயைத்தொளைக்கிறது, திறக்கிறது.
for the dropsy, மகோதரநீர்வாங்குதல்.
Tape, *s.* நாடா.
broad, கச்சுப்பட்டை.
Taper, *s.* மெழுகுதிரி.
Taper, *v. a.* கூரிடுகிறது, கூராக்குகிறது.
Taper, *v. n.* கூராகிறது, கூப்புகிறது.
Tapering, *s.* கூராகுதல், நுனியாகுதல்.
Tapestry, *s.* சித்திரத்தையலாடை.
Tapeworm, *s.* கீரைப்பூச்சி, கிருமி.
Tar, *s.* கீல், கிசில்.
a sailor, கப்பலைச்சேர்ந்தவன், கப்பலாள்.
Tar, *v. a.* கீல்பூசுகிறது.
Tarantula, *s.* ஓர்பூச்சி, புலிமுகச்சிலந்தி, சுரமண்டலி.
Tardily, *adv.* மெதுவாய், தாமதமாய், இழுப்பாய்.
Tardiness, *s.* இழுப்பு, அசமந்தம், தாமதம்.
Tardy, *adj.* சாக்கிரதையில்லாத, சுறுசுறுப்பில்லாத, அசமந்தமான, ஆலசியமான.
to be tardy, தாமதிக்கிறது, தாமதப்படுகிறது.
Tare, *s.* களை, களைப்புல்லு.
in commerce, சேதாரம், தாரம், கழிவு.
Target, *s.* கேடகம், பரிசை.
as a mark to shoot at, குறி, குறிப்பு, இலக்கு.
Targeteer, *s.* கேடகந்தரித்தவன், பரிசைக்காரன்.
Tarnish, *s.* களங்கம், மங்கல், களிம்பு, மாசு.
Tarnish, *v. a.* நலக்குகிறது, கறைபண்ணுகிறது.
Tarnish, *v. n.* கெடுகிறது, கசங்குகிறது, மாசடைகிறது.
Tarpauling, *s.* கீல்த்துணி, கீல்ப்பாய்.
Tarry, *v. a.* தங்குகிறது, தாமதிக்கிறது, தரிக்கிறது, நிற்கிறது.
Tarrying, *s.* தாமதம், தரிப்பு.
Tart, *s.* புளியப்பம், பழவப்பம்.
Tart, *adj.* புளிப்புள்ள. புளியான, துவர்ப்புள்ள.
very tart, கடும்புளி, மிகுபுளிப்பு.
Tartar, *s.* பால்முதலியவழிந்துகாய்ந்த பொருக்கு, தார்த்தாரிதேசத்தான், அவகுணன்.
Tartaric acid, *s.* புளிப்புத்திராவகம்.
Tartly, *adv.* உறைப்பாய், புளிப்பாய், சுள்ளென்பதாய், காரமாய், காட்டாய்.

Tartness, *s.* உறைப்பு, புளிப்பு.
Task, *s.* கட்டளையிட்டவேலை, குறித்தபாடம்.
master, ஆளோட்டி, கண்காணி.
Tassel, *s.* குஞ்சம், குச்சு, பட்டுக்குஞ்சம், குச்சுக்குப்பி.
Taste, *s.* உருசை, சுவை, ருசி, ருசிகரம், இதம்.
as intellectual, கலைஇன்பம், கல்விப்பிரியம்.
as judgment, புத்தி, யுக்தி, விவேகம்.
Taste, *v. a.* உருசைபார்க்கிறது.
Taste, *v. n.* உருசைதட்டுகிறது, ருசிதட்டுகிறது, ருசிக்கிறது, இனிக்கிறது, சுவைகாணுகிறது.
Tasteful, *adj.* உரிசையுள்ள, தித்திப்புள்ள, ருசிகரமான.
Tasteless, *adj.* இலைப்பான, உருசையில்லாத, சாரமற்ற.
to become tasteless, இலைப்பாயிருக்கிறது.
Tasty, *adj.* உருசையுள்ள, ருசியான, நேர்த்தியான.
Tatter, *s.* கந்தை, கந்தல், பழந்துணி, பீற்றல்.
Tattle, *s.* வீண்பேச்சு, அலம்பல், பிதற்று.
Tattle, *v. a.* வெறும்பேச்சுபேசுகிறது, பஞ்சரிக்கிறது, வீண்பேசுகிறது, அலப்புகிறது.
Tattler, *s.* வீண்பேச்சுக்காரன், அலப்பன், வெறுங்கதைக்காரன், கோளன், குண்டணிகாரன்.
Tatling, *s.* வெறும்பேச்சு, பிதற்றல்.
Tattoo, *s.* சிப்பாய்களுக்காக அடிக்கும்எச்சரிக்கைப்பறை,எச்சரிக்கைத்தப்பூர்; பச்சைமைச்சித்திரம்.
Tattoo, *v. a.* பச்சைகுத்துகிறது, நாமஞ்சாத்திக்கொள்ளுகிறது.
Taunt, *s.* அவமானம், சரசம், நையாண்டி, அவமரியாதை, நிந்தை.
Taunt, *v. a.* சீயென்றிகழுகிறது, நிந்திக்கிறது, பழிக்கிறது, பரிகாசம்பண்ணுகிறது, அவமதிக்கிறது, அவமானம்பண்ணுகிறது.
of family defect, குடிக்குப்பிழைகூறுகிறது, கோத்திரத்துக்குப்பழிசொல்லுகிறது.
Taunter, *s.* நையாண்டிக்காரன், பழிப்புக்காரன்.
Tauntingly, *adv.* பரிகாசமாய், கேலியாய்.
Tauriform, *adj.* ரிஷபரூபமான, காளைவடிவுள்ள.
Taurus, *s.* இடபவிராசி, ரிஷபம், காளைமாடு.
Tautological, *adj.* சொன்னதையேசொல்லுகிற, கூறியதுகூறுகிற, புனருத்தமான.
Tautologize, *v. n.* அலப்புகிறது, கூறியதுகூறுகிறது.
Tautology, *s.* கூறியதுகூறல், மீமிசை, புனருத்தி, சொன்னதையேசொல்லல், அலப்பல்.
Tavern, *s.* சாராயச்சாவடி, சாராயக்கடை, தவரணை; *In the united states, it means also an Inn*, சத்திரம்.
Tawdrily, *adv.* போலியாய்,வெறும்பிலுக்காய், பளபளப்பாய், குசாலாய், வடிவாய்.
Tawdriness, *s.* குசால், ஒய்யாரம், வெறும்பெருமை, நகைப்புக்கிடமானகோலம்.
Tawdry, *adj.* வெளிக்கோலமுள்ள, டம்பகமான, வெறுஞ்சம்பமான.
Tawny, *adj.* மஞ்சள்நிறமான, செங்கல்மங்கலான, கபிலமான.
cow, கபிலை, கபிலைப்பசு.
Tax, *s.* பகுதிப்பணம், வரி, இறை, கடமை, கப்பம், சுங்கம், ஆயம்.
on houses, வீட்டுவரி.
on land, நிலவரி.
pole tax, சனவரி, தலைவரி.
gatherer, தண்டற்காரன், வரிப்பணந்தண்டுகிறவன், தீர்வைக்காரன், ஆயக்காரன்.
free from, மானியம், உம்பிளிக்கை.
Tax, *v. a.* வரிபோடுகிறது, வரிவைக்கிறது.
to charge, to accuse, குற்றஞ்சாட்டுகிறது, குறைகூறுகிறது
Taxable, *adj.* வரிவைக்கத்தக்க, வரிபோடத்தக்க.
Taxation, *s.* வரிவிதித்தல்; குற்றஞ்சாட்டல்.
Tea, *s.* தேயிலைச்செடி; தேநீர், தேத்தண்ணீர்.
cup, தேத்தண்ணீர்ப்பாத்திரம்.
pot, தேக்கெண்டி.
spoon, தேக்கரண்டி.
Teach, *v. a.* படிப்பிக்கிறது, கற்பிக்கிறது, கற்றுக்கொடுக்கிறது, போதிக்கிறது, காட்டிக்கொடுக்கிறது.
to sing, பாடிக்காட்டுகிறது, பாடப்படிப்பிக்கிறது, சங்கீதங்கற்றுக்கொடுக்கிறது.
Teachable, *adj.* படிப்பிக்கத்தக்க, கற்கத்தக்க, படிவுள்ள, பதவிய.
Teachableness, *s.* படிக்கக்கூடியதன்மை, பக்குவம், அடக்கம், படிவு, கற்கிறகுணம்.
Teacher, *s.* வாத்தி, உவாத்தி, ஆசிரியன், ஆசான், போதகன், வாத்தியாயன், ஓதுவான்.
spiritual, குரு, ஆசாரியன்.

Teaching, *s.* படிப்பிப்பு, போதிப்பு.
Teak, *s.* தேக்கமரம்.
Teal, *s.* கிளுவை, சிறகி.
Team, *s.* ஒரேவண்டியையிழுத்தோடுகிற பலகுதிரைகள்; ஒருவண்டியிற் பூட்டிய பலமாடுகள்; ஏர்க்குண்டை; ஒருசோடுகுதிரை.
Tear, *s.* கண்ணீர்; பீறல்; கிலம்.
Tear, *v. a.* கிழிக்கிறது, பிளக்கிறது, பீறுகிறது.
off, இழுக்கிறது, பிடுங்குகிறது, அறுக்கிறது.
up, துண்டிக்கிறது, சின்னபின்னமாக்குகிறது.
Tear, *v. n.* கிழிகிறது, பிய்கிறது.
Tearer, *s.* கிழிக்கிறவன், அலட்டுகிறவன், பீறுகிறவன், பிளக்கிறவன்.
Tearful, *adj.* அழுகிற, கண்ணீர்விடுகிற.
Tearless, *adj.* கணணீரில்லாத, கண்ணீர்விடாத.
Tease, *v. a.* கிள்ளுகிறது, ஆய்கிறது, கோதுகிறது, சிக்கறுக்கிறது; நச்சுகிறது, அலட்டுகிறது, தொந்தரவுபண்ணுகிறது.
Teasel, *s.* ஓர்விதப்பூண்டு, நாயுருவி.
Teasing, *adj.* நச்சுகிற, அரிகண்டப் படுத்துகிற.
Teat, *s.* முலைக்கண், முலைக்காம்பு, மடி.
Technic, Technical, *adj.* வழக்கமல்லாத, நூலுக்குரிய, சாத்திரத்துக்கடுத்த, அந்தந்தவித்தையில்வழங்குகிற, பரிபாஷையான, சங்கேதமான.
term, குழூஉக்குறி, நூன்மொழி, சாஸ்திரபதம், சங்கேதம், உரியசொல்.
Technicality, Technicalness, *s.* பரிபாஷிதம், சங்கேதத்துவம்.
Tedious, *adj.* அலுப்புள்ள, நீடித்த, தொந்தரையான, தாமதமுள்ள.
to become tedious, இளைத்தல், அலுப்பாகுதல், தொல்லைப்படுதல்.
Tediously, *adv.* அலுப்பாய்.
Tediousness, *s.* அலுப்பு, சலிப்பு, வருத்தம்.
Teem, *v. n.* குஞ்சுபொரிக்கிறது, கருக்கொள்ளுகிறது, செனிக்கிறது; குட்டிபோடுகிறது; நிறைந்திருக்கிறது, குலுங்கியிருக்கிறது, சரிந்திருக்கிறது.
Teeming, *adj.* ஈனுகிற, கிளைக்கிற.
cloud, கருக்கொண்டமேகம், சூற்கொண்டமுகில், கருமுகில்.
as clouds, &c. சூற்கொண்ட, கருநிறைந்த, பூரணகருப்பமுள்ள.
Teeth, *s.* (*plu.*) பல்லுகள், பற்கள், தந்தங்கள்.
of a saw, கருக்கு, வாளின்பல்.
eye teeth, சிங்கப்பல்.
as tusk, தந்தம், எயிறு.
soiled, காவியிட்டபல்.
black, கரிப்பல்.
medicine for, தாசனப்பொடி, பற்பொடி.
Teeth, *v. n.* பல்லுமுளைக்கிறது, எயிறுதோன்றுகிறது.
Tegument, *s.* தோல், புறணி.
Telegraph, *s.* தூரக்குறிப்புச்சூத்திரம், தூலதூரச் சங்கதியறிவிக்குஞ் சூத்திரம்.
Telegraphic, *adj.* தூர்க்குறிப்புச் சூத்திரத்துக்கடுத்த.
Telescope, *s.* தூரதிருஷ்டிகண்ணாடி; கண்ணாடிக்குழல், நச்சுக்குழாய், சமுக்காக்குழல்.
Telescopic, *adj.* தூரதிருஷடிகண்ணாடிக்குரிய.
Tell, *v. a.* சொல்லுகிறது, மொழிகிறது, தெரிவிக்கிறது, அறிவிக்கிறது.
stories, கதைசொல்லுகிறது.
tales, பொய்சொல்லுகிறது, கோள்சொல்லுகிறது, கோள்மூட்டுகிறது.
out, வெளிவிட்டுப்பேசுகிறது, திறந்துசொல்லுகிறது, வாய்விட்டுச்சொல்லுகிறது.
Temerity, *s.* முண்டுத்தனம், யோசனையில்லாததன்மை, துணிகரம், முருட்டுத்தனம், முகமூஞ்சித்தெரியாத்தனம், பாராமை, எண்ணாமை.
Temper, *s.* 1. *due mixture of contrary qualities*, சத்துருமித்துருகலந்தசமம்.
2. *middle course*, நடுத்தரம், நடுவழி, மையப்பாடு, மத்திமப்போக்கு.
3. *constitution of body*, உடம்புக்கூறு, உடல்வாகு.
4. *constitutional frame of mind*, குணவாகு, குணப்போக்கு.
5. *disposition*, குணம், *as, a good* temper, நற்குணம், *a bad* temper, துர்க்குணம்.
6. *calmness, moderation*, சாதுவானகுணம், மிதமானகுணம்.
7. *passion*, கோபகுணம்.
of a metal, காய்ச்சல், துவையல், காய்த்துத்துவைத்தபக்குவம்.
pleasant, குளிர்ந்தமனம்.
Temper, *v. a.* ஒன்றையொன்றுதழுவிநிற்கும்படியாகக்கலக்குகிறது, பதமிடுகிறது, பக்குவமாக்

குகிறது, கலப்பாக்குகிறது, வசப்படுத்துகிற து, பதப்படுத்துகிறது. இளக்குகிறது, தணிக் கிறது.
mortar, சாந்துகுழைக்கிறது, சாந்துபிசைகி றது.
metal, துவைக்கிறது, காய்ச்சுகிறது.
to become tempered, பதப்படுகிறது, சீர்படு கிறது.

Temperament, *s.* குணம், தன்மை, சுபாவகுணம்.
of body, சரீரகுணம், சரீரவாகு, உடற்போங்கு, தேகக்கூறு.
a cool temperament, குளிர்ந்தகுணம்.

Temperance, *s.* மிதம், மட்டு, அடக்கமுடைமை, ஒறுப்பு.

Temperate, *adj.* அளவான, மட்டான, மிதமான, இச்சையடக்கமான.
region, மத்தியஉஷ்டணதேசம்.
zone, சமசீதளசமஉஷ்டணபூமி, மத்திமமான பூமி.

Temperateness, *s.* மட்டுக்குமிஞ்சாமை, மிதமா யிருக்குந்தன்மை, மத்திபம், மேனா, மருங்கு, மனவமைச்சல், அமர்ந்தமனம்.

Temperature, *s.* குணம், தன்மை, பதம், வாகு, தேசசீதளஉஷ்டணசமம்.

Tempest, *s.* பெருங்காற்று, புயல், பிசல், சூறைக் காற்று, சண்டமாருதம்.

Tempestuous, *adj.* பிசற்காற்றுள்ள, பிசலடிக்கி ற, கலகமான, கொந்தளிப்பான, கோஷ்டமுள்ள.
to be tempestuous, கொந்தளிக்கிறது, கோஷ் டிக்கிறது, அமளியாயிருக்கிறது.

Temple, *s.* தேவாலயம், கோவில், ஆலயம், நெறி, பொறி, நெற்றி, நெற்றிப்பொறி.
temple of a weaver's loom, விசைத்தடி, வி சைக்கொம்பு.

Temporal, *adj.* காலத்துக்குரிய, இம்மைக்கடுத்த, அநித்தியமான, லௌவுகீகத்துக்கடுத்த, ஞானச ம்பந்தமல்லாத, உலகத்துக்குரிய.

Temporally, *adv.* இம்மைக்குரித்தாய், உலோகா சாரமாய்.

Temporalty, *s.* உலகப்பொருள்; குருவுக்குக்கீழ் ப்பட்டசனங்கள், சபையின்சனங்கள்.

Temporary, *adj.* கொஞ்சகாலத்துக்குரிய.
to be temporary, நிலைமையில்லாத சீவனம்ப ண்ணுதல்.

Temporize, *v. n.* தாமதிக்கிறது, இழுக்கடிக்கிற து, காலத்துக்கேற்றபடி நடக்கிறது, காலத்துக் குத்தகுந்தவேஷம்போடுகிறது.

Temporizer, *s.* காலத்துக்குத்தக்கவேஷம்போடு வோன், காலாகோலன்.

Tempt, *v. a.* சோதிக்கிறது, எத்துகிறது, ஏவுகி றது, தூண்டுகிறது.

Temptation, *s.* சோதனை, எத்து, ஏமாற்றல்.

Tempter, *s.* சோதிக்கிறவன், சோதனைக்காரன், எத்தன், ஏமாற்றுகிறவன், பசாசு.

Temptingly, *adv.* சோதனையாய், எத்துதலாய்.

Ten, *adj.* பத்து, தசம்.
times, பத்துத்தரமாய், பத்துமுறையாய்.

Tenable, *adj.* நிற்கக்கூடிய, உறுதியான.

Tenacious, *adj.* விடாப்பிடியான, விட்டுக்கொடுக் கமனமில்லாத, இறுக்கமான, கெட்டியான.
as sticky, பிசுபிசுப்புள்ள.
persons, கற்கசக்காரர், சிக்கனவுக்காரர்.
to be tenacious, கற்கசம்பண்ணுதல், பிடித் துப்பார்க்குதல்.
of one's own dignity, கணிசம்பார்த்தல்.

Tenaciousness, *s.* பிசுனத்தனம், பிடிவாதம்.

Tenacity, *s.* சாதனை, விடாமை, பிடித்திழுக்குந் தன்மை, பிடிப்பு, விடாப்பிடி, பிசின்போலான தன்மை.

Tenant, *s.* குடிக்கூலிக்குஇருப்போன், குடிக்கூ லிக்குக்குடியிருக்கிறவன், வாரக்குடி, குத்தகைக் காரன், இந்தச்சொல் *land lord* (சொந்தக் காரன், காணியாக்ஷிக்காரன்) என்னுஞ்சொல்லு க்கு எதிர்பதம்.

Tenantable, *adj.* வாடகைக்குவிடத்தக்க, குடிக் கூலிக்கான.

Tenantless, *adj.* குடியில்லாத, வாடகையில்லா த, வாரமில்லாத.

Tenantry, *s.* வாரக்குடிகள், வாடகைக்குவாங்கி னவர்களின்சேர்க்கை.

Tend, *v. a.* காக்கிறது, குற்றேவல்செய்கிறது, வி சாரிக்கிறது, பராமரிக்கிறது, கூட்டப்போகிறது, சேர்ந்துநிற்கிறது.

Tend, *v. n.* நேரிடுகிறது, சாய்கிறது, சாருகிறது, ஒருகாரியத்தை நோக்கியிருக்கிறது, ஒருகருமத் தை முடிக்க நாடுகிறது.
to be liable to, வழியாகுதல், ஏதுவாகுதல்.

Tendance, *s.* காத்தல், வரவுபார்த்திருக்கை, எதிர்நோக்கியிருத்தல், பராமரிப்பு, விசாரணை.
Tendency, *s.* ஏது, உரியது, சாய்கை, சாருகை, போக்கு, நோக்கு.
